
கல்கி

ஸ்பீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



நீச்சல் குளத்து மஹாராஜா!

KALKI • 29.11.2009 • ரூ.10.00 • 96 பக்கங்கள்



வாழ வைக்கும் வாட்டர் ஸ்பெஷல்!

தமிழச்சி தங்கபாண்டியன்
திலகபாமா
வழக்கறிஞர். சுமதி
நடராஜ் ஐ.பி.எஸ்.
இயக்குநர் வஸந்த்

டாக்டர். ருத்ரன்
பாஸ்கர் சக்தி
கே. பாரதி
ரீஸ்வானா பானு
பாரதி சந்திரமௌலி

இவர்களுடன்... நீங்களும் பங்கேற்க...

கல்கி
+
பிரக்ஞா

இணைந்து நடத்தும்

மாறுவோம்; மாற்றுவோம்!

தேதி: **டிசம்பர் 6**

இடம்: யூத் ஹாஸ்டல் வளாகம்
இந்திரா நகர், சென்னை-600020
(இந்திரா நகர் வாட்டர் டேங்க் அருகே),
நேரம் : மாலை 4 மணி

கல்கி அடுத்த இதழ்...

எல்லாவற்றிலும்
எனக்குப் பிடித்ததையே
நீ தேர்ந்தெடுத்தாய்
உனக்குப் பிடித்ததையே
நான் தேர்ந்தெடுத்தேன்
அதனால்தான்
நட்பு நம்மைத்
தேர்ந்தெடுத்திருக்கிறது

- கவிஞர் அறிவுமதி



நீரிலலையும்










புகைப்படங்கள் :
நெய்வேலி செல்வம்



''வாழ்க்கைச் சக்கரம் சுழல்வதற்கு ஆதாரமான காற்றும் தண்ணீரும் வேகமாக மாசுபட்டு வருகின்றன. விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டிய காலகட்டத்தில் இருக்கிறோம். மனிதவாழ்வோடு இரண்டறக் கலந்துள்ள தண்ணீரை பல கோணங்களில் மனிதர்களோடே இணைத்துப் பதிவு செய்துள்ளேன். அளவுக்கு மீறினால் எதுவும் கசந்திடும். காற்று, நீர் உட்பட....'' என்கிற நெய்வேலி செல்வம் கடந்த 25 ஆண்டு காலமாக கேமராவோடு பயணித்து வருபவர். 'முழு உணர்வோடு, உண்மையான பிரதிபலிப்புடன், வாழ்வு எல்லையற்றது என்கிற புரிதலை, படம் பார்ப்பவரையும் ஆழமாக உணரச் செய்வதுதான் தலைசிறந்த புகைப் படத்தின் அம்சம்'- இது செல்வத்தின் கேமரா கோட்பாடு!

\- கதிர்பாரதி



நீரும்... நிழலும்...

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : **சீதா ரவி**

உதவி ஆசிரியர்கள் :
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்

தொலைபேசி : **044 - 4343 8888**
தொலைநகல் : **044 - 4343 8899**

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com


இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : **ரூ.500/-**
வெளிநாடு : **ரூ.3,800/-**

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

இதழில் வெளியாகும் விளம்பரங்களின்
உண்மைத் தன்மைக்கு
கல்கி நிர்வாகம் பொறுப்பல்ல.



தீபத்திற்கு எந்த எண்ணெய்விட்டால் என்ன பலன்





எண்ணெய் பலன்

நெய் : தீபத்துக்கு நெய்விடுவது மிகச் சிறப்பு. சகலவித செல்வச் சுகத்தையும் வீட்டில் நலனையும் தருகின்றது.

நல்ல எண்ணெய் : நல்ல எண்ணெய் விட்டு ஏற்றுவதால் எல்லா பீடைகளும் விலகி விடுகிறது.

விளக்கெண்ணெய் : தேவதா வசியம், புகழ்ஜீவன சீரகம், பந்து, சுகம், தாம்பத்திய சுகம் இவைகளை இது விருத்தி செய்கின்றது.

கடலை எண்ணெய் : இதில் தீபம் ஏற்றுவது மிகவும் தவறு. அந்த வீட்டில் நித்தியக் கடன், துக்கம், பயம், சோரநாசம், பீடை இவைகளே சேரும்.



திரியின் வகைகள்

பஞ்சு : இதில் திரியிடுவது மிகவும் நல்லது.

தாமரைத் தண்டு : இதை திரித்து ஏற்றுவது முன்வினை பாவத்தை போக்கும். செல்வம் நிலைத்து நிற்கும்.

வாழைத்தண்டு : இதை நூல் பாகமாகப் பக்குவப்படுத்தித் திரியிட, குழந்தைச் செல்வம் உண்டாகும். தெய்வக்குற்றம், குடும்பச் சாபம் முதலியவை நீங்கி, சாந்தி உண்டாகும்.

வெள்ளை எருக்கன் : இதன் பட்டையைத் திரியாகச் செய்து தீபம் போட, பெருத்த செல்வம் தரும். பேய் பிடித்தவர்களுக்கு அதன் தொலைலை தீரும்.

புது மஞ்சள் சேலைத்துண்டு : இதிலிருந்து திரி செய்து ஏற்றினால் அம்மன் அருள் கிட்டி வியாதிகள் குணமாகும். காற்று சேஷ்டை நீங்கும்.

சிகப்புகலர் சேலைத்துண்டு : திருமணத் தடை, மலட்டுத்தன்மை, பைசாச செய்வினை, தோஷங்கள் விலகிவிடும்.

புது வெள்ளை வஸ்திரம் : இதில் பன்னீர்விட்டு காய வைத்து திரியாகப் பயன்படுத்த உத்தம பலனைக் காணலாம்.

எண்ணெய் கலந்துவிட்டு ஏற்றுவதால் ஏற்படும் பலன்

வேப்பெண்ணை, நெய், இலுப்பை எண்ணை மூன்றும் கலந்து தீபமிடுவதால் செல்வம் உண்டாகும். இது குலதெய்வத்திற்கும் உகந்தது.

நெய், விளக்கெண்ணை, வேப்பம் எண்ணை, இலுப்பை எண்ணை, தேங்காய் எண்ணை இந்த ஐந்தும் கலந்து ஏற்றி எவன் ஒருவன் ஒரு மண்டலம் (45 நாட்கள்) பூஜை செய்கிறானோ அவனுக்கு தேவியின் அருள், மந்திர சக்தி உண்டாகும்.




தீபத்திற்கு எந்த எண்ணெய் விட்டால் என்ன பலன்



காலை 3 முதல் 5க்குள் தீபமேற்றுவது வீட்டில் சர்வ மங்கள யோகத்தை உண்டாக்கும். வேலை வேண்டுவோர், நல்ல கணவன் வேண்டுவோர் குடும்பசுகம், புத்திர சுகம் வேண்டுவோர், சாயக்கால வேளை தீபம் மகாலட்சுமியை வழிபட அப்பலன் அடையலாம்.

இறைவனுக்கு உகந்த எண்ணெய்

மகாலட்சுமி	- நெய்	தேவி	- ஐந்து வகை எண்ணைகளும்
நாராயணன்	- நல்லெண்ணை		
கணபதி	- தேங்காய் எண்ணை	சர்வ தேவதைகள்	- நல்லெண்ணை
ருத்ராதி தேவதை	- இலுப்பை எண்ணை		




முகம் ஏற்றுவதின் பலன்

ஒரு முகம் ஏற்றுவது	: மத்திம பலன்
இரண்டு முகம் ஏற்றுவது	: குடும்ப ஒற்றுமையை பெருக்கும்
மூன்று முகம் ஏற்றுவது	: புத்திர சுகம் தரும்
நான்கு முகம் ஏற்றுவது	: பசு, பூமி இவற்றைத் தரும்
ஐந்து முகம் ஏற்றுவது	: செல்வத்தைப் பெருக்கும்

மண்ணால் செய்யப்பட்ட அகல் அல்லது வெள்ளி பஞ்சலோகத்தால் செய்யப்பட்ட விளக்குகள் பூஜைக்கு மிகவும் உகந்தது.

கார்த்திகை தீபத்திற்கான பட்சணங்கள் கிடைக்கும்.



பூஜை முடிந்தவுடன் கிராண்ட் ஸ்வீட்ஸ் வாங்கி நல்லோருக்கு விநியோகம் செய்யவும். கல்யாண வைபவங்களுக்கு : சீர் முறுக்கு, சீர்முள்ளுத் தேன்குழல், சீர் அதிரசம், தேன்குழல், அப்பம், திரட்டுப்பால், பருப்புத் தேங்காய் வகைகள் முதலியவை செய்து தரப்படும்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு,
காந்தி நகர் அடையாறு, சென்னை - 600 020.
போன் : 2491 5662, 2491 4213
1/1, AE பிளாக், 11வது பிரதான சாலை,
6வது தெரு, அண்ணா நகர் மேற்கு,
சென்னை - 40. போன் : 42634422, 42634433

ஈரமான அனுபவம்

மஹதி (பாடகி):

சின்னக் குழந்தையாக இருந்தபோது ஷவரைத் திறந்து மணிக்கணக்கில் நனைவது எனக்குப் பிடித்தமான ஒன்று. என் ஹனிமூனுக்கு மலேசியா அருகிலுள்ள லங்காவி தீவுக்குச் சென்றிருந்தோம். அந்தத் தீவில் படகு சவாரி மிகப் பிரசித்தம். படகு சவாரி என்றால் சாதாரண சவாரி இல்லை. படகுடன் சேர்ந்து சிறிய பாராசூட் இருக்கும். படகு கிளம்ப ஆரம்பித்தவுடன் நாங்கள் பிடித்திருக்கும் பாராசூட் விரிந்து அந்தரத்துக்குச் சென்று விடும். நடுக்கடல் வரை பறந்தபடியே சென்றோம். அங்கே ரொம்ப நேரத்துக்கு மனிதர்கள் தலையே தெரியவில்லை. பிறகுதான் இன்னொரு படகு கண்ணுக்குத் தெரிந்தது. 'அப்பாடா' என்று மூச்சு விட்டோம். த்ரில்லான தண்ணீர் அனுபவம் அது.



கச்சேரிக்கு



பரணி (நடிகர்):

அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு. அப்படித்தான் சுனாமி, வெள்ளம் போன்ற பெருந் தண்ணீர் நிகழ்வுகள் வாழ்க்கையைப் புரட்டிப்போட்டு விடுகின்றன. மழை ரசிக்கக் கூடிய அம்சமாக இருந்தாலும், சிறிய மழையைக் கூடத் தாங்காத குண்டும் குழியுமான நம்ம ஊர் சாலைகளை நினைத்தால் பயமாகத்தான் உள்ளது.

மாணிக்கவிநாயகம் (பாடகர்):

இலங்கையின் நுவரெலியாவுக்கு கச்சேரிக்காகப் போயிருந்தோம். மலையகத் தமிழர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். நுவரெலியா நமது ஊட்டியைப் போலத்தான். கச்சேரி ஆரம்பிப்பதற்கு முன்பே மழை ஆரம்பித்துவிட்டது. திறந்த வெளி மைதானத்தில் கச்சேரி நடந்ததால் கூட்டம் வராது என்று நினைத்தேன். ஆனால், கச்சேரி தொடங்கி சிறிது நேரத்திலேயே சுமார் பதினைந்தாயிரம் பேர் வந்துவிட்டார்கள். 'கன்னத்தில் முத்தமிட்டால்' படத்தில் வரும் 'விடைகொடு எங்கள் நாடே' பாடலைப் பாடி முடித்தேன். திடீரென ஒரு மூதாட்டி ஈரம் சொட்ட வந்து, 'இத்தனை நாள் எங்கப்பா போயிருந்த' என்று பரிதவிப்புடனும் வாஞ்சையுடனும் கேட்டார். அந்த மூதாட்டியின் உடம்பிலிருந்த ஈரத்தில் அவர் மனத்தின் ஈரத்தை உணர முடிந்தது!





வந்த மழை!



சுஜிதா (நடிகை):

நானும் என் கணவரும் சமீபத்தில் அமெரிக்காவில் உள்ள நயாகரா நீர்வீழ்ச்சிக்குச் சென்றிருந்தோம். நீர்வீழ்ச்சியை சுற்றுலாப் பயணிகள் நன்றாகக் கண்டுகளிக்க 'Made of Heaven boat riding' எனும் படகு சவாரி நடத்துகிறார்கள். நாங்களும் அதில் கலந்து கொண்டு படகில் நீர்வீழ்ச்சிக்கு மிக அருகில் சென்றபோது அதன் பிரமாண்டமான உயரத்தைப் பார்த்து நான் அடைந்த பரவசத்துக்கு அளவே இல்லை. என்னையும் அறியாமல் வாய்விட்டுக் கத்தி ஆர்ப்பரித்தேன். Heaven boat riding உண்மையிலேயே சொர்க்கம்தான்.

- ராகவ்குமார்

* டி.கே.எஸ்.



தி.மு.க. திட்டம்!

எதற்கும் தயார்!



* ஈ.வி.கே.எஸ்.

'நடக்கும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரின்போது எழுப்பப்படும் பிரச்னைகளின் காரணமாக தி.மு.க.வும் காங்கிரஸும் திசை மாறிப் பயணம் செய்யுமா?' தன்னிச்சையான கரும்புவிலை நிர்ணயம், முல்லை பெரியாறு பிரச்னை ஆகியவற்றை பாராளுமன்றத்தில் கிளற தி.மு.க. முடிவு செய்துள்ளது. உச்சகட்ட விவாதத்தின்போது எதிர்க்கட்சிகளுடன் தி.மு.க. கைகோக்க வாய்ப்புண்டு. இப்படிப்பட்ட செயல்பாடுகள், காங்கிரஸை எரிச்சல்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. இந்தத் திட்டத்தோடு தி.மு.க. இறங்கக் காரணம் '2011ல் சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் தங்களை விட்டுப் பிரிந்து போய் விடும்' எனக் கருதுவதுதான். மேலும், ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் காங்கிரஸ் தங்களைக் கைவிட்டு விடுமெனக் கருதுகிறது தி.மு.க. எனவே இரு கட்சிகளும் காய்களை நகர்த்துகின்றன.

''வர்த்தகத்தில் ஆன்-லைனை மத்திய அரசு அனுமதித்ததால்தான் விலைவாசி உயர்ந்துள்ளது. எனவே, மேற்சொன்ன பிரச்னைகளோடு விலைவாசி பிரச்னையையும் கிளப்புவோம். இதற்கு எதிர்க்கட்சிகளோடு சேர்ந்து செயல்பட வேண்டும் என்பது அவசியம் இல்லை'' என்கிறார் தி.மு.க. பாராளுமன்ற உறுப்பினர் டி.கே.எஸ்.இளங்கோவன்.

''பிரச்னைக்குரிய விவகாரங்களில்கூட கூட்டணிக் கட்சிகளுடன் கலைஞரின் செயல்பாடு என்பது கடிதம், நேர்முகச் சந்திப்பு என்ற வகையில்தானே இருக்கும்? இதில் கொஞ்சம் மாறுபட்டுத் தெரிகிறதே?''

''பாராளுமன்றக் கூட்டத் தொடர் தொடங்குமுன் சபாநாயகர் தலைமையில் நடந்த சர்வகட்சி தலைவர்கள் கூட்டத்திலும் கொறடாக்கள் கூட்டத்திலும், டி.ஆர். பாலுவும் நானும், 'இதுபோன்ற பிரச்னைகளை எழுப்புவோம்' என மிகத் தெளிவாகவே சொல்லியிருக்கிறோம். இது தலைவருக்கும் தெரியும். மற்றபடி காங்கிரஸுடனான இணக்கமான உறவு தொடர்கிறது.''


''ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் காங்கிரஸ் உங்களைக் கைவிட்டுவிடும் என்ற எண்ணத்தில்தான் இப்படி செயல்படுகிறீர்களா?''

''நோ...நோ... ஸ்பெக்ட்ரம் தொடர்பாக எடுத்த முடிவுகள் அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பு'' என்கிறார் டி.கே.எஸ்.இளங்கோவன்.

பாராளுமன்றத்தில் தி.மு.க இப்படி அதிரடியாகச் செயல்படப் போவது குறித்து ஈ.வி.கே.எஸ்.இளங்கோவனிடம் கேட்டோம். ''இது ஜனநாயகத்தில் வரவேற்கப்பட வேண்டிய விஷயம்தானே! இதை முன்னுதாரணமாக எடுத்துக் கொண்டு காங்கிரஸும் தமிழக சட்டமன்றத்தில் பிரச்னைகளைக் கிளப்பும்; கிளப்ப வேண்டும்'' என்கிறார்!


- ப்ரியன்

உயிர்ப்பின் ஆதாரமே நீர்தான் என்பதை அறிந்திருந்த காரணத்தால், நீருக்குப் புனிதம் கற்பித்து, மரியாதைப் படுத்தியது நம் மரபு! 'தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே' என்ற வழக்கு மொழியின் அடிப்படை இதுதான். அதன் அடையாளமாகவே, ஆலயங்கள் அமைக்கும்போதே அதையொட்டி திருக்குளங்களும் அமைக்கப்பட்டன. அப்படி குளம் அமைக்கும் போது, 'குளத்தின் ஒரு பக்கக் கரையை படியாக அமைக்காமல் - சரிவாக, ஆடு, மாடுகள் இறங்கி தண்ணீர் குடிக்கும் விதமாக அமைக்க பொரு ளுதவி செய்தாள் ஒரு பெண்' என்கிறது ஒரு கல்



ஹோலி வாட்டர்

இவையும் கங்கைதான்!



வெட்டுச் செய்தி! குளங்களின் மூலம் நீராதாரத்தைப் பாதுகாப்பதிலும், தல விருட்சங்கள், நந்தவனங்களைப் பரா



பொற்றாமரைக் குளம்
-மதுரை

|| ஆர். ஸ்ரீநிவாச ராகவன் ||











மரித்தல் இவற்றின் மூலம் இயற்கையைப் பராமரிப்பதிலும் முன்னோர் கொண்டிருந்த அக்கறை கவனிக்கத் தகுந்தது.

பொதுவாக, குளத்தில் நீர் இருக்கும்போது, நிலத்தடி நீரும் பாதுகாக்கப்படுகிறது; கிணறுகளில் தண்ணீர் கிடைக்கிறது. 'குளம்தொட்டு வளம் பெருக்கி' என்பது புரிந்ததன் வெளிப்பாடு இது! ராஜேந்திர சோழன் வெட்டிய சோழ கங்கம் என்ற ஏரியும், வீரநாராயணப் பேரேரி எனப்பட்ட இன்றைய வீராணம் ஏரியும் வரலாறு காட்டும் சான்றுகள்!

இவையல்லாமல், ஆலயத்தின் தொடர்புடைய குளங்

கள், திருவிழா நோக்கிலும் பயன் படுத்தப்பட்டன. தேர்களிலும், சிம்மம், யானை, அன்னம், கிளி போன்ற வாகனங்களிலும் உலா வரும் பரமனை, தெப்பத்தில் அமர்த்தியும் ஆனந்தப்பட்டது மனம்! தத்துவார்த்த ரீதியில், 'மனம் இலகுவானால், வாழ்க்கை





திருப்புன்கூர் ஆலயத்தின் திருக்குளத்தை பக்தனுக்காக விநாயகரே வெட்டினார்

எளிதாகப் போகும்; துன்பங்களில் அமிழா மல் கரை சேரும்' என்கிற உட்பொருளை உணர்த்துவது தெப்பம்! அப்படி இலகுவான மனத்தில் பரமனின் சந்நிதி அமையும் என்பது சூட்சுமம்! இதன் குறியீடாகவே தெப்போற்சவம் நடைபெறுகிறது.

'தெப்பம்' என்ற சொல்லுக்கு மிதவை என்று பொருள் கொள்ளலாம். திருவிழா நோக்கில் 'இறைவன் பவனி வருகின்ற அலங்கரிக்கப்பட்ட மிதவை' தெப்பம் என்று பெயர் கொள்கிறது.


தமிழகத்தில் பல்வேறு ஆலயங்களில் இந்தத் தெப்போற்சவம் மிக விசேஷம். அதனாலேயே, அந்தக் குளங்கள் தெப்பக் குளங்கள் என்றும் பெயர் கொண்டன.

மதுரையில் உள்ள வண்டியூர் மாரியம் மன் தெப்பக்குளம், திருவாரூரில் உள்ள கமலாலயத் திருக்குளம், மன்னார்குடியில் உள்ள ஹரித்ரா நதி என்னும் திருக்குளம், கும்பகோணத்தில் உள்ள மகாமகத் திருக் குளம், நல்லூரில் உள்ள சப்தசாகரம் என் னும் திருக்குளம்... இப்படி பல்வேறு தலங்களிலும் புகழ் மிக்க திருக்குளங் கள்.

இந்தக் குளங்களில் தெப்போற்சவம் நடைபெறுவதை பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கண்டுகளிக்கிறார்கள். இடைக் காலத்தில் கவனிக்கப்படாதிருந்த கோயில் திருக்குளங்கள், இப்போது மீண்டும் சீர் பெற ஆரம்பித்திருக்கின்றன.

திருக்குளம், புஷ்கரிணி என்று சொல்லி அவற்றை இறைவன் பெயரால் நாம் பாது காக்கிறோம். இறைவனுக்காகவும்; நமக் காகவும்...

பனி படர்ந்த இமயத்தில் இருந்து புறப்பட்டு, செல்லுமிடமெல்லாம் ஜீவ களை ததும்பச் செய்கிறாள் கங்கை.



'அறிந்தும் அறியாமலும் செய்த பாவங்களை எண்ணிக் கசிந்து நீராடுபவர்களின் பாவங்களைப் போக்குபவள் கங்கை!' என்கிறது புராணம். அந்தக் கங்கையே தேடிவந்து



நீராடிய பெருமையைப் பெற்ற தலங்கள் சில உண்டு.

கிராமிய வழக்கில், 'கங்கை' என்பது நீர்நிலைகளைக் குறிக்கும் சொல். கங்கை நதிக்கு மட்டும் உரிய சொல் அல்ல!

'எங்கே குளித்தாலும், கங்கையை நினைத்து நீராடுபவன், கங்கையில் நீராடிய பலனை அடைகிறான்' என்கிறது விஷ்ணு தர்மோத்திரம். அதனால், குளங்கள் உட்பட நீர்நிலைகள் எல்லாமே கங்கையின் அம்சம் தான்!

வழக்கு மொழியில் ஒரு செயலைச் செய்யாமல் விட்டுவிட்டால், 'அதை விட என்ன, வெட்டி முறிச்சியா?' என்பதுண்டு. குனிந்து குளம் வெட்டுபவர்கள், சற்று நேரத்துக்குப் பின் நிமிர்ந்து உடலை முறித்துக் கொள்வார்கள். அதைச் சொல்லி, குளம் வெட்டுவது எவ்வளவு முக்கியமான பணி என்று நினைவூட்டுகிறது இந்த வழக்கு மொழி.

திருப்புன்கூரில் உள்ள திருக்குளத்தை, தன்னுடைய பக்தனின் வேண்டுகோளை ஏற்று விநாயகப் பெருமானே வெட்டினார் என்கிறது தலபுராணம்.

குளங்களையும், ஆலயங்களையும் ஒன்றுபடுத்தியதன் மூலம், உடல் ஆரோக்கியம், மன ஆரோக்கியம் இரண்டுக்கும் அடித்தளம் அமைத்தது நம் மரபு! புறத் தூய்மையும், அகத் தூய்மையும் மனிதனுக்கு அவசியம் என்பதை வார்த்தையாகச் சொல்லாமல், உணர்த்திக் கொண்டிருக்கின்றன திருக்குளங்கள்!

அவற்றின் நடுவே காணப்படுகிற நீராழி மண்டபம், 'சுற்றிலும் இருக்கும் தண்ணீர் அசைந்தாலும் நான் அசைய மாட்டேன்' என்கிறதா? அல்லது 'பிரச்னைகள் அலைக்கழிக்கும்போது உன் மனமும் இப்படி கலங்காமல் இருக்க வேண்டும்' என்கிறதா?

அப்படியும் இருக்கலாம் என்றுதான் தோன்றுகிறது. அடுத்தமுறை திருக்குளங்களையும், நீராழி மண்டபங்களையும் காணும்போது உற்றுக் கவனியுங்கள். உங்களுக்கு வேறு ஏதாவது புரிய வரலாம்! ○



கல்கி



2009 நவம்பர் 29
விரோதி கார்த்திகை 13
மலர் : 68
இதழ் : 18

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்*

பாலுக்கும் காவல்; பூனைக்கும் தோழன்!

தமிழக முதல்வர் திடீரென்று வெளியிட்டுள்ள அறிக்கையில், தாம் மௌனமாக அழுவதாகத் தெரிவித்திருக்கிறார்! அந்த அழுகையின் ஒலி யாருக்கும் கேட்காது என்றும், அதன் வலி யாருக்கும் புரியாது என்றும் கூடுதலாக அதே அறிக்கையில் அவர் சொல்லியிருப்பது எதன்பொருட்டு என்பது புதிராகவே இருக்கிறது!

விடுதலைப் புலி தளபதிகள் சிலருக்கு ஆதரவு அளித்ததுடன் விவேகத்தைக் கடைப்பிடிக்கும்படி அறிவுறுத்தியதாகவும் ஒப்புக் கொண்டிருக்கிறார் கருணாநிதி. அந்த அறிவுரையை அவர்கள் கேட்டிருந்தால், இன்று நிலைமையே வேறாக இருந்திருக்கும். ஆனால், அவர்கள் தேர்தலைப் புறக்கணிக்குமாறு இலங்கைத் தமிழர்களை வற்புறுத்தினார்கள்; அதன் பின்விளைவுகள் சோகமயமாகிவிட்டன என்பதாகவும் கனத்த இதயத்துடன் முதல்வர் தமது அறிக்கையில் கூறுகிறார். இலங்கை அதிபராக ரணில் விக்ரமசிங்கே பொறுப்பேற்கும் வகையில் தமிழர்கள் தேர்தலில் வாக்களித்திருந்தால், சமீப சரித்திரம் வேறு விதமாக எழுதப்பட்டிருக்கும் என்பது அவர் கருத்து.

விடுதலைப் புலிகளோ அவர்களுடைய தலைவரோ யாருடைய அறிவுரையைத்தான் கேட்டார்கள்?! தமிழர் நலன் என்பதைக் காட்டிலும் அதிகார வேட்கையே அவர்களது முடிவுகளுக்கும் செயல்பாடுகளுக்கும் ஆதாரமாக இருந்தது; பொதுநலன் என்பதைக் காட்டிலும் பழிவாங்கும் வெறிதான் அவர்களைக் கண்மூடித்தனமாக இயங்கச் செய்தது. இதனால் விளைந்த உயிர்ச்சேதம், பொருள் சேதம் இரண்டுமே சொல்லி மாளாதவைதான்.





கருணாநிதி கூறுவதுபோல், புலிகள் அவருடைய அறிவுரையைக் கேட்டு நடந்து, தேர்தலில் இலங்கைத் தமிழர்கள் வோட்டுப் போட்டு, ரணில் விக்ரமசிங்கே அதிபராகியிருந்தாலும், பேச்சு வார்த்தைக்கு அவர் அழைப்பு விடுத்து அது நடந்திருந்தாலும், விடுதலைப்புலிகள் அந்த இடைவெளியைப் பயன்படுத்தி தங்களை மேலும் பலப்படுத்திக் கொண்டு திரும்பவும் இலங்கை அரசையும் ராணுவத்தையும் தாக்கத்தான் முற்பட்டிருப்பார்கள். ஆயுதம் துறந்து ஜனநாயக ரீதியான தீர்வுக்கு அவர்கள் ஒத்துழைத்திருப்பார்கள் என்று நம்புவதற்கு எந்த முகாந்திரமோ முன் நிகழ்வு ஆதாரமோ இல்லை.

இலங்கைத் தமிழர்களின் மறுக்கப்பட்ட உரிமைகளைப் பெற்றுத் தருவதற்கு, இந்தியாவில் வேறு யாரைக் காட்டிலும் அதிகமாகச் செய்யக்கூடிய நிலையில் இருப்பவர் கருணாநிதி தான். அவர் மட்டும் மத்திய அரசுடன் அமர்ந்து பேசி, இலங்கை அரசுக்கு எவ்வாறு அழுத்தம் கொடுக்கலாம் என்று எடுத்துச் சொல்லி செயல்திட்டம் வகுப்பாரேயானால், மத்திய அரசு அதை ஏற்காமலிருக்க முடியாது. அப்படியே மத்திய அரசு சுணக்கம் காட்டினாலும், கூட்டணிக் கட்சித் தலைவர் என்கிற முறையில் கருணாநிதி பிரதமரை நிர்ப்பந்திக்க முடியும். தமது கட்சி எம்.பி.க்களுக்கான அமைச்சக இலாகாக்களைப் பெறுவதில் தி.மு.க. தலைவர் வெற்றி கண்டது சமீபத்திய சரித்திரம். இலங்கைத் தமிழர்கள் உரிமைகளுக்காக அழுத்தம் கொடுத்து அவர் புதிய வரலாறு படைக்கலாமே!

பிறகு ஏன் ஈழத்தமிழர்களுக்கான உரிமைகள் குறித்து சிந்தித்துச் செயல்படாமல், நடந்து முடிந்த கதைகளை நினைவுகூர்ந்து 'சென்டிமெண்ட்' பேச வேண்டும்? மத்திய அரசைப் பகைத்துக் கொள்ள மனமில்லாமல், மக்களை உணர்ச்சிகரமான வார்த்தைகள் மூலம் கவர்ந்து அனுதாபம் பெறும் முயற்சியாகவே இது தோன்றுகிறது! ○


தீபு - கோபு
ஸாரி... எங்க டீமுக்கு வேற ஷெட்யூல் இருக்கு... சரி ஏதாச்சும் பண்றேன்.
ஹாய் தீபு... என்ன திடீர் விஸிட்?
பிஸியாதான் இருந்தேன்...
...நீ அடிக்கடி கூப் பிடறியேன்னு வந்தேன்.
நான் மட்டும் வெட்டி யாவா இருக்கேன்...?
ஆனா உருப்படியா ஏதாச்கும் செய்யணும் கோபு
இப்போ நான் என்ன செய்யணும்னு சொல்றே...?
உங்க காலனி சில்ட்ரன்ஸ் பார்க்ல எவ்வளவு குப்பை இருக்கு... நீ அதுக்கு என்ன செஞ்சிருக்க?
நாளைக்கு வந்து பாரு... எப்படியிருக்குனு...
என்ன சார்... குப்பை எல்லாம் கிளீனாயிடுச்சா... ஓ.கே.... இட்ஸ் அவர் ப்ளெஷர்!
தீபு எங்களை இவ்வளவு மோட்டிவேட் செஞ்சுட்டானே... ஃபர்ஸ்ட் தேங்க்ஸ் சொல்லணும்!
கருத்து: கார்த்தி படம்: கதிர்

ஸ்ரீ டிராவல்ஸ்,

194, இரண்டாவது மாடி, அண்ணா சாலை (ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி எதிரில்),
ஆயிரம் விளக்கு, சென்னை - 600 006. போன் : 65345081/82
டெலிஃபேக்ஸ் : 044-28516799 ஈமெயில் : sritrave@gmail.com

முழு ராஜஸ்தான் சுற்றுலா : புறப்படும் தேதி : 15.01.2010; 11.02.2010
பயணத் தொகை : **ரூ.9,900/-** நாட்கள் : **9 நாட்கள்**

பஞ்ச துவாரகை மற்றும் ராஜஸ்தான் சுற்றுலா : புறப்படும் தேதி : 06.02.2010; 06.03.2010
பயணத்தொகை : **ரூ.13,500/-** நாட்கள் : **15 நாட்கள்**

முக்திநாத் தரிசனம் : சென்னை, அலகாபாத், சித்ரகூடம், நைமிசாரண்யம், அயோத்தியா, லும்பினி, போக்ரா, முக்திநாத், காத்மண்டு, வாரனாசி, சென்னை. பயணத் தொகை : **ரூ.18,500/- + டிக்கெட்.** புறப்படும் தேதி : 18.03.2010; 19.04.2010 நாட்கள் : **15 நாட்கள்**

பஞ்சதுவாரகை சுற்றுலா : பயணத் தொகை : ரூ.6,500/- + டிக்கெட்; நாட்கள் : 9 நாட்கள்

முக்திநாத் தரிசனம் (ரயில் மூலம்) : பயணத் தொகை : ரூ.13,000/- + ரயில் டிக்கெட்.
நாட்கள் : 11 நாட்கள்

முக்திநாத் தரிசனம் (விமானம் மூலம்) : பயணத் தொகை : ரூ.13,000/- + விமான டிக்கெட்.
நாட்கள் : 6 நாட்கள்

இலங்கை சுற்றுலா : கதிர்காமம் கொழும்பு, திரிகோணமலை, நுவரேலியா, கண்டி கொழும்பு.
புறப்படும் தேதி : 15.01.2010; 11.02.2010

அந்தமான் சுற்றுலா : புறப்படும் தேதி : 15.01.2010.
பயணத் தொகை : **ரூ.7,500 + விமான டிக்கெட்.** நாட்கள் : **5 நாட்கள்**



உ

ஸ்ரீ ஐயனார் துணை

ஸ்ரீமதி ஸரோஜா வைத்யநாத ஐயர்



"பரம்பரை ஜோதிடர்"

(50 வருட பாரம்பரியம்)

கைரேகை, ஜாதகம், நியூமராலஜி, ஸாமுத்ரிகா லக்ஷணம், வாஸ்து,

(ஐயனார் உபாஸகர், ஸங்கீத உபன்யாஸகர், ஹரிகதா,

ரங்கோலிக் கலைஞர், தொலைக்காட்சி புகழ் ஜோதிடர், எழுத்தாளர்)

38/28, உமாபதித் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 33
(அயோத்யா மண்டபம் அருகில், ஷோபனா கல்யாண மண்டபம் எதிர் தெரு)

போன் : 044-2483 0687, 2372 3256, 94446 84006

வாட்டர் டூரிஸம்

இசைக்கு ஆடும் நீரூற்று!



நீரின்றி உலகம் மட்டுமல்ல, டூரும் அமையாது. நீரின் தாய்மையால் சுற்றுலாத்தளமாக அவதரித்திருக்கும் சில இடங்கள் இதோ...

திற்பரப்பு அருவி

குற்றாலத்துக்கு இணையாகச் சுகமளிக்கும் இன்னோர் அருவி தமிழ்நாட்டின் தென்கோடியில் இருக்கும் திற்பரப்பு. திக்குகள் எட்டிலிருந்தும் பரவலாகத் தண்ணீர் விழுவதால் திற்பரப்பாம்.

நாகர்கோவிலில் இருந்து நாற்பது கிலோமீட்டர். அருவியை நோக்கிச் செல்லும் பயணமே, பரவச அனுபவம். ஏற்ற இறக்கங்கள் கொண்ட சாலைகள். பாதையின் இரண்டு பக்கமும் நெடு நெடுவென வளர்ந்து நிற்கும்



|| பவேஷ்வரன் ||

ரப்பர் மரங்கள். ஆங்காங்கே சின்னதும் அதை விடச் சின்னதுமான ஆறுகள். சிலுசிலுவென வீசும் காற்று... அடடா...

ஹோவென்ற ஓசை கேட்கிறதா... நீங்கள் திற்பரப்பு அருவியை நெருங்கி விட்டீர்கள். ஒவ்வொரு ஸீஸனுக்கும் வெவ்வேறு வேகத்தில் அருவியில் இருந்து நீர் கொட்டும். மழை நாட்கள் என்றால் ஒரு வேகம். கோடை நாட்கள் என்றால் ஒரு வேகம்.திருவாங்கூர் மன்னர்களுக்கு மிகவும் பிடித்தமான அருவி. எனவே நீர் கொட்டுவதை ஒய்யாரமாக அமர்ந்து கொண்டு ரசிப்பதற்கு வசதியாக கல் மண்டபத்தைக் கட்டி வைத்திருக்கிறார்கள். திகட்டத் திகட்ட அருவியில் குளித்து முடித்தவர்கள் அருவிக்கு மேலே ஓடிக் கொண்டிருக்கும் கோதையாற்றில் படகுப் பயணம் செய்யலாம். அந்த ஆற்றை ரசிப்பதற்கு வசதியாகவும் ஓர் கல் மண்டபம் இருக்கிறது.

புஷ்கர் ஏரி

ஹாட்டஸ்ட் ராஜஸ்தானின் குளுகுளு பிரதேசம் புஷ்கர் ஏரி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் செயற்கை முறையில் வடிவமைக்கப்பட்ட இந்த ஏரி, அஜ்மீர் மாவட்டத்தில் இருக்கிறது. நவம்பர் மாதத்தின் பௌர்ணமியில், இந்த ஏரியின் தண்ணீரைத் தலையில் தெளித்துக்கொண்டால் மோட்சம் கிட்டுமாம். ஆக, இந்துக்களுக்குப் புனித இடம்; இயற்கை நேசர்களுக்கு அற்புதமான பொழுதுபோக்குத் தளம்.

நவம்பர் மாதத்தில் சீஸன் தொடங்கும் இங்கே, ஒட்டகக் கண்காட்சி வெகு பிரசித்தம். வண்ண வண்ண ஆடைகளோடு ஒய்யாரமாக ஒட்டகங்கள் நடந்து வருவதை ரசிக்கலாம்.

பழங்குடி மக்களும் பாரம்பரிய நடனங்கள் ஆடுவார்கள்; பாடுவார்கள். புஷ்கர் ஏரியில் கரையில் ராஜா மான் சிங்கால் கட்டப்பட்ட மான் மஹால் என்ற அரண்



ஹாட்டஸ்ட் ராஜஸ்தானின் குளுகுளு ப்ளேஸ்!

மனை தற்போது சுற்றுலாப் பயணிகள் தங்கும் உயர்தர விடுதி.

ஜுஹு கடற்கரை

எப்போதும் அரசியல் அனலைச் சகித்துக் கொண்டிருக்கும் மராட்டிய மக்களுக்கு இதமான குளிர்காற்றை வழங்குகிறது இந்த ஜுஹு கடற்கரை. மும்பை நகரில் இருந்து வெறும் பதினெட்டே கிலோ மீட்டர்.

நீச்சல், குதிரை சவாரி, கழுதைச் சவாரி, கிரிக்கெட், பொம்மை விற்பனை, உண வகங்கள், தங்கும் விடுதிகள்... என்று எப்போதுமே கலகலப்பாக இருக்கும் பிராந்தியம்.

ரெண்டு பேர், ஒரு பந்து, நான்கு ஸ்டம்புகள் இருந்தால் போதும். உடனடியாக இங்கே ஒரு கிரிக்கெட் மேட்சை ஆரம்பித்துவிடலாம். இயற்கை எழில் கொஞ்சும் இந்தப் பகுதி இடம்பெறாத இந்திப்படமே இல்லை. பேல் பூரி, பானி பூரி சகிதம் ஜுஹுவை ரசித்துவிட்டு வரலாம்!

கிருஷ்ணராஜ சாகர் அணை

மயக்கும் மைசூரில் இருக்கிறது கிருஷ்ணராஜ சாகர் அணை. சுருக்கமாக, கே.ஆர்.எஸ். அணை. 8600 அடி நீளம்; 130 அடி ஆழம். மைசூரையும் பெங்களூருவையும் இணைக்கும் இந்த அணை கர்நாடக மாநிலத்தின் மிக முக்கிய சுற்றுலாத்தலம். விஸ்வேஸ்வரய்யா என்ற மூளைக்காரப் பொறியாளரின் கைவண்ணத்தில் உருவான இந்த அணைக்கு, மைசூர் மன்னர் கிருஷ்ணராஜ உடை








யாரின் பெயர் வைக்கப்பட்டுள்ளது. அணைக்கு நெருக்கமாக இருக்கும் பிருந் தாவன் தோட்டத்தின் அழகு அம்சங்களை யும் பார்த்து முடிப்பதற்கே ஒருநாள் தேவை. இரவு நேரத்தில் ரசித்து அனுப விக்க டான்சிங் நீரூற்று. இசைக்கு ஏற்ற வகையில் நடனமாடும் அந்த நீரூற்றுக்கு ரசிகர்கள் மிக அதிகம்.

தரங்கம்பாடி

தரங்கம்பாடி என்றால், அலைகளின் இன்னிசைக் கச்சேரி என்று பொருளாம். கிழக்குக் கடற்கரையில் நாகைக்கு அருகே இருக்கும் சுற்றுலாத் தலம். டச்சுக்காரர்கள் இந்தியா வந்து முதன்முதலில் கோட்டை கட்டிக் குடியேறியது இங்கேதான் என்ற படி, கம்பீரம் குறையாத கிழ சிங்கமாக நிமிர்ந்து நிற்கிறது டேனிஷ் கோட்டை. இது பதினாறாம் நூற்றாண்டு வரலாறு. எனினும் 12ம் நூற்றாண்டில் தரங்கம்பாடி, சடங்கன்பாடியாக அழைக்கப்பட்ட காலத் தில், அதன் ஒரே அடையாளம் மாசில்லா நாதர் கோயில்தான். குலோத்துங்க சோழன் காலத்தில் கட்டப்பட்டது. அரை மணி நேரப் பயண தூரத்தில் இருக்கும் பூம் புகாரைக் கடல் சூழ்ந்தபோது மாசில்லா நாதர் கோயில் கர்ப்பகிரகம் வரை கடல் எட்டிப் பார்த்தது. இந்தியாவின் முதல் அச்சுக்கூடம், முதல் காகித ஆலை, எல் லாம் அமைந்தது தரங்கம்பாடியில்தான். பக்கத்திலிருக்கும், ஆயுள் விருத்தி ஸ்தலம் திருக்கடையூர், சனிபகவானின் திருநள் ளாறு, பூம்புகார் ஆகியவற்றைப் பார்த்தால் இனிய பயணமாக அமையும். ●





கிரேஸியைக் கேளுங்கள்...



● என்.கோமதி, நெல்லை

சந்திரனில் நிலம் வாங்கி அங்கு குடியேறி கல்யாணம் செய்து கொள்ப வர்கள் 'தேன்நிலவுக்கு' எங்கு போவாங்க?

'Saturn'க்கு போய், 'சனி மூன்' என்று சொல்லிக் கொள்ளலாம்!

● ஆர்.ராஜாமணி, ஆதம்பாக்கம்

நீங்கள் அரைக் கை சட்டை அணியும்போது அதையும் மடித்து விடுவதன் மர்மம் என்ன...?

வழக்கமாக வாத்தியார் காப்பி அடிக்க விடமாட்டார். என் விஷயத்தில் 'வாத்தியாரைப்' (MGR) பார்த்து காப்பி அடிப்பது வழக்கமாகிவிட்டது. மர்ம யோகியால் வந்த மர்மம். இதை நீங்கள் சட்டை செய்யாதீர்கள்!

● வினிதா, வடசென்னை

நீங்களும், தீபிகா படுகோனேவும் நெருக்கமா pose கொடுப்பதுபோல photo எடுத்தால்...?

Suppose நீங்க propose பண்ண poseல எடுத்தா வீட்டுல oppose பண்ணுவாங்க. சம்சாரம்

நதிக்கும் விதிக்கும்

என்னை dispose பண்ணிடுவா. கேள்வியை வாபோஸ் வாங்கிக்குங்க!

● **நாகராஜன், பெங்களூர்**

வைரம் போல ஜொலிக்கும் வெள்ளை முடிக்குச் சாயம் பூசலாமா...?

கூடாதுதான்... அதனால்தான் நான் 'டை - மண்டை'யாக இருக்கிறேன்!

● **என்.சண்முகம், திருவண்ணாமலை**

'பொன் முட்டையிடும் வாத்து' எங்கே கிடைக்கும்...?

அது தெரியாது. ஆனால், 'ரன் முட்டையிடும் வாத்து' சச்சின் டெண்டுல்கர் மும்பையில் கிடைக்கும். இதில் வேடிக்கை என்னவென்றால் முட்டை, வாத்து இரண்டுக்கும் ஆங்கிலத்தில் Duck என்பார்கள். ஆனால், இந்த வாத்து century ஆகப் போட்டுக் கொண்டிருக்கிறது!

● **சுப்புலெட்சுமி, மதுரை**

நதிக்கும், விதிக்கும் என்ன வித்தியாசம்?

நதி கடலில் சேர்க்கும். விதி கடவுளில் சேர்க்கும்!

● **ம.ஜானகிராணி, அண்ணாநகர்**

ஆன்மிக நேயம் என்றால் என்ன? மனித நேயம் என்றால் என்ன?

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்பது ஆன்மிக நேயம். அந்த ஏழையைச் சிரிக்க வைப்பது மனித நேயம் மட்டுமல்ல... புனித நியாயமும் கூட!

● **ராகவன், மன்னார்குடி**

கோபத்தில்கூட என் மனைவி அழகாகத் தெரிகிறாளே... ஆச்சரியமா இல்ல கிரேஸி?

மகா ஆச்சரியம்தான். எப்படி அவள் கோபம் உங்கள் கண்ணை மறைத்தது?

● **எம்.மிக்கேல்ராஜ், சாத்தூர்**

நயன்தாரா போல் நீ அழகா இருக்கேன்னு என் மனைவியிடம் சொன்னால் கோபப்படுகிறாளே?

டாப்-டென் தாரா போல் அழகா இருக்கேன்னு சொல்லிப் பாருங்க... ''மிக்கேல் ராஜ் நீங்க 'நினைத்தாலே இனிக்கும்' ப்ருதிவிராஜ்'' என்பாள். பெண்களிடம் வயதைக் குறைத்துச் சொல்லணும்... அழகைக் கூட்டிச் சொல்லணும்!

● **கே.ஆர்.ரவீந்திரன், சென்னை**

நிலவுக்கு ஒரு பெண்ணுடன் உம்மை அனுப்புவதாக இருந்தால், எந்தப் பெண்ணுடன் செல்ல விரும்புவீர்கள்?

தேன் நிலவுக்கு அழைத்துச் சென்ற அதே பெண்ணுடன்!




என்ன வித்தியாசம்?





சீண்ஸ் அஃப் சிரபுஞ்சி!


















தடுக்கி விழுந்தால் ஆறு, எழுந்து பார்த்தா அருவிங்கற மாதிரி இயற்கை எழில் கொஞ்சும் இந்தப் படங்களைப் பார்த்தீங்களா..? இந்த எழிலுக்குச் சொந்தம் கொண்டாடுவது மழைப் பொழிவின் சிகரமாக விளங்கும் சிரபுஞ்சிதான். ஆனாலும் இந்த சிரபுஞ்சிக்கு ஒரு தண்ணீர் சாபம் இருக்கிறது. வடகிழக்குப் பருவ மழை, தென் மேற்குப் பருவ மழை இரண்டுக்கும் பிடித்த ஸ்பாட் மேகாலயாவின் சிரபுஞ்சி. அதனால்தான் உலகிலேயே மிக அதிகமான மழை பெய்யும் இடம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது. இங்கே ஆண்டுக்கு 12 ஆயிரம் மி.மீ. மழை பெய்கிறது. ஒரே நாளில் உலகிலேயே மிக அதிக அளவு (2987 மி.மீ) மழை பெய்ததும் இங்கேதான். ஒரே மாதத்தில் மிக அதிக அளவு (9300 மி.மீ) மழை பெய்ததும் இங்கேதான்.

இவ்வளவும் இருந்தும் என்ன..? மழை சீஸன் முடிந்துவிட்டதென்றால், பெண்களும், குழந்தைகளும் கால் கடுக்க வெகு தூரம் சென்று குடிதண்ணீர் பிடித்துக் கொண்டு வரவேண்டிய அவலம். பெய்யும் மழை முழுவதும் தேக்கி வைக்க வழி இல்லாமல் வீணாகிறது. ''மழை நீர் சேகரிப்புத் திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்துவதுதான் சிரபுஞ்சியின் தண்ணீர் சாபத்தைத் தீர்க்க ஒரே வழி'' என்கிறார்கள் நிபுணர்கள்.

''கொட்டும் மழை; குடிக்க ஒரு சொட்டு தண்ணீரில்லை'' என்று சிரபுஞ்சி பற்றி மதுமிதா சக்ரவர்த்தி என்பவர் ஓர் ஆவணப் படம் தயாரித்திருக்கிறார்.

- சி.எம்.



தண்ணீர் சாபம்



கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக, இந்திய அரசியலில் ஹாட் டாபிக்காகப் பேசப்படும் காவிரி பிரச்னையை மையமாக வைத்து, 'தம்பிஉடையான்' படத்தை இயக்கி வெளியிட்டிருக்கிறார் ராஜா மகேஷ். இனி ஓவர் டூ மகேஷ்...

சவால்: பிரச்னைக்குரிய காவிரி சப்ஜெக்டை மையமாக வைத்து எடுத்ததே ஒரு சவால்தான். படத்தின் ஃபர்ஸ்ட் ஷெட்யூல் முடிந்தவுடன் 'காதலி குடும்பம்' எனும் சங்கம், பிரபல நாளிதழில், தமிழக முதல்வருக்குக் கடிதம் எழுதுவதைப் போல, 'காவிரி பிரச்னை தீர்ந்து இப்போது இரு மாநில மக்களும் அமைதியாக உள்ளனர். இந்தச் சூழ்நிலையில் ராஜா மகேஷ் இயக்கும் தம்பிஉடையான் தேவையற்ற பிரச்னைகளை ஏற்படுத்தும். இதை முதல்வர் பரிசீலிக்க வேண்டும்' என்று கட்டுரை எழுதியிருந்தது. இந்த அமைப்பு கர்நாடக, தமிழக விவசாயிகளை மையமாக வைத்து ஏற்படுத்தப்பட்ட அமைப்பு. இந்தக் கட்டுரை வெளிவந்த பிறகு படத்துக்கு ஏகப்பட்ட நெருக்கடிகள். படம் சென்சாருக்குப் போன பிறகு ஏகப்பட்ட வெட்டுகள். காவிரி என்ற வார்த்தை உச்சரிக்கப்படும்போதெல்லாம் 'ஆறு' என்ற வார்த்தையைப் பயன்படுத்தும்படி நிர்பந்திக்கப்பட்டோம். பிரச்னைக்குரிய படம் என்பதால் யாரும் வாங்க முன்வரவில்லை. ஒரு வழியாகக் கஷ்டப்பட்டு ரிலீஸ் செய்தோம். ரத்தம் தோய கழுத்தை அறுப்பது, அருவருப்பான ஆபாசக் காட்சிகள் போன்றவற்றுக்கெல்லாம் நீளாத சென்சாரின் கத்திரிக்கோல் விவசாயிகளின் பிரச்னைகளைப் பற்றிப் பேசும்போது நீண்டது வேதனைக்குரியது!

தீர்வு: மழை வந்து காவிரியில் வெள்ளம் கரைபுரண்டோடும்போது, கர்நாடகத்தினர் நமக்குச் சகோதரர்களாக இருக்கின்றனர். வறண்ட கோடை காலத்தில் நமக்கு எதிரிகளாகி விடுகின்றனர். ராஜராஜ சோழன் காலத்தில் இருந்து இன்றுவரை இருக்கும் இந்தப் பிரச்னைக்கு, சினிமா மூலமாகவே தீர்வு காண முடியாது. அரசியல் மூலமாகத்தான் தீர்வு காண முடியும். டெல்லி அரசியல் முழுவதுமாகச் சிரத்தை எடுத்து காவிரி பிரச்னையை அணுகினால் வழி கிடைக்கலாம். ராஜாஜி கவர்னர் ஜெனரலாக இருந்தபோது தஞ்சை மாவட்டத்துக்கு விஜயம் செய்தார். காவிரியில் தண்ணீர் இல்லாமல் பயிர்களெல்லாம் வாடியிருந்தன. உடனடியாகத் தண்ணீர் திறந்து விடும்படி கர்நாடக அரசுக்கு

❖ ராஜா மகேஷ்



காவிரிக்கு சென்சார்!



ஆணையிட்டார். அப்படி செய்யாத பட்சத்தில் கர்நாடக அரசு மீது ராணுவ நடவடிக்கை எடுக்கப் படும் என்றும் எச்சரித்தார். இதுபோன்ற உறுதியும் நேர்மையும் கொண்ட டெல்லி அரசுதான் இப்போது தேவை.

எனது களம்: எனது களம் எப்போதும் சமூகம்தான். எனது அடுத்த படம் பொரு ளாதாரப் பிரச்னைகளைப் பற்றியது. எம்.பி.ஏ. பட்டதாரியின் கேரக்டர் மூல மாகப் பொருளாதார பிரச்னைகளுக்கான காரணங்களையும், தீர்வையும் சொல்ல முயற்சித்து இருக்கிறேன்.

ஓவியம்: நான் தஞ்சாவூர்க்காரன். தஞ்சையின் மரபார்ந்த ஓவியக்கலையில் தேர்ச்சி பெற்றவன். சினிமாவில் வரவேண் டும் என்ற எண்ணத்தை ஓவியம்தான் எனக்கு ஏற்படுத்தியது. சென்னை ஆழ்வார் பேட்டையில் நிரந்தர ஓவியக் கண்காட்சி ஒன்றை வைத்திருக்கிறேன். பல்வேறு நாடு களில் நடைபெற்ற ஓவியப் போட்டிகளில் எனது ஓவியப் படைப்புகள் பங்கேற்றிருக் கின்றன. தூரிகைதான், சினிமாவுக்குள் என்னை நுழைய வைத்த ஆயுதம்.

கொல்லைப்புற
கொன்றை
முதல் பூ பிரசவித்ததாய்
நீ அனுப்பிய
குதூகல குறுஞ்செய்தியில்
ஒரு கார்காலத்தின்
குளுமை

- கதிர்பாரதி






பம்பா நதியில் சகட்டு மேனிக்கு மணல் அள்ளியதால் மணற்படுகை 1.5 மீட்டர் கீழிறங்கிவிட்டது

இமயமலைக்கு கங்கை போலத் தான் சபரிமலைக்கு பம்பா. ஐயப்ப பக்தர்கள் சன்னிதானத்துக்கு மலை ஏறுவதற்கு முன்பும், தரிசனம் முடித்து இறங்கிய பின்பும் பம்பாவில் நீராடுவது கட்டாயக் கடமை. தட்சிண கங்கை என்றுகூட பம்பாவுக்கு ஒரு பெயர் உண்டு. இங்கே பல பக்தர்கள் தங்கள் முன்னோர்களுக்குத் தர்ப்பணமும் செய்கின்றனர். சுமார் 175 கி.மீ நீளமுள்ள பம்பா, கேரளாவின் மூன்றாவது நீளமான ஆறு.

ஆனால், இன்று புனிதமான பம்பா நதி மிகவும் மாசுபட்டு இருக்கிறது. இதற்கு நான்கு முக்கிய காரணங்கள் சொல்லப்படுகின்றன. பம்பா நதி பாயும் வழியில் உள்ள ஊர்களின் கழிவு நீர் பம்பா நதியில் தான் வந்து கலக்கிறது. மலைச் சரிவுகளில் உள்ள தோட்டங்களில் பயிர்களுக்கு மிக அதிகமாகப் பயன்படுத்தப்படும் ரசாயன உரங்களும், பூச்சிக்கொல்லி மருந்துகளும் மழைக் காலத்தில் ஏற்படும் மண் அரிப்பு காரணமாக நேரடியாக வந்து சேர்வது பம்பாவில்தான். ரப்பர் மற்றும் இதர தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் ரசாயனக் கழிவு நீர் சுத்திகரிக்கப்படாமலேயே பம்பாவில் விடப்படுகிறது. சபரிமலைக்குச் செல்லும் லட்சக்கணக்கான பக்தர்களால் ஏற்படும் திடக் கழிவு மற்றும் குப்பைகள் நதியினை மாசுபடுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. பம்பா நதியைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஆர்வம் கொண்ட சிலர் ஒன்று சேர்ந்து www.savepamba.org என்ற இணையதளத்தை உருவாக்கி, மக்கள் மத்தியில் இது குறித்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வருகிறார்கள்.



பம்பா நதி மாசுபடுவதால்



"ஐயப்பா, பம்பாவைக் காப்பாத்து!"

பாதிக்கப்படுவது மக்கள் மட்டுமில்லை; வேம்ப நாடு முகத்துவாரப் பகுதிவரை நதி நீரில் இருக்கும் மீன் முதலிய உயிரினங்களும், தாவர வகைகளும்கூடத்தான்.

தமிழ்நாட்டைப் போலவே பம்பாவிலும் மணற்கொள்ளை ஏகபோகம். சகட்டுமேனிக்கு மணல் அள்ளியதன் காரணமாக ஆற்றின் மணற்படுகை சுமார் ஒன்றரை மீட்டர் கீழிறங்கிவிட்டதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

பம்பா நதி மாசுபடுவதைத் தடுக்க திருவனந்தபுரத்தின் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம் கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தது! இதில் கலந்து கொண்ட இரு ஜெர்மானிய நிபுணர்கள் கீழ்க்கண்ட ஆலோசனைகளை வழங்கி இருக்கிறார்கள்.

★ சபரி மலை பக்தர்கள் மூலமாக ஏற்படும் திட மற்றும் திரவக் கழிவுகளின் மேலாண்மை நவீன தொழில்நுட்பத்துடன் இணைந்து செயல்படுத்தப்பட வேண்டும். ★ பக்தர்கள் பயன்படுத்துவதற்கு வசதியாக இன்னும் அதிக எண்ணிக்கையில் கழிப்பறைகள் கட்டப்பட வேண்டும். இவற்றுடன் எரிவாயு உற்பத்தித் திட்டமும் இணைந்து செயல்படுத்தப்பட வேண்டும். ★ பம்பா நதி சம்பந்தப்பட்ட வனத்துறை, நீர் வளத்துறை, சபரிமலை நிர்வாகம், சுகாதாரத் துறை, சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் என்று அனைவரும் இடம்பெறக்கூடிய கமிட்டி ஒன்று, பம்பா நதியைத் தூய்மைப்படுத்தத் தேவையான அதிகாரங்களுடன் ஏற்படுத்தப்பட வேண்டும். இல்லையேல் பம்பா நதி மாசுபடுவதைத் தடுக்க ஐயப்பனே நினைத்தாலும் முடியாது!

– மௌலி

தூறல் கவிதை



**நீர் குடைந்தாட வந்தவனை
கரையோடு நிறுத்திவிட்டது
உன் பேரழகின் பேராற்றுத் தீரம்
வேறென்ன செய்ய
ஒரு கை நீரள்ளி
தலையில் தெளித்துக் கொண்டு
பயபக்தியோடு திரும்பிவிட்டேன்!**

– கதிர்பாரதி



பணம் பண்ணலாம்

''**ஸா**ர்... என் தோட்டத்துல பன்னீர் திராட்சை விவசாயம் பண்ணப் போறேன்! எனக்கு வங்கிக் கடன் வேணும்!'' எனக் கேட்கிறார் விவசாயி வைரவன். அவரின் முகத்திலடித்தாற் போல பதில் வருகிறது வங்கி அதிகாரியிடமிருந்து. ''நம்ம சிவகங்கை மாவட்டத்துல மாங்காய் கூட சரியா காய்க்காது. இதுல நீங்க பன்னீர் திராட்சை சாகுபடி பண்ணப் போறீங்களா? போய் வேற வேலையைப் பாருங்க''

வைராக்கியத்தோடு வங்கியை விட்டு வெளியேறினார் வைரவன். கடிய நிலந் திருத்தி காடு வெட்டி உழுது பயிரிட்டார். கல் ஊன்றி கம்பி வலைப் பந்தல் இட்டார். கண்ணும் கருத்துமாய்ப் பயிர் வளர்த்தார். கம்பி வலைப் பந்தலில் இப்போது கொத்துக் கொத்தாய்க் காய்த்துத் தொங்குகின்றன பன்னீர் திராட்சைக் குலைகள்! எப்படி இது சாத்தியமாயிற்று?

திருப்பத்தூர் - சிவகங்கை நெடுஞ்சாலையில் மதகுபட்டி கிராமத்திலிருந்து ஒரு கி.மீ. தூரம் உள்ளடங்கியுள்ளது கே.வி.ஆர். விவசாயப் பண்ணை. அதில் தான் அமைந்துள்ளது பன்னீர் திராட்சைத் தோட்டம். சிவகங்கை மாவட்ட கிராம விவசாயிகள் பலரும் தகவல் கேள்விப்பட்டு, 'அட... நம்ம மண்ணுல பன்னீர் திராட்சையா?' என்று பரவச வியப்புடன் வந்து வந்து பார்த்துச் செல்கின்றனர்.

''**வ**ங்கியில் கடன் தர மறுத்ததும், எனக்குக் கெளரவக் குறைச்சலா போச்சுங்க. எப்படியாவது திராட்சை பயிர் பண்ணணும்னு முதலில் மண் பரிசோதனைக்கு

தூறல் கவிதை

நிர்சலனமுற்ற
தெப்பக்குளத்தில்
கொத்துக் கொத்தாய்
பார்வையை அள்ளி
வீசிவிட்டு வந்தாய்
சலனமுற்ற
என் மீன்களைத்தான்
என்ன செய்வதென்றே
தெரியவில்லை

- கதிர்பாரதி



பன்னீர் திராட்சையில்...

வைரவன்

அனுப்பி வைத்தேன். ரிசல்ட் திருப்தியாக இருந்தது. முழு மனத்துடன் பயிர் சாகு படியில இறங்கிட்டேன்.

பன்னீர் திராட்சை சாகுபடிக்கு மணல் கலந்த செம்மண், குருணை மணல் கலந்த செம்மண், சரளை கலந்த மண் இதெல் லாம் ஏத்தது. எங்க காட்ல குருணை மணல் கலந்த செம்மண். இதுல பன்னீர் திராட்சை பச்சப் பசேல்னு வளர்ந்து வந்திச்சு. நாற்று நட்ட நாலு மாதங்கள்ல, கம்பி வலைப் பந்தல் மேல ஏறி விடும் திராட்சைக் கொடிகள், ஒன்பது - பத்து மாதங்கள்ல கவாத்துப் பண்ணனும். இது ரொம்ப முக்கியம்.

கவாத்துப் பண்ணதுலேர்ந்து எண்ணி நூறு நாட்கள்ல, முதல் அறு வடைக்கு வந்துடும். அதுலேர்ந்து நாலு மாசத்துக்கு ஒரு முறை அறுவடை. இப்படி வருஷத்துக்கு மூணு தடவை, கொத்துக் கொத்தாக பன்னீர் திராட்சைக் குலைகளை அறுவடை பண்ணிட்டே இருக்கலாம். இப்ப நான் பண்ணப் போறது மூணாவது அறுவடை. நல்ல மகசூலுக்குக் கொடி வேலை பார்க்கிற நுணுக்கம் நல்லா தெரிஞ்சுக்கணும்.


குறைந்த பட்சம் இருபது வருஷத் துக்கு, தொடர்ந்து ஒவ்வொரு வருஷமும் மூணு முறை மகசூல் அள்ளித் தரும் பன்னீர் திராட்சை. மொத்தத்துல விவசாயி களுக்கு பன்னீர் திராட்சை பலன் நிச்சயம். பார்த்துப் பார்த்து வளர்த்து விட்டா, பன்னீர் திராட்சை சாகுபடி நம்மைப் பரிதவிக்க விட்டுடாது!'' என்கிறார் பன்னீர் விவசாயி வைரவன்.

செய்திச் சித்திரம்:
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

நீச்சல் போட்டிகள் முதல் ஒலிம்பிக்கிலேயே இடம்பெற்றன. ஆனால், நீச்சல் குளத்துக்குப் பதிலாக முக்கிய ஆறுகளில் போட்டிகள் நடத்தப்பட்டன. 1908 ஒலிம்பிக்கில்தான் முதன்முதலாக நீச்சல் குளத்தில் போட்டிகள் நடத்தப்பட்டன.

- சநகன்

அப்படியா?




நீச்சல்

நிலாவுக்குள் தண்ணீர் உள்ளதை விஞ்ஞானம் கண்டுபிடித்தபோது, அடடா, அங்கும் நீச்சல் அடிக்கமுடியும் போல என்று எண்ணி மகிழ்ந்தார் பெல்ப்ஸ். இப்படி எண்ண அவர் ஒருவரால் மட்டும்தான் முடியும்.

''சிறுவயதில் கிடைத்த பயிற்சிகள்தான் என் திறமைக்கான உரம். என் உலகத்தின் நான்கு பக்கங்களும் தண்ணீரால்தான் சூழப்பட்டுள்ளது'' என்று தன் பெற்றோருக்குப் பெரிய வணக்கம் வைக்கிறார் பெல்ப்ஸ். Attention&deficit hyperactivity disorder என்கிற மந்தநிலை குறைபாடுடைய பெல்ப்ஸ், தண்ணீரில் நீந்தித்தான் தன் தாழ்வுமனப்பான்மையை விரட்டினார். அவரும் அவருடைய இரண்டு சகோதரிகளும் நினைவு தெரிந்த நாள்முதல், தண்ணீரில் மட்டும்தான் ஓடிப்பிடித்து விளையாடியிருக்கிறார்கள். நீச்சலில் இதுவரை முப்பத்தேழு உலகச் சாதனைகளை உடைத்து பீஜிங் ஒலிம்பிக்கில் எட்டு தங்கங்களை அள்ளிக்கொண்டு நீச்சல் குளத்தின் மகாராஜாவாகி விட்டார் பெல்ப்ஸ்.

பெல்ப்ஸின் உயரத்தை விடவும் (6 அடி 4 அங்குலம்) அவருடைய கைகளின் மொத்த நீளம் அதிகம் (6 அடி 7 அங்குலம்). நாம் தினம் இரண்டாயிரம் முதல் மூவாயிரம் கலோரி உணவு உட்கொண்டால், பெல்ப்ஸ் ஒரு நாளைக்கு 8,000 கலோரி உணவை உள்ளே விழுங்குகிறார். இந்த இரண்டு நுட்பமான விஷயங்களும் அவர் வெற்றிக்கான முக்கியக் காரணங்கள். பெல்ப்ஸின் ஆதர்ஸம் ஐந்து ஒலிம்பிக் மெடல்கள் வாங்கிய ஆஸ்திரேலியர் ஐயன் தோர்ப். ஆனால், அவரே பீஜிங் ஒலிம்பிக்குக்கு முன்னால் பெல்ப்ஸைப் பற்றி மோசமாகப் பேசிவிட (அவனால் எட்டு தங்கங்கள் எல்லாம் வாங்க முடியாது ஸார்) அவரையே தன் ஊக்கமாக எண்ணிக்கொண்டு எட்டு தங்கம் என்கிற உச்சத்தை எட்டி விட்டார் பெல்ப்ஸ். எட்டாவது தங்கத்தை அடைந்த போட்டியை தோர்ப் நேரில் பார்க்க வந்தார். இப்போது என் தோல்வியை மிகவும் சந்தோஷத்துடன் ஒப்





"நீச்சல் குளத்தில் பெல்ப்ஸ் பெற்றது 8 தங்கங்கள்!"

குளத்து மஹாராஜா!

புக்கொள்கிறேன்'' என்றார்.

உலகின் ஈடுஇணையற்ற சாதனையாளர் ஒருவர் வாழும் காலத்தில், நாமும் வாழ்வது பெரும்பாக்கியம் என்றுதான் இந்த நிமிடம் வரை அத்லெட் உலகம் பெல்ப்ஸை உச்சி முகர்கிறது. ஆனால், இதற்கு எதிராகச் சமீபத்தில் போதை மருந்து உட்கொண்டதற்காகக் காவல்துறையிடம் வகையாக மாட்டிக்கொண்டார் பெல்ப்ஸ். ஏற்கெனவே குடித்துவிட்டு வாகனம் ஓட்டிய ஒரு பழைய பிரச்னை வேறு. "தண்ணீருக்குள் குதித்துவிட்டால் என் எல்லா பிரச்னையும் பறந்துவிடும்'' என்கிறார் பெல்ப்ஸ். வாஸ்தவம்தானே!

ச.ந.கண்ணன்

ஆறு சூழ் உலகு


அ.ராஜ்குமார்

முன்பெல்லாம்
மாட்டுப் பொங்கல் முடிந்த
அடுத்த நாள்
பூப்பறிக்கும் நோம்பிக்காக
ஆத்துக்குப் போவோம்

தாவணிப் பெண்கள்
ஓலைக்கா கொண்டைல
ஒரு கூடை தாழம்பூவென
கும்மியடிப்பார்கள்

ஆத்தோரம் போகும்
வண்டித்தடத்தில்
ஆவாரம் பூக்கள்
கொத்துக் கொத்தாய்ப் பூத்திருக்கும்
பங்குனி அடைமழையின்
செந்தண்ணி
பாதி பனைமர அளவுக்குப் போகும்





எம்.எல்.ஏவின் ஆதரவோடு
ஆத்தை டெண்டர் எடுத்தவர்
ஊர் எல்லைவரை
போஸ்ட்மார்ட்டம் செய்தார்

காளை மாடுகளின்
லாட சத்தம் கேட்ட
வண்டித்தடங்களில்
முதுகு நிறைய மண் அள்ளி
முக்கிக்கொண்டு போகின்றன
வாடகை லாரிகள்

கண்ணையும் கெளுத்தியும்
துள்ளிக் குதித்த எங்களூர் ஆத்தில்
இப்போதெல்லாம்
சில்லு சில்லாய்க்
கண்ணாடி வளையல்களும்
வெளுத்துப் போன நீரோத்தும்

மேஷம் : சரியான பருவத்தில் வர வேண்டிய மழையைப் போல, சரியான தருணத்தில் பணம் வந்துசேரும். எடுத்த காரியம் கைகூடும். வீடு / மனை வாங்க பிரகாசமான வாய்ப்பு வரும்.

ரிஷபம் : தமிழகத்தைத் தாக்கும் புயல் இடம் மாறி ஆந்திரா போவது போல, உத்தியோகம் இடம் மாறும். அதனால்... வானிலை மாறுவது போல வீட்டில் பலத்த மழை (சண்டைதான்) பொழியக் கூடும். அமைதியெனும் குடை பிடிச்சுக்கோ. ஜாமீன் கையெழுத்து போடாதே!

மிதுனம் : வெள்ளப் பகுதியிலிருந்து மேடான பகுதிக்குப் பாதுகாப்பாகப் போவது போல, வெளியூர் செல்வீர்கள். சுபகாரியப் பேச்சு வெற்றி பெறும். பயணமாயிற்றே... செலவும் இருக்கத்தான் செய்யும்.

கடகம் : மழை விட்டு, மேகம் கலைந்து, சூரியன் எட்டிப் பார்ப்பதைப் போல, ஏழரை சனியிலிருந்து விடுபட்டு உற்சாகமான காரியங்களைச் சாதிப்பீர்கள். குலதெய்வ வழிபாடு முடியுங்கள். எல் லாம் நல்லதாக அமையும்.

சிம்மம் : சில்லென்ற மழைக்காற்று போல புத்துணர்ச்சி வாரம். அணைக்குள் கட்டுப்பட்ட நீர் போல கடன்தொல்லை நீங்கி செலவு கட்டுக்குள் இருக்கும். சத்ரு தொல்லை ஒழியும்.

கன்னி : கலங்கிய நீர் தெளிவதைப் போல, மனவருத்தமும் குழப்பமும் தெளியும் வாரம். மேக மூட்டம் போன்ற மந்தநிலை தொழிலிலும் குடும்பத்திலும் மாறும்.

துலாம் : மழை ஓய்ந்தபின் ஓடையில் துள்ளும் மீன்கூட்டத்தை ரசிப்பது போல உடலும் மனமும் உற்சாகமாய்த் துள்ளும் காலம். காய்ந்த பள்ளங்கள் குட்டி குளமெனப் பதவி உயர்வு பெறுவதைப் போல சின்னச்சின்ன பிரமோஷன் வந்து சேரும்.

விருச்சிகம் : மேகம் மேகத்தோடு மோதாமல் இருந்தால் இடி மின்னலுக்கு வாய்ப்பில்லை. பருவகாலம் சரியில்லை. வீட்டில் மௌனவிரதம் உத்தமம். சாலையில் செல்லும்போது மழைநீர் வீசிவிட்டுப் போகும் வாகனம் போல ஏதேனும் சச்சரவில் மாட்ட நேரும். உஷாராயிருங்கள்!

தனுசு : வலைநிறை விண்மீன்களைப் பிடித்த மீனவனைப் போல குஷியோடு இருப்பீர்கள். புதிய அனுபவமும் தேடலும், புது முயற்சியும் உங்களைத் தொற்றிக் கொள்ளும்.

மகரம் : தண்ணீரில் கப்பல் விட்டு ரசிப்பது போல தற்காலிக சந்தோஷம் வாய்க்கும். வீட்டுக் கிணற்றில் நீர் நிரம்புவதைப் போல இந்த வாரம் பிரச்னை தீர்ந்து மனம் நிறையும்.

கும்பம் : புயல் கரையைக் கடக் கும்போது மழை தீவிரமாயிருக்கும். அதைப்போல இந்த வாரம் எல்லாமே கொஞ்சம் அதிகமாய் இருக்கும். மனம் கலங்காமல் எதிர்கொள்வீர்கள். எந்த முடிவும் உங்கள் கட்டுப்பாட்டில் இருக் கும். பயம் வேண்டாம்.

மீனம் : நதியிலிருந்து கடலுக்கு இடம் மாறும் ஜீவன்களைப் போல இயல்பாக இடமாற்றம் நிகழும். பணவரவும் மகப்பேறு பாக்கியமும் சாத்தியமாகும்.


தஞ்சை பரத்வாஜ்
நடக்குமென்பார்;
நடக்கும்!
22.11.09 முதல் 28.11.09 வரை

ஒரு ரோஜாவை இதழ்இதழாகப் பிய்க்கும்போது அதனுள் உண்டாகும் வலி எப்படியிருக்குமோ அதுபோன்ற ஒரு வலியை உணர்ந்தாள் தேன்மொழி.

இன்னும் சில நொடிகள்தான். ஆட்டோ தயாராக இருக்கிறது. பிரியப் போகிறாள். எதையாவது செய்து அவனை முழுவதுமாகத் தன் மேல் மையல் கொள்ளச் செய்ய வேண்டும். அடுத்தமுறை தன்னைச் சந்திக்க, அவன் சென்னையில் தெருத்தெருவாக அலைய வேண்டும்.

அவன் ஆட்டோக்காரனிடம் பேசிக் கொண்டிருந்த நொடியில், தேன்மொழியின் மனசு புயல் வேகத்தில் தீவிரமாகச் சுழல ஆரம்பித்தது. அவளுக்குள் உருவானது காதல் இல்லை. இத்தனை சீக்கிரம் அது அவ்வளவு முழுமையான வடிவத்துக்கும் வராது. இது வேறு! ஆனால், இந்த உணர்ச்சிதான் காதலுக்கு அடிப்படை! ஒருவித பதற்றமான மனோநிலை.

மழை வருவதற்கு முன்பாக மேகம் சூழ்ந்த நாட்களில், குளங்களில் பாய்ந்து செல்லும் தவளைகள் போல அல்லது தாமரை இதழ்கள் வேகமாகக் காற்றில் படபடத்துத் துடிப்பது போல காதல் வருவதற்கு முன்பான ஒருவித மனோநிலை.

ஒருவேளை இந்தக் கணமே ஆழமான காதலுக்கு அஸ்திவாரமாகக்கூட அமையலாம். இல்லாவிட்டால் இவை எதுவுமே இல்லாமல் மறுநாளே புஸ்ஸாகி இந்த மாயக் கவர்ச்சிகள் மறைந்து சாதாரணமான மனநிலைக்கும் திரும்பலாம். இந்த இரண்டையுமே தேன்மொழி அனுபவித்திருக்கிறாள். காதல் ஒன்றும் அவள் வாழ்க்கையில் புதிய அனுபவம் அல்ல. ஆனாலும் இன்று இவன் மேல் உண்டாகியிருக்கும் உணர்வு, முந்தைய அனுபவங்களையெல்லாம் கடந்ததாக இருக்கிறது. தன் மனம் எதனால் இப்படியாக அவஸ்தைப்பட வேண்டும்? அப்படியென்ன விசேஷம் இவனிடம்?

எது தன்னை அவனிடம் முதுகைப் பிடித்துத் தள்ளிக்கொண்டிருக்கிறது.

கிராமத்துப் பெண்களின் மனத்தின் வலியைக்கூடப் பாடலாகப் பாடும் அளவு பண்பட்ட திறமை மற்றும் அறிவா? அல்லது சட்டென ஒரு பெண்ணுக்கு உதவி செய்யும் பொருட்டாகத் தனது பயணத்தைக்கூட பாதியில் கைவிட்டு ரயிலிலிருந்து குதித்த அந்த நல்ல மனமா?

பகல் மீன்கள்

ஒன்று மட்டும் நிச்சயம். மேற்சொன்ன இரண்டு சம்பவங்களின் மூலமாக ஓர் அற்புதமான இதயம் அவனுக்குள் இருப்பதை அவள் அறிந்து கொண்டாள். எல்லாவற்றுக்கும் மேலே முத்தாய்ப்பாக எடை மிஷின் ராசி அட்டையில் இன்று வாழ்க்கைத் துணையைச் சந்திப்போம் என எழுதியிருந்ததே. அதுதானே இத்தனை பதற்றத்துக்கும் காரணம்!

அந்த இதயம் தன் கைவிட்டுப் போய்விட்டால் வாழ்க்கை பத்தோடு பதினொன்றுதான்!

''ஹலோ என்ன அப்படியே நிக்கறீங்க... வாங்க ஏறுங்க.''


7
அஜயன்
பாலா

ஆட்டோவில் ஏறச் சொல்லி அவன் அழைத்தான் - அவனுடைய இரண்டு லக்கேஜ்களும் ஆட்டோவில் அவளுக்கு முன்பாக ஏறி உட்கார்ந்து கொண்டு அவளை வெறுப்பேற்றின.

இவளும் ஏறப் போனாள். ஹீல்ஸ் தடுமாறி மனநிலையை வெளிப்படுத்தியது. ஆட்டோவில் ஏறக் குனிந்த போது இடதுபக்கமாகச் சரிந்த கேசத்தை விரல்களால் ஒதுக்கிவிட்டவள், அவனைப் பார்த்தாள்.

ஒருவேளை இனி இவனைப் பார்க்க முடியாமல் போய்விடுமோ...இதுதான் கடைசி முறையோ?



கரைபுரண்டோடிய
காவிரியோரம்
அந்நிய கம்பெனியின்
தண்ணீர் பாக்கெட்
அமோக வியாபாரம்
வாங்கிக் குடித்துத்
தாகம் போக்குகிறான்
வெள்ளாமை தொலைத்த
விவசாயி...

- கதிர்பாரதி

மனத்தில் மட்டும் ஸ்கேன் பண்ண வசதியிருந்தால், இந்த முகத்தை அப்படியே பதிவு செய்து தேவைப்படும் போது, பெரிதாக்கியும் சிறிதாக்கியும் பார்த்துக் கொள்ளலாம். விஸ்காம் மூளை தன் பங்குக்கு ஒரு ட்ராக் ஓட்டியது.

''ஆட்டோவுக்கு பே பண்ணிட்டேன்'' என அவளிடம் சொன்னவன், ஆட்டோக்காரனிடம், ''அங்கு போய் ரூபாய் கேக்காதே'' என எச்சரித்தான்.

அதுவரை அவனாகத் தன் பேரைக் கேட்பான். ஃபோன் நம்பர் அல்லது முகவரி தருவான் என எதிர்பார்த்த தேன்மொழி, அது நடக்காத காரணத்தால், அந்த கடைசி கணத்தையும் தவறவிடத் தயாரில்லை.

சட்டென நிமிர்ந்தாள்.

''வெய்ட்...வெய்ட்...'' என ஆட்டோக்காரனிடம் கூறியவள், சட்டென இவனிடம் திரும்பினாள். ஒருகணம் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டவள்,

''இவ்வளவு ஹெல்ப் பண்ணியிருக்கீங்க...தேங்க் யூ வெரி மச். எனக்கு வேற என்ன சொல்றது... எப்படிச் சொல்றதுன்னு தெரியல.''

''இட்ஸ் ஓகே.''

''பாவம் எனக்காக நீங்க ட்ரெய்ன்லாம் வேற மிஸ் பண்ணியிருக்கீங்க. உங்க கார்டைக் கொடுங்க. இல்லை பேங்க் அக்கவுண்ட் நம்பர் ஏதாவது கொடுங்க... மணி டிரான்ஸ்ஃபர் பண்ணிடுறேன்.''

''ம்ம்'' அவன் மூக்கை விரலால் தடவியபடி தலைகுனிந்து சிரித்தான்.

''ஒண்ணு தெரியுங்களா... காலையில நீங்க பாட்டுப் பாடினப்பவே எனக்கு ரொம்பப் பிடிச்சிருந்தது.''

''அதுக்கு..?''

''நான் ஓபனாவே சொல்றேன்...



மழை வருவதற்கு முன்பு மேகம் சூழ்ந்த நாட்களில் குளத்தைத் தேடி தவிப்போடு தவளைகள் ஓடுமே... அந்தத் தவிப்பு இப்போது தேன்மொழிக்கு...

உங்க குரலுக்கு ரசிகனா உங்ககிட்ட அப்பவே பேசணும்னு தோணுச்சு. ஆனா அப்ப வாய்ப்பில்லை.''

''ம்ம்...''

''அப்புறம் இங்க பிளாட்ஃபார்மல நீங்களே எங்கிட்ட வந்து ஹெல்ப் கேட்டப்ப, எனக்கு ரொம்ப ஹேப்பியா இருந்துச்சு. சட்டுன்னு முடிவெடுத்து நான் ட்ரெயின்லேருந்து இறங்கினதுக்கு இதுவும் ஒரு காரணம்.''

அட இவ்வளவு வெளிப்படையாகப் பேசுகிறான். அவளுக்குள் அதுவரை சுருண்டிருந்த கர்வம் எனும் பாம்பு மெல்ல உடலை விரித்தது.

''கொஞ்ச நேரம்தான்னாலும் உங்ககூட இவ்வளவு நேரம் பேசினது, ஹெல்ப் பண்ணது எல்லாம் ஒருவகையில் பார்த்தா சுயநலம்தான்.''

ஆட்டோக்காரன் பொறுமையிழந்து ஹாரன் அடிக்கத் தொடங்கினான்.

''சரி நீங்க ஏறுங்க... டயம் ஆகுது.''

என்ன... பாதியில் நிறுத்திவிட்டான்? அடப்பாவி! சொல்ல வந்ததை முழுசா சொல்லித் தொலையேன்டா இவனே... இவளுக்குக் கத்த வேண்டும் போலிருந்தது.

''ம்ம்...சரி ஏதோ என்னைக் கிண்டல் பண்றீங்கன்னு நெனக்கிறேன். சரி அப்ப உங்க நம்பரையாவது கொடுங்க.''

அவள் ஆட்டோவில் ஏறி அமர்ந்தபடி பேக்கையும் திறந்து பேனாவையும் நோட்டையும் எடுத்தாள்.

''எதுக்கு... அதெல்லாம் வேணாம். அப்புறம் நீங்க எப்ப ஃபோன் பண்ணுவீங்கன்னு நான் காத்திருப்பேன். நீங்களும் எதுக்குடா இவனுக்கு ஃபோன் பண்ணணும் நெனைக்கலாம். எதுக்குத் தேவையில்லாம... இப்படியே முடியறதுதான் அழகு.

ஒருத்தரை ஒருத்தர் யார்னு தெரியாம இப்படியே மறைஞ்சு போயிடலாம். எனக்கு உங்களைப் பிடிச்சிருந்தது. உங்களுக்கு நான் இக்கட்டான தருணத்துல உதவியிருக்கேன்... தட்ஸ் ஆல்.''

அவளுக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை.

சட்டென அவளுக்குள் இது இப்படியாக முடிய வேண்டாம் எனத் தோன்றி தொண்டையை அடைத்தது.

''நோ... நோ... அப்புறம் இதுவே எனக்கு பர்டன் ஆயிடும்... அட்ரஸ் சொல்லுங்க... பணத்தை அனுப்பிடறேன்.''

''அப்படின்னா அந்தக் காசை எடுத்துத் தனியா ஒரு கர்ச்சீஃப்ல முடிச்சுப் போட்டு வையுங்க. இந்த உலகம் எப்பவாவது நம்மைத் திரும்பச் சந்திக்க வைச்சா அப்ப வாங்கிக்கறேன்.''

இப்படி அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, ஆட்டோவை இரண்டொரு முறை டிரைவர் உறும வைக்க, கடைசியாய் அவன் பெயர் மட்டுமாவது கேட்கலாம் என அவள் முடிவெடுப்பதற்குள் டிரைவரிடம் புறப்படச் சொல்லி அவன் சைகை செய்ய, ஆட்டோ புறப்

பட்டது.

அவனுக்குள் இறங்கி ஓடிப் போய் அவன் சட்டையைப் பிடித்து உலுக்க வேண்டும் போல் ஒரு ஆவேசம்.

ஆவேசம் உடைந்து அவளுக்குள் கடலாக உணர்ச்சிகள் பொங்கின. ஆட்டோ ஸ்டேஷனைக் கடந்து சாலையில் ஐக்கியமானது. ஹார்ன் சத்தங்களுடன் கவலையே இல்லாமல் கனரக வாகனங்கள் பாய்ந்துகொண்டிருந்தன. சட்டென தலையை வெளியே எக்கி சாலையைப் பார்த்தாள். அவள் முகத்தில் மோதிய வைசாக் நகரத்தின் காலைக் காற்று, கண்ணில் கோத்திருந்த துளிகள் ரெண்டையும் பறித்துச் சென்றது.



"தலைவர் அநியாயத்துக்குக் கதை விடறார்னு எப்படிச் சொல்றே?"

"நாங்கள் ஆட்சியில் இருந்திருந்தால் வெனிசுலா அழகியை வெற்றி பெற விட்டிருக்க மாட்டோம்கறாரே?"

- சென்னிமலை சி.பி.செந்தில்குமார்

அந்த ஹோட்டலின் நாகரிக வடிவத்துக்கும் கீழ்பாச்சக கட்டிய பட்டுவேட்டிகளுக்கும் கொஞ்சமும் பொருந்தவில்லை. சட்டென ஏதோ ஒரு தெலுங்கு படத்தினுள் நுழைந்துவிட்டாற்போலிருந்தது. எங்கு பார்த்தாலும் என்.டி.ராமாராவ்களாக இருந்தனர். நடமாடும் நகைக்கடைகளாக பட்டுப் புடைவைகளில் குண்டுப் பெண்மணிகள் குழந்தை குட்டிகளுடன் எங்குமாக நிறைந்து கிடந்தனர். நல்லவேளையாக மகேஷ் லக்கேஜுகளைச் சுமக்க ஆட்களைக் கூப்பிட்டான். அவளுக்கான ஏ.சி. அறை நேற்று இரவிலிருந்தே காத்திருக்கிறதாம். கார்த்திகா, கண்டிப்பாகச் சொல்லிவிட்டாளாம். இதைச் சொல்லிக்கொண்டே முன்னால் படியேறிய அவனுக்கு மூச்சு வாங்கியது. முன்னொரு காலத்தில் கல்லூரியில் தனக்காக அவன் மரத்தடியில் மழைக் காலத்தில் லவ் லெட்டருடன் நடுங்கிக்கொண்டே காத்திருந்தது தேன்மொழியின் ஞாபகத்துக்கு வந்தது. மனசுக்குள் சிரித்தாள். ஓகே... இப்போ தோழியின் காதலன், இன்னும் சில மணி நேரங்களில் தாலி கட்டப் போகிறவன்.

அறைக்குள் வந்து குளித்து, புடைவை மாற்றிக் கொண்டு, கார்த்திகாவைப் பார்ப்பதுவரை அவ்வப்போது இடையிடையே அந்தப் பெயர் தெரியாதவனின் முகம், அடிக்கொரு முறை வந்து ஹலோ சொல்லித் தொந்தரவு செய்தது. அந்த உணர்வு, மனசுக்குள் ஒரு இசைத்தட்டாகச் சுழன்று கொண்டிருக்க, அவள் அரக்கபரக்க கார்த்திகாவைப் பார்க்க ஓடினாள். ஆனால், கார்த்திகா ஃபுல் மூட் அவுட்! மணக்கோலத்தில் சோகமாகத் தலைகவிழ்ந்திருந்தாள். என்ன ஆனதோ? தேன்மொழியைப் பார்த்ததும் எப்போதும் துள்ளும் அவளது கண்களும் கைகளும் இன்று அமைதியாக இருந்தன.

(மீன்கள் துள்ளும்)

வாழ்ந்தா போதுமா வாழ்விடுங்க!

இணையப் படங்கள் இணைத்துக் கதையாக்கியவர்: மணிகண்டன்



வீட்டுக்கூடத்தில் தம்பியின் வாத்தியம் வைத்திருந்ததையும், அதன் பக்கத்தில் சுருதிப்பெட்டி ஒன்று இருந்ததையும் பார்த்தேன். வனஜாவை, "தம்பி இப்போது வாத்தியம் வாசிப்பதுண்டா?" என்று கேட்டேன். "சிலசமயம் ராத்திரியில் வாசிப்பாங்க; நான் சுருதி போடுவேன்" என்று சொன்னாள்.

நல்லவேளையாக தவுல் எடுத்துக் கொண்டு போயிருந்தேன். அன்று ராத்திரி ரொம்பவும் பிடிவாதம் செய்து, தம்பியை நாயனம் வாசிக்கச் சொல்லி, நானும் தவுல் அடித்தேன். ஆகா! அது என்ன வாசிப்பு! என்ன வாசிப்பு! சாமி! அது மனுஷ்யர்களுடைய சங்கீதமல்ல; தேவ சங்கீதம். ஒருசமயம் அழுகை வரும்; ஒரு சமயம் சிரிப்பு வரும். ஒரு நிமிஷம் எங்கேயோ ஆகாயத்தில் தூக்கிக்கொண்டு போவது போலிருக்கும்; அடுத்த நிமிஷம் மலை உச்சியிலிருந்து பாதாளத்தில் உருட்டி விடுவது போலிருக்கும். ஒரு சமயம் ஊஞ்சலாடுவது போலிருக்கும். இன்னொரு சமயம் எழுந்திருந்து கூத்தாட வேண்டுமென்று தோன்றும். நடுவில் நடுவில் நான் தவுல் அடிப்பதை நிறுத்தி விட்டு, "ஆஹா! ஆஹா!" என்று ஆர்ப்பரித்துக்கொண்டிருப்பேன்.

இம்மாதிரி தம்பி வாத்தியம் வாசிக்கிற விஷயம் தெரிந்ததிலிருந்து, முன்னைக் காட்டிலும் அதிகமாகவே முந்திரிச் சோலைக்குப் போகத் தொடங்கினேன்.

அன்று ராத்திரி வழக்கம் போல் சிவக்கொழுந்து வாத்தியம் வாசித்தான். அவன் சஹானா ராகம் வாசித்தபோது என்னால் சகிக்கவே முடியவில்லை. ஒரே பரவசமாய், "ஆண்டவனே!" என்று அலறிவிட்டேன். வாசித்து முடிந்ததும், "தம்பி! கடவுளுக்கு அல்லவா கண்ணில்லை போலிருக்கிறது? இப்பேர்ப்

வண்ணத் தூரிகை



நாதவித்தை!

பட்ட நாதவித்தையை உனக்குக் கொடுத்து விட்டு, உன் கண்ணை எடுத்துக்கொண்டு விட்டாரே?" என்று வாய்விட்டுக் கதறினேன்.

அப்போது சிவக்கொழுந்து புன்னகை செய்தபடி, "மாமா! ஸ்வாமி என் கண்ணை எடுத்துக்கொள்ளவில்லை. உண்மையில் எனக்குக் கண்ணைக் கொடுத்தார். வனஜாவைக் காட்டிலும் இன்னொருத்தி ஒசத்தி என்று நினைத் தேனே... என்னைவிடக் குருடன் யார்?" என்றான்.

எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. "என்ன சொல்கிறாய், தம்பி?" என்றேன்.

"மாமா! எனக்குக் கண்ணில்லையென்று என்னை நீங்கள் ஏமாற்றப் பார்த்தீர்கள். ஆனால், உண்மையில் உங்களைத்தான் நான் ஏமாற்றினேன். முதல் நாள் ஆஸ்பத் திரிக்கு வந்தபோதே, இவள் வனஜா தான் என்று எனக்குத் தெரியும்" என் றான்.

அச்சமயம் அங்கு வந்த வனஜாவின் முகத்தைப் பார்த்தேன். அவளுடைய புன் சிரிப்பிலிருந்து அவளும் இதற்கு உடந்தை தான் என்று தெரிந்துகொண்டேன்.

- 'திருவழுந்தூர் சிவக்கொழுந்து' - நெடுங் கதையிலிருந்து...



அமரர் கல்கி



''எதிரியின் வீரத்தைப் பற்றி படை வீரர்கள் திகைப்பாய்ப் பேசுகிறார்கள் மன்னா...''

''எனது வீரம் பற்றி...?''

''நகைப்பாய்ப் பேசுகிறார்கள்...''

- கே.ஆனந்தன்

''தலைவர் என்ன விளம்பரம் பண்ணியிருக்கார்?''

''அடுத்த தேர்தலில் கள்ள வோட்டுப் போட கொட்டேஷன் கள் வரவேற்கப்படுகின்றன.''

- சாயம் வெ.ராஜாராமன்



திரு திரு



''ஏங்க, தீபாவளிக்கு என்ன பண்ணணும்?''

''எதுவும் பண்ணாம இருந் தாலே போதும்!''

- தென்றல் சண்முகசுந்தரம்

பாஷை!

"நீங்க எதையுமே மாத்தி யோசிக்கிறவரா?"

"எப்படிக் கண்டுபிடிச்சீங்க டாக்டர்?"

"ஸ்கேன்ல உங்க மூளை திசை திரும்பி நிக்குதே!"

- அம்பை தேவா





"வாய் பாஷையைவிட கண் பாஷை நல்லா வருது உங்க பையனுக்கு..."

"எப்படி சொல்றீங்க சார்?"

"எந்தக் கேள்வி கேட்டாலும் 'திருதிரு'ன்னு முழிக்கிறானே...!"

-கே.ஆனந்தன்

"கட்சியைப் பலப்படுத்தணும்னு அலை அலையா புறப்பட்டுட்டாங்க."

"மக்களுக்குச் சேவை செய்யவா?"

"ஊகூம்; நிதி வசூல் பண்ண!"

- சீர்காழி வி.ரேவதி



கலக்க வருதுப்பா

கல்கி

ரீடர்ஸ் கெட் ரெடி

எதையுமே... பெஸ்ட்டா பார்த்து செலக்ட் பண்ணும் ரசனை உடைய திருச்சி மாவட்ட வாசகர்களே!

இப்ப உங்க ஊருக்கே வருது கல்கி டீம்...

எதெல்லாம் எழுதுவீங்க..?

* உங்க ஊர் பெருமைகள் * வெற்றிக் கதைகள் * உங்க ஊர் பெஸ்ட்டைப் பாழ்படுத்தற வொர்ஸ்ட் * பின்னோக்கி இழுக்கும் பிரச்னைகள் * புகழ்பெற்ற கல்வி நிறுவனங்கள் * வி.ஐ.பி. இன்டர்வியூ
* மிஸ்டர்/மிஸ் மாவட்டம் யாரு?
* தொழிற்சாலைகள்

டூரிஸ்ட் ஸ்பாட்டையும் எழுதுங்க ஸார்...

கண்டிப்பா... கல்லணை, முக்கொம்பு... இன்னும் என்னவெல்லாம் இருக்குன்னு சொல்லுங்க

எழுத்தாளர்களுக்கு...?

* நச்சுன்னு கதை கொடுங்க * ஜில்லுன்னு ஜோக்ஸ் தாங்க * துணுக்கு தட்டிவிடுங்க * ஸ்பெஷலா கவிதை அனுப்புங்க

அப்ப ஆன்மிகம்?

மோஸ்ட் இம்பார்ட்டண்ட் ஆச்சே!
* மலைக்கோட்டை * ஸ்ரீரங்கம் * சமயபுரம்... எல்லாமே உங்க மாவட்டம்தானே...

வாசகர்கள் என்ன பண்ணணும்...?

நீங்கதான் ரொம்ப முக்கியம். உங்க மாவட்டத்தைப் பத்தி நீங்க அனுப்புற தகவல்கள்தான் திருச்சி ஸ்பெஷல் இதழ்களுக்கே அஸ்திவாரம்!

விவரங்கள் எதிர்ப்பக்கத்துல இருக்கே!



ஆமாம்! உங்கள் திருச்சி மாவட்டத்துக்கு 'கல்கி' டீம், நேரில் வந்து உங்கள் பிரச்னை / யோசனையை ஆராய்ந்து, உங்கள் வாய்ஸுக்கு 'கல்கி' இதழ் மூலம் மைக் கொடுக்கும்!

சில சிம்பிள் கண்டிஷன்ஸ்...

- கீழே உள்ள கூப்பனைக் கத்தரித்து ஒட்டி அனுப்பப்படும் கடிதம், படைப்பு மட்டுமே, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்...
- ஒரு கடிதத்தில் 5 செய்திகள் / படைப்புகள் மட்டுமே இருக்கலாம்.
- ஒருவரே எத்தனை கடிதம், படைப்புகள் வேண்டுமானாலும் அனுப்பலாம் (தனித்தனி கூப்பனுடன்).
- பிரசுரமாகும் கடிதங்கள், யோசனைகள், படைப்புகளுக்குச் சன்மானங்கள் உண்டு.
- வாசகர்கள் தேர்வு செய்யும் மிகச் சிறந்த கடிதம் அல்லது யோசனை அல்லது படைப்புகளுக்குச் சிறப்புப் பரிசும் உண்டு...
- திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின்.... பிரச்னைகளுக்கு - ☑ பெட்டிஷன் பாக்ஸ்

ஆன்மிக, வியாபார, சுற்றுலா தலங்களின் சிறப்புக்கு - ☑ நியூஸ் ஏந்தி பவன்

சிறுகதைகள், கவிதைகளுக்கு - ☑ வேடந்தாங்கல்

நகைச்சுவைக்கு - ☑ ஜோக் ஃபால்ஸ் என்றவாறு கூப்பனில் ☑ செய்து கவரின் மேல் ஒட்டி, உங்களின் முழு முகவரி, தொலைபேசி தொடர்பு எண் ஆகியவற்றைக் கட்டாயம் எழுதி அனுப்பவும்.

வர்றோம்...

கடிதங்கள் வந்து சேரவேண்டிய கடைசி தேதி : 13.12.2009

கலக்க வருதுப்பா கல்கி
திருச்சிராப்பள்ளி

☐ நியூஸ் ஏந்தி பவன் ☐ பெட்டிஷன் பாக்ஸ்
☐ வேடந்தாங்கல் ☐ ஜோக் ஃபால்ஸ்

47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

நீங்க ச்சும்மா கோடு போடுங்க... நாங்க உடனே ரோடு போடறோம்!

"எனக்கு அரசியல் மீது காதல்!"

சில சினிமா நட்சத்திரங்கள் எந்தப் பத்திரிகையாளர் தொலைபேசியில் தொடர்பு கொண்டாலும், உடனே ஏன் கிடைப்பதில்லை என்பதற்கு இன்னோர் உட்காரணமும் இருக்கலாம். அவர் ஏதேனும் கத்துக்குட்டி நிருபரிடம் மாட்டிக் கொண்டு அவஸ்தைப்பட்டிருக்கலாம்.

ஒரு நடிகரை, நடிகையை, டைரக்டரை நேர்காணல் செய்யச் செல்லும் முன் அவரைப் பற்றி ஹோம் வொர்க் செய்து விட்டுப் போக வேண்டும். அப்போதுதான் அவர் நம்மிடம் சகஜமாக இன்வால்வ் மெண்டுடன் பேசுவார். அவரது நிறை குறைகளைச் சுட்டிக் காட்ட முடியும். அவர்களும் ஆர்வத் துடன் பதிலளிப் பார்கள்.

இப்படித்தான் கடந்த ஆண்டு ஒரு நிருபர் இயக்குநர் அகத்தியனைப் பேட்டி எடுக்கச் சென்றிருக்கிறார். 'உங்கள் முதல்பட அனுபவம் எப்படியிருந்தது? அந்த வாய்ப்பு எப்படி கிடைத்தது? 'காதல் கோட்டை'க்குப் பிறகு அடுத்த படத்துக்கு இத்தனை இடைவெளி ஏன்?' என்பதுபோல கேள்விகள் கேட்டதும் அகத்தியன் நொந்து விட்டார்.

உடனே (வேறொரு அறைக்குப் போய்) அந்த நிருபரை அனுப்பிய பி.ஆர்.ஓ. மௌனம் ரவிக்கு ஃபோன் செய்து, "என்ன ரவி, என்னைப் பத்திக் கொஞ்சம் விவரம் தெரிந்தவராக அனுப்ப வேண் டாமா? வந்தவர் நான் 'காதல் கோட் டை'க்குப் பிறகு இப்போதுதான் அடுத்த படம் இயக்குவதாக நினைத்துப் பேசு கிறார். அதற்கு முன் மூன்று படங்களும், அதற்கு பிறகு ஐந்து படங்களும் இயக்கி யாகிவிட்டது. அவருக்குத் தெரிய வில்லை!" என்று சொல்லி வருத்தப் பட்டாராம்.



"மணிக்கணக்காக இயற்கையை ரசிப்பேன்: மழையின்போது கிளர்ந்தெழும் மண்வாசனை பிடிப்பேன்!"

புதிய சினிமா நிருபர்களிடம் பேச நட்சத்திரங்கள் தயங்குவதற்குக் காரணம் இதுதான். எனக்கும் இப்படி ஓர் அனு பவம் நேர்ந்தது.

ரஞ்சிதா கொஞ்சம் 'படாபட்' என நேருக்கு நேர் பேசிவிடும் சுபாவம் கொண் டவர்.

அவர் அதிகப் படங்களில் நடித்துக்



இவங்க இப்படித்தாங்க... 7

கொண்டிருந்த நேரம் அது. ரஞ்சிதாவின் தந்தையிடம் அப்பாயின்மெண்ட் வாங்கி, காலை பத்து மணிக்கு அவர் வீட்டுக்குப் போயிருந்தேன்.

''மேடம் ஷூட்டிங் கிளம்பிட்டாங்களே, அரை மணிநேரம் முன்னாடியே வந்திருக்கக் கூடாதா...?'' என்றார் அவரது தந்தை.

ரஞ்சிதா என்னைப் பார்த்தார். எங்கள் முதல் சந்திப்பு வேறு. நான் புது நிருபர் என்பதாலோ என்னவோ, ''சரி பத்து நிமிஷத்துல என்ன கேள்வி கேட்கணுமோ கேளுங்க. நான் ஷூட்டிங் போகணும்!'' என்று பரபரப்பாகச் சொன்னார்.

பத்து நிமிடத்தில் என்ன பேசிவிட முடியும்... எனக்குள் கேள்வி எழுந்தது. சரி என்று பேச்சுக்குத் தயாரானேன். பத்து நிமிஷத்துல பேசி முடிச்சுடுவோம் என்று ஆர்வம் இல்லாமல் பேச உட்கார்ந்தவர் அன்றைக்கு என்னிடம் ஒன்றரை மணி நேரம் கலகலப்பாகப் பேசினார்.

''ரஞ்சிதா ஓர் அழகான பெண். அவரை நிறைய பேர் காதலிக்கிறார்கள், காதலிப்பார்கள். இது ஊருக்கே தெரியும். ரஞ்சிதா காதலிக்கும் விஷயங்கள் என்ன? ஸ்போர்ட்ஸ், புக்ஸ், சினிமா, அரசியல், ஆன்மிகம் எதன் மீது ரஞ்சிதாவின் காதல்?'' என்று கேட்டதும் உற்சாகமாகிவிட்டார்.

''எனக்கு அரசியல் மீது ஆர்வம் அதிகம். அதற்காக எந்தக் கட்சியில் சேரப் போகிறீர்கள் என்று கேட்டு விடாதீர்கள். அரசியலில் ஆர்வம் உண்டு. எந்தக் கட்சியிலும் சேரும் எண்ணமில்லை'' என்றார்.

தனக்குப் பிடித்த புத்தகங்களின் பட்டியலைச் சொன்னதோடு, ''ஒவ்வொரு புத்தகம் பற்றி பின்பக்கம் இருக்கும் குறிப்பைப் பார்த்துவிட்டுத்தான் வாங்குவேன்'' என்

சபீதா ஜோசப்

றார்.

''ஸ்போர்ட்ஸ்ல நிறைய விருப்பம் இருக்கு. ஆம்பளை பையன் மாதிரி ஜீன்ஸ் பேண்ட் டீ-ஷர்ட் போட்டுக்கிட்டு கிரிக்கெட்தான் அதிகமா விளையாடுவேன். அதெல்லாம் படிக்கிற காலத்தோடு சரி'' என்றவர், சினிமாவைத் தவிர உலக நடப்பு பற்றி நிறைய பேசினார். பெண் உரிமை, அன்னை தெரசாவின் சேவை, பாரதியாரின் கவிதை, நெல்சன் மண்டேலாவின் தியாகம், இந்திய ராணுவத்தின் அர்ப்பணிப்பு, இயற்கையை ரசிப்பது, மழையின்போது வரும் மண் வாசனை... இப்படி தனக்குள் காதல் கொண்ட விஷயங்களை அடுக்கினார்.



அகத்தியன்

அன்று முதல் ரஞ்சிதா மிகுந்த நட்பாகிவிட்டார். அதன்பின் எங்கு பார்த்தாலும் நின்று பேசிவிட்டுத்தான் செல்வார்.

தொடர்ந்து இரண்டு மூன்று படங்களில் சத்யராஜ் ஜோடியாக ரஞ்சிதா நடித்ததும் இருவர் பற்றி கிசுகிசு கோலிவுட்டில் புயலாகக் கிளம்பியிருந்தது. ரகசிய திருமணம் என்பது வரை அந்த வதந்'தீ' பரவியிருந்தது. ஒரு நாள் வாகினி ஸ்டுடியோவில் ரஞ்சிதாவைப் பார்த்தேன்.

''எப்படியிருக்கிறீர்கள், உங்களுக்கும் அந்த கிசுகிசுவுக்கு விளக்கம் கேட்கணுமா?'' என்றார்.

''ஸாரி நான் அதைக் கேட்கவரலை. உங்களைப் பார்த்து ரொம்ப நாளாகிவிட்டது. எப்படியிருக்கீங்க? அடுத்து என்ன படங்கள் பண்றீங்க...?'' இப்படி சிறிது நேரம் பேசிவிட்டுப் புறப்படும்முன் சொன்னேன்.

''பொதுவாக சத்யராஜ் அன்று முன்னணியிலுள்ள ஹீரோயின்களுடன் இரண்டு படங்கள் நடிப்பது வழக்கம். அதன்பிறகு இன்னொரு முன்னணி நடிகையுடன் நடித்துக்கொண்டிருப்பார். இது வர்த்தகம். இதை எப்படி தப்பு சொல்ல முடியும்? ரெண்டு படம் சேர்ந்து நடித்த உடனே கிசுகிசுவா...? இது சரியில்லை'' என்றேன்.

''ரொம்ப தேங்க்ஸ்'' என்று அழுத்தமாகக் கைகுலுக்கிச் சென்றார். அடுத்த வருடத்தில் அதே ரஞ்சிதா என்னைப் பார்த்தும் பார்க்காமல் போனார். காரணம் அப்போது குமுதம் செய்த குசும்புதான். அதற்காக அவர் வழக்குத் தொடுத்தார். வழக்கம்போல பத்திரிகை வருத்தம் தெரிவித்து ஜகா வாங்கியது.

(அடுத்த வாரம்: இயக்குநர் ஷங்கர்)

தூறல் கவிதை



நீ நனையாது
குடைபிடித்துப் போகிறாய்
உனைத் தொடமுடியாத
துக்கத்தில்
கம்பி வழியே கண்ணீர்
வடிக்கிறது மழை...

- கதிர்பாரதி

அருள்வாக்கு

கானல் நீர்

பாலைவனங்களில் நிறைய மான் கூட்டங்கள் இருக்கும். அவற்றுக்கு வெயில் காலத்தில் 'ஹ ஹ' என்று தாஹம் எடுக்கும். ஆனால், பாலைவனத்தில் ஜலம் கிடைக்குமா? கிடைக்காவிட்டால் போகிறது. அங்கே ஜலமே கிடைக்காது என்பதாவது தெரிந்துவிட்டால் மான் கூட்டம் பாலைவனத்தை விட்டு வெளியிலே உள்ள நீர் வளமுள்ள நாட்டுக்கு ஓடிவந்து உயிரைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். ஆனால், இதையும் செய்ய முடியாமல் ஜலமே இல்லாத பாலைவனத்தில் ஜலம் இருக்கிற மாதிரி ஒரு ஏமாற்று ஜாலம் நடக்கிறது. அதுதான் கானல்நீர் என்பது. ப்ரதிபிம்பம் (reflection), ஒளிச்சிதறல் (refraction),'தியரி'களைக் கொண்டு ஸயன்ஸில் இதை விளக்குகிறார்கள். மொத்தத்தில் இது என்னவென்றால், பாலைவனம் மாதிரியான ஒரு விஸ்தாரமான வெளியில் ரொம்பவும் உஷ்ணம் ஏறிப்போய், காற்று ப்ரதேசம் லேசாகி விடுகிறபோது, தூரத்திலிருந்து பார்க்கிறவர்களுக்கு ஜலத்திலே ப்ரதிபிம்பம் தெரிகிறமாதிரி மண்ணிலேயே தெரிகிறது. தூரத்திலிருந்து பார்க்கிறபோது வெறும் மணற்பாங்கான பூமியே ஒரு நதி ஓடுகிற மாதிரி தெரியும். அதை நோக்கிப் போகப் போக, அதுவும் தள்ளிப் போய்க் கொண்டேயிருக்கும்.

இப்படிப்பட்ட கானல் நீரைப் பார்த்து மான்கள் வாஸ்தவமான ஜலம் என்று நினைத்து அதைத் தேடித் தேடி ஓடி கடைசியில் ஓட முடியாமல் களைத்து, வெயிலின் உஷ்ணம் தாங்காமல், ரொம்பவும் பரிதாபமாக ஜீவனை இழக்கும். ஸம்ஸ்க்ருதத்தில் 'ம்ருக்' என்றால் 'தேடுவது' என்று அர்த்தம். ஓயாமல் எதையாவது தேடி ஓடிக்கொண்டே இருப்பதுதான் 'ம்ருகம்'. கானல் நீரைத் தேடி ஓடி மடிவது மான் என்ற ம்ருகத்தின் பரிதாபமான கார்யமாக இருக்கிறது!

லோகமெல்லாம் மாயை என்று அத்வைத சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது. 'அதெப்படி மாயை? லோகம்தான் கண்ணுக்குத் தெரிகிறதே?' என்று கேட்டால், 'கானல் நீர் கூடத்தான் கண்ணுக்குத் தெரிகிறது. அதனால் அது நிஜமாகிவிடுமா? அப்படித்தான் இந்த லோகமும் ஒரு கானல் நீர்' என்று அத்வைத க்ரந்தங்களில் சொல்லியிருக்கிறது.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்



கருப்பனின் தோற்றப் பிழை!

பேருந்தை விட்டு இறங்கி, நடக்கத் தொடங்கியதுமே எனக்குள் உதறல் எடுக்க ஆரம்பித்தது.

ஒரு மாதம் முன்புதான் இந்த காலனிக்குக் குடி மாறினேன். தனி வீடு, அட்வான்ஸ், வாடகை... எல்லாமே என் கைக்குள் அடக்கம். மகனின் பள்ளிக்கூடம் பத்து நிமிட நடையில் என்று பல சௌகரியங்கள் கிடைத்தபோதும், என்னால் நிம்மதியாய் இருக்க முடியவில்லை.

தன்னை நினைக்க வேண்டும் என்பதற்காகவே, பகவான், பல சந்தோஷங்களைக் கொடுத்தாலும், நெருடலாய் ஒரு துன்பத்தையும் கொடுப்பான் என்று எங்கோ படித்ததாய் ஞாபகம்.

பேருந்து நிறுத்தத்திலிருந்து பத்து நிமிட நடையில்தான் வீடு. அந்தச் சந்தடியற்ற சந்தைக் கடக்கும்போதுதான் வினையே.

எனக்குள் சகல நரம்புகளும் விறைத்துக் கொண்டன.

அந்தத் திகில் சந்தினுள் நுழைந்து கால்வாசி தூரம் கடப்பதற்குள் 'உர்'ரென்ற உறுமல் சத்தம் காதில் விழுந்ததும் எனது உரோமக் கால்கள் குத்திட்டு நின்றன.

அதோ ஜொலிக்கும் கண்களுடன் 'கருப்பன்' வந்துவிட்டான். அழுக்கேறிப் போன தெரு விளக்கின் மெலிந்த வெளிச்சத்தில், கருப்பனின் கண்கள் தீப்பந்தாய் எரிக்க, பல்லை அருவருப்பாய்க் காட்டியபடி, என்னைப் பார்த்துக் குரைத்தான். பயத்தில் எச்சிலை விழுங்கினேன்.

மழையோ, வெய்யிலோ, எப்போதும் என்னிடம் குடை வைத்திருப்பேன். தயாராய் கையில் வைத்திருந்த குடையை, என்னைச் சுற்றிச் சுழற்றினேன். 'ஏய், கருப்புத் தடியா, சனியன் பிடிச்ச நாயே, காக்கக் காக்க, கனகவேல் காக்க, அப்படியே தூரமாய் நில்லு' என்று வாய்க்கு வந்ததையெல்லாம் உளறியபடி, வேக நடை நடந்தேன்.

என்னிலிருந்து ஐந்தடி தள்ளியே என்னைக் கடித்துவிடுவது போலத் தொடர்ந்த அந்த நாய், சந்தின் முனை வந்ததும் நின்றுவிடும், எப்போதும்! என்ன, 'லக்ஷ்மணன் கோடு' இருக்கிறதோ, தெரியாது!

வீடு வந்து சேர்ந்தேன்.

என் நிலையைக் கண்டு சிரிப்பை அடக்கியபடி பார்த்தாள் என் மனைவி.


சாப்பிட்டு முடித்து, டீ.வி.முன் வந்து உட்கார்ந்ததும், என் மனைவி சொன்னாள்.

''உங்க அண்ணன் ஃபோன் பண்ணினார். இரண்டு மாசம் முன்னாடி பத்தாயிரம் ரூபாய் பணம் கொடுத்தாரே, அதைத் திருப்பித் தர முடியுமா இப்பன்னு கேட்கச் சொன்னாரு.''

எனக்குச் சட்டென கோபம் வந்தது.

''உதவி செய்யற மாதிரி கொடுக்க வேண்டியது. உடனே மனசுக்குள்ள சந்தேகம்! பணம் திரும்பி வருமா, வராதான்னு சந்தேகப்படுறது!'' என்று அலுத்துக்கொண்டான். கனவில் கருப்பனும், அண்ணனும்

கிருஷ்ணா



ஓவியம்: தமிழ்

மாறி, மாறி, துரத்த, தூங்கிப் போனேன்.

அடுத்தநாள் மாலை அலுவலகத்துக்கு ஃபோன் வந்தது. என் மனைவிதான்.

''நாங்க கடைத் தெருவுக்குப் போயிட்டு ஆறரை மணி போல திரும்புவோம். நீங்களும் அந்த நேரம் திரும்பினீங்கன்னா, சேர்ந்தே போயிடலாம். கூடவே, உங்களுக்கு ஓர் அதிசயமும் காத்துக்கிட்டு இருக்கு'' என்றாள்.

ஐயோ, கருப்பனிடம் என் மனைவியும், மகனும் மாட்டிக்கொண்டால் என்னாகும்? மனசுக்குள் உதைக்கத் தொடங்கியது.

குடும்பத் தலைவனின் தர்மத்துடன், ஆறு மணிக்கே போய் பேருந்து நிறுத்தத்தில் இறங்கி, அவர்களுக்காகக் காத்திருந்தேன்.

ஆறரை மணிக்குச் சொன்னது போலவே வந்துவிட்டனர் மகனும், மனைவியும்.

''அய், அப்பா முகத்தைச் சாயந்திர வெளிச்சத்துல பார்க்க எவ்வளவு பிரகாசமாய் இருக்கு'' என்று கலாய்த்தான் என் சீமந்தபுத்திரன்.

''அது முகத்தோட ஒளி இல்லைடா, முன் வழுக்கையோட பிரகாச ஒளிச் சிதறல்'' என்று ரகசியம் பேசுவதுபோல என் மனைவி கேலி செய்ய, சிரிப்பு வந்தது.

கூடவே கருப்பனின் நினைப்பும் வந்தது.

''இதோ பாருங்க, ஜாக்கிரதை, அதோ அந்தச் சந்து திரும்பியதும், கருப்பன் இருப்பான்'' என்று எச்சரித்தேன்.

என் மகனும், மனைவியும் ஒருவரை ஒருவர் பார்த்துப் பூடகமாய்ப் புன்னகைத்தனர்.

''இன்னிக்கு உங்கப்பாவுக்கு அந்தச் சந்துல ஓர் ஆச்சரியம் காத்திருக்கு, இல்லையாடா?'' என்றாள் மனைவி. புரியாமல் நடந்தேன்.

என் கையைப் பற்றி சாந்தப்படுத்தினாள், மனைவி. எனது இரு பக்கமும், கவசமாய் அவர்கள் நடக்க ஆரம்பித்தனர்.

அதோ கருப்பன்! என்னைக் கண்டதும் 'உர்'ரென உறும ஆரம்பித்த அந்த நாய், என்ன நினைத்ததோ, வெறுமனே பார்த்தபடி நின்றது.

நம்பமுடியாத வியப்புடன் கருப்பனைப் பார்த்தேன்.

''இந்த நாய், புதுசாய்க் குட்டி போட்டிருக்குங்க. நாலு குட்டிங்க அழகாய் கறுப்பும், வெள்ளையுமாய். இருட்டிலே வரும்போது, நீங்க அங்கே இருக்கற அந்தச் சின்ன கட்டடம் பக்கம் போயிருப்பீங்க முதல்நாள். குட்டிங்களைப் பாதுகாக்க, கருப்பன் உங்களைப் பார்த்து பயந்து போய்க் குரைச்சிருக்கும். நீங்களும் அதைக் கண்டு பயந்துபோய், உங்க குடையை ஆட்டியிருப்பீங்க. இது தினசரி வாடிக்கையாய்ப் போயிருக்கணும். தன் குட்டிகளைப் பாதுகாக்க நினைக்கற ஒரு தாயோட உக்ரம் இது. பொதுவாகவே, மனிதனோட பயத்தை எளிதாய் மோப்பம் பிடிச்சிடும் நாய்ங்க...'' என்றாள் என் மனைவி.

''அம்மா, அதோ பாருங்க நாய்க்குட்டிகளை'' என்று உற்சாகமாய்க் கத்தினான் என் மகன்.

''கடைத் தெருவுக்குப் போறப்ப, இந்தச் சந்து வழியாய் வந்தோம். உங்க கருப்பனையும் பார்த்தோம். விஷயம் புரிஞ்சது. ரொட்டி வாங்கிப் போட்டேன். எல்லா

மழைக்காக வைத்திருந்த குடையை, கருப்பனை நோக்கிச் சுழற்றினேன்!



செயல்களுக்குமே மூன்றாவது கோணம்னு ஒண்ணு இருக்குதானே'' என்றாள் என் மனைவி.

''அதென்ன மூணாவது கோணம்?'' என்றேன்.

''பிரச்னைன்னு வந்தால் நாம பார்க்கற கோணம், எதிராளிங்க பார்க்கற கோணம், பிரச்னையை நிஜமாகவே தீர்த்து வைக்கிற நியாயமான கோணம். ஆக, அதுதான் மூன்றாவது கோணம்'' என்றாள்.

ஞானியைக் காண்பதுபோல மனைவியைப் பார்த்தேன்.

வீட்டுக்குத் திரும்பியதும் அண்ணனுக்கு ஃபோன் செய்தேன்.

''என்னாச்சு அண்ணா? திடீர் பணத் தேவைன்னு கேட்டியாமே. நீ கொடுத்த பத்தாயிரம் ரூபாய் போதுமா, இல்லை, கூட வேண்டுமா?''

என் கேள்வியினால் அண்ணன் நெகிழ்ந்திருக்க வேண்டும்.

''தாங்க்ஸ்டா! நீ இப்படிக் கேட்டதும் அழுகை வந்துடுச்சு'' என்றார்.

''என்ன அண்ணா இதுக்குப் போய்...''

''நம்ம வீட்டுக்குப் பின்னாடி பெரிய மாமரம் இருந்ததுல்ல, திடீர் பேய்க்காற்று அடிச்சதுமே, வேரோட சாய்ஞ்சு, நம்ம வீட்டு மேல விழுந்துடுச்சு. சமையலறை பக்கம் சுவர் இடிஞ்சு போச்சு. உடனே மராமத்து பண்ணியாகணும். இருபதாயிரம் செலவு ஆகும்னு காண்ட்ராக்டர் சொன்னார். அதான் உன்னிடம் இருந்ததுன்னா, போட்டுப் புரட்டிச் சரி பண்ணிடலாம்னு நினைச்சேன்.''

''நாளைக்கே அனுப்பிடறேன் அண்ணா. முடிஞ்சா நேரில் வந்தே கொடுக்கப் பார்க்கறேன்'' என்றேன்.

ஃபோன் பேசி முடித்ததும் என் மனைவி சொன்னாள்.

''இப்ப உங்களை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு.''

●



அடித்து நொறுக்கி
வாகாய் பெட்ரோல் ஊற்றி
உனை எரியூட்டிக் கொண்டிருக்கும்
கணத்தில்தான்
இதழில் தண்ணென்று
முறுவல் தாங்கி
ஒரு தம்ளர் தண்ணீரோடு
நீ நிகழ்ந்தாய்
சுவாசத்தில் புகைபோல
வெளியேறிக் கொண்டிருக்கிறது
கோபத்தின் சாயலோடு
ஏதோ ஒன்று!

- கதிர்பாரதி



நீங்க-ரொம்ப

ஜோடியாகத்தான் போட முடியும், அடிக்கடி காணாமல் போய் விடும் பொருள். ஆஃபீஸ் அவசரத்தில் ஒன்று மட்டும் கைகளில் சிக்கி இன்னொன்று எங்கே என மொத்த வீடும் தேடும் ஐட்டம். இத்தனை பில்ட்அப்புடன் உங்கள் முன் வருபவர் திரு அண்ட் திருமதி சாக்ஸ்! பார்ப்பதற்கு வேண்டுமானால் சிறியது. ஆனால், ஒருவரின் லைஃப் ஸ்டைல், ஃபேஷன் சென்ஸ் இவற்றை அவர் அணியும் சாக்ஸைக் கொண்டே ஈஸியாகச் சொல்லிவிட முடியும்.

ஆண்களின் தோஸ்த் சாக்ஸ். அதற்காகப் பொட்டுப் பொட்டாக கிழிந்து, எலாஸ்டிக் போன சாக்ஸ் போடாதீர்கள். இதோ சில டிப்ஸ்...

★ வெள்ளை நிற சாக்ஸ் ஆஃபீஸுக்குப் பொருந்தாத ஒரு கலர். ஸ்போர்ட்ஸ், ஜாகிங், வாக்கிங்... போன்ற நேரங்களில் மட்டுமே வெள்ளை சாக்ஸ்களைப் பயன்படுத்த வேண்டும்.

★ பான்ட் கலருடன் மாட்ச்சாகும் சாக்ஸ் வாங்கினால் சரியாக இருக்கும். ப்ளாக், நேவி ப்ளு, பிரௌன்... போன்ற டார்க் கலர் சாக்ஸ் எப்போதுமே ஸ்டாக்கில் வைத்துக் கொள்வது நன்று.

★ பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளின் சீருடையில் சாக்ஸ் மிக முக்கியம். க்ளீனாக, பளிச்சென்று ட்ரஸ் பண்ணியிருக்கும் குழந்தைகளின் முகத்தில் சந்தோஷமும் தன்னம்பிக்கையும் ஒரு துளி கூடுதலாக இருக்கும்.

★ சாக்ஸ் நிட்டிங் மெஷினைக் கண்டுபிடித்தது 1589ல். கைகளால் பின்னுவதை விட ஆறு மடங்கு வேகமாக மெஷினால் செய்ய முடியும்.

★ சில்க், காட்டன், நைலான், வுல்... போன்ற மெட்டீரியலில் காலுறைகள் உண்டு.

★ முதன்முதலாக 1940-ல் நியூயார்க்கிலிருக்கும் ஒரு ஸ்டோரில் நைலான் சாக்ஸ் அறிமுகமாக, ஒரே நாளில் 72,000 ஜோடி சாக்ஸ் விற்பனையானதாம்!

★ எட்டாம் நூற்றாண்டிலிருந்தே சாக்ஸ் அணியும் வழக்கம் ஃபேஷனில் இருந்திருக்கிறது.

★ முதன்முதலாக விலங்குகளின் தோலி



முக்கியமானவிங்க!

னால் சாக்ஸ் செய்யப்பட்டது.

★ சாக்ஸ் மியூஸியம் என்றே வெளிநாட்டிலிருக்கிறது. ஆன் லைனிலும் பார்க்கலாம்.

★ தொலைந்துபோன ஒற்றை சாக்ஸ்க்கெனவே ஒரு குழு அமைத்து இயக்கமாக ஆரம்பித்து நடத்தி வருகிறார் ஒரு வெளிநாட்டவர்!

★ மெத்தென்ற சாக்ஸ் காலுக்கு இதம். நம்மூர் தட்பவெப்ப நிலைக்கு காட்டன் சாக்ஸ்தான் பெஸ்ட்.

★ ஒரு சாக்ஸ் யூஸ் பண்ண ஆரம்பித்தால் ஆறு மாதத்துக்குப் பிறகு குட்பை சொல்லி விடவும்.

★ நீங்கள் சேரில் உட்காரும்போதும், க்ராஸாகக் கால்களை மிடுக்காக ஒன்றன் மீது ஒன்று போட்டு ஸ்டைல் காட்டும் போதும் எட்டிப் பார்க்கும் சாக்ஸ்களை எல்லோருமே கவனிக்கத்தான் செய்கிறார்கள்.

★ கால் பந்தாட்ட வீரர்களின் கண்கவர் சாக்ஸ்கள் கொள்ளை அழகு. ஒவ்வோர் அணிக்கும் அடையாளமாக ஒவ்வொரு டிஸைன், கலரில் சாக்ஸ்.

★ காட்டன், நைலான்... என இரு வகைகளில் சாக்ஸ் வரும். உங்கள் உடல் வாகுக்கு ஏற்ப வாங்கி உபயோகப்படுத்தவும்.

★ பொதுவாக ப்ளைன்தான் அதிகமாக வரும். சின்னச் சின்ன டிஸைன் போட்ட சாக்ஸ்களும் உண்டு.

★ தினமும் சாக்ஸைத் தோய்க்கப் போடவும். சிலர் ஷூவைக் கழற்றிய உடனேயே ஏரியா முழுவதும் நாற ஆரம்பித்துவிடும். 'நாங்க மோசமானவங்களிலேயே ரொம்ப முக்கியமானவங்க' என்று ஜோடியாக, தெனாவட்டாகப் பேசும் சாக்ஸை அப்படியே அள்ளி சோப் வாட்டரில் முக்கவும்.

★ பாக்டீரியாவிலிருந்து கால்களைக் காப்பாற்றுவது சாக்ஸ். நீரிழிவு நோயாளிகளுக்கென டயாபடிக் சாக்ஸ் உண்டு.

★ மினிமம் ஆறு ஜோடி சாக்ஸ் இருக்க வேண்டும்.

- லதா சேகர்

நட்சத்திர சிறுகதை 6



அவளது தேர்வு

வாஸந்தி



கோபு உள்ளே நுழைந்ததும், ''அவங்க இன்னும் தூங்கறாங்க. தூங்கட்டும். இரவு முழுக்க தூங்கலே. எழுந்ததும் வழக்கம் போல கவனிச்சுக்க. சாப்பாடெல்லாம் சாப்பாட்டு மேஜை மேல இருக்கு. கவனம், அவங்க எழுந்திரிக்கும்போது கீழே விழுந்துறாம பாத்துக்க. பெட் ரூமிலே ஒரு கண் வெச்சிரு.''

கோபு எல்லாவற்றுக்கும் மௌனமாகத் தலையசைத்தான். இதையெல்லாம் நீ சொல்லவேண்டியது தேவையா என்று நினைப்பான். அவளுக்கே தெரிந்தது. கிளிப்பிள்ளைபோல தினமும் தான் இதைச் சொல்வதும் அவன் மௌனமாகத் தலையாட்டுவதும் - எழுதப்பட்ட சினிமா வசனத்தை ஒப்பிக்கவேண்டிய கட்டாயத்தில் இருப்பதுபோல. அவளது இயலாமையின் அடையாளம் அது என்று கோபுவுக்குத் தெரியாது. மூப்பின் அறிகுறியாகக்கூட இது இருக்கலாம். வரக்கூடாத வயதில் நரேனுக்கு மூளை மூப்படைந்து போனது போல. நாளை என்பதைப் பற்றி நினைப்பதையே நிறுத்தியாகிவிட்டது. நாளை என்பது மற்றொரு நாள்.

ரொம்ப நாள் முன்பு அலுவலகத்தில் அக்கௌன்டென்ட் மாலதி சொன்னாள். ''தப்பா நினைச்சுக்காதே, உன்னைப் பாத்தா நீ டென்ஷன்லே இருக்கற மாதிரியே தெரியல்லே.''

அவள் என்ன சொல்கிறாள் என்று புரிந்தாலும் அவள் குரலில் தெரிந்த அசூயைக்குக் காரணம் விளங்காமல் அவள் சிரித்தாள். ''என்ன டென்ஷன்?''

''வீட்டிலே நோயாளி புருஷன் என்கிற டென்ஷன் இல்லையா?''

''ஆஃபீஸுக்கு என்னோடு அது வராது!''

''நீ எப்படி இப்படிச் சிரிக்கிறே?''

இந்தக் கேள்வியில் ஒரு குரூரம் இருந்ததாகப்பட்டது. அது தனது கற்பனையாக இருக்கலாம் என்று அவள் ஒதுக்கி பணிக்கு விரைந்தாள். மாலதி சொன்னதே மறந்தும் போயிற்று.

லஞ்ச் ப்ரேக்கில் அவளைத் தேடிக்கொண்டு காஷியர் உமா வந்தாள். சற்று நேரம் ஊர் வம்பு பேசிவிட்டு, ''அந்த மாலதி காலையிலே உன்கிட்ட பேசினதைக் கேட்டுக்கிட்டுதான் இருந்தேன். அது மகா பொறாமை புடிச்சது'' என்றாள்.

''எதுக்குப் பொறாமை?''

''வீட்டையே மறந்து உன்னால வேலை செய்ய முடியுது. ப்ரமோஷன் கிடைக்குது.''

அவள் பதில் சொல்லாமல் சாப்பிடுவதில் ஆழ்ந்தாள்.

''நீ இன்னும் இளமையா இருக்கே. அழகா டிரெஸ் பண்ணிக்கிறே!''

இரண்டுக்கும் இவர்கள் முடிச்சுப் போடுகிறார்கள் என்று புரிந்தும், அதைக் கவனியாதவள் போல சிரித்தபடி சொன்னாள்.

''அவங்களும் பண்ணிக்கிறாங்களே?''

''நல்லாவா இருக்கு?''

''உமா இங்க வந்து வம்பு பேச வேணாம்.''

''நானா பேசறேன்? மத்தவங்க இல்ல பேசறாங்க? அவளே சொல்றா. புருஷன் அப்படிக் கிடக்கறான்... இவளுக்கு எதுக்கு இத்தனை சிங்காரம்கறா.''

அவள் தனக்குள் பொங்கிய உணர்வு

களை அடக்கிக்கொண்டு நிதானமாக டிஃபன் டப்பாவை மூடிவிட்டுச் சிரித்தாள். ''வேலை பாக்கற இடத்துக்கும் என் சொந்த வாழ்க்கைக்கும் என்ன சம்பந்தம்?''

''நீ ரொம்ப ஆச்சரியமான பெண்!'' என்று உமா நற்சான்றிதழ் அளித்தபோது, அவள் பதில் சொல்லாமல் கழிப்பறைக்குச் சென்று கதவைத் தாளிட்டுக்கொண்டாள். தனிமையில் அங்கு அமர்ந்து கண்ணீர் விட்டதை நினைத்து இப்போது வெட்கம் ஏற்பட்டது.

அவள் அலுவலகத்துள் நுழைந்தபோது பல தலைகள் திரும்பிப் பார்த்தன. அந்தப் பார்வைக்குப் பின்னால் இருந்த சங்கேதங்களை லட்சியம் செய்யாமல் தன் மேஜைக்குச் சென்று அமர்ந்தாள். கம்ப்யூட்டரைத் தட்டி அது உயிர் பெற்றதும் பல பிம்பங்கள் விழித்தெழுந்தன. தபால் திறந்து கொண்டது. குமரனிடமிருந்து மெயில் வந்திருந்தது. ''அப்பா எப்படி இருக்கிறார்? நீங்கள் கூப்பிட்டவுடன் நான் கிளம்பிவருவேன்; தைரியமாயிருங்கள்.''

மனத்தின் அடி ஆழத்திலிருந்து ஏதோ பொங்கிப் பொங்கி எழுந்தது. வெளிநாட்டுக்குப் போகவே மாட்டேன் என்று அடம்பிடித்த பிள்ளை. 'அப்பாவை நீ தனியா பார்த்துக்கும்படி விட்டுட்டுப் போகமாட்டேன்' என்று அழுத பிள்ளை. மிகப் பிரபல அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் கிடைத்தற்கரிய சீட்டும் உதவித் தொகையும் கிடைத்த பிள்ளை, உணர்ச்சிவசப்பட்டுப் பேசுவதும் பிடிவாதம் பிடிப்பதும் தேவையற்றதாகத் தோன்றிற்று. 'நான் உதவிக்கு ஆள் போட்டுக்கறேன். படிப்பு முடிஞ்சு வந்து பொறுப்பை ஏத்துக்க. இப்ப வாய்ப்பை விடக் கூடாது' என்று கட்டாயப்படுத்த, 'உங்க வாழ்க்கையையும் வாழ வேண்டியது முக்கியம்மா. நாட்டியத்தை விடாதீங்க. சங்கீதத்தை விடாதீங்க.'

கம்ப்யூட்டர் திரையில் நரேன் எட்டிப் பார்த்தான். 'பாத்தியா மயில் எப்பிடி ஆடுது பார். உன்னைவிட நல்லா.'

அவன் பேசுவது இப்போது யாருக்கும் புரிவதில்லை. வார்த்தைகள் குழறி மிகப் பிரயாசையுடன் வெளியேறுபவை. அவனுக்கு மட்டுமே புரிபவை. அவனுடைய செவிகளுக்காக மட்டுமே சொல்லப்பட்டவை என்பதால் மற்றவர்கள் புரிந்துகொள்ளாமல் போவதும் நல்லது



காதல் கவிதை

சூல்கொண்ட முகிலென
முப்போதும்
கொட்டிவிட தயாராகவே
இருக்கின்றன
உன்னிடம் சொற்கள்
அதன் ஈரம் உண்டு
முளைத்துவிடுகிறது
ஒரு கவிதை...

- கதிர்பாரதி

தான்.

ஆச்சரியமாக இருந்தது அவனுள் ஏற்பட்டிருக்கும் மாற்றம். நோயினால் ஏற்பட்ட மாற்றம் என்கிறார் மருத்துவர். ஆனால் அவனது சிந்தனைகள், அவற்றுள் புகுந்து கொள்ளும் அசூயை, வெடிக்கும் வன்மம், துன்புறுத்துவதற்காகச் சொல்லப்பட்டவையாகத் தோன்றும். அவளது நாட்டியத்தை ரசித்தவன். அவளது அழகை ஆராதித்தவன். 'நீ என்னைக்கும் இப்படியே இருக்கணும். இருக்கும்படி வெச்சுப்பேன்' என்று நிலவைக் காட்டி உறுதிமொழி அளித்தவன். அசாதாரண அவளது அறிவாற்றலையும் பூவாக இருந்த மனசையும் கண்டு மோகித்து, வீட்டவர்களின் எதிர்ப்பையும் மீறி அவளது கையைப் பற்றியது நேற்று நடந்தது போல இருக்கிறது. பதிவுத் திருமணம் நடத்திக்கொள்ள கொட்டும் மழையில் அவர்கள் குடையைப் பிடித்து, அருகில்தானே இருக்கிறது என்று நடந்து சென்றதும், அவளது ஈரப் புடைவையும் அவனது ஈரப் பான்டையும் பார்த்து ரெஜிஸ்டிரார் பரிவுடன் டிரெஸ்ஸை மாத்திக்கணுமா என்று கேட்டதும், அதை நினைத்துப் பிறகு விழுந்து விழுந்து சிரித்ததும், நேற்று நடந்தது போல இருக்கிறது. 'மின்னல் வெட்டுது, இடி இடிக்குது, வானம் பொழியுது எங்களை ஆசீர்வதிக்க' என்றான் அவன் கவித்துவத்தோடு. பதிவேட்டில் கையெழுத்திட்டு அதைக் காண வந்திருந்த நான்கு நண்பர்களுடன் மீண்டும் மழையில் நடந்தார்கள். குளம் கட்டிய மழைநீரைக் கடக்க யாரோ வைத்திருந்த கற்களின் மேல் காலை வைத்து, அவன் அவளது கையைப் பிடித்து, 'வா இதுதான் நாம் வாழ்க்கையில் சேர்ந்து கடைப்பிடிக்கப்போகும் ஏழு வாக்குறுதிகள்' என்றான். சிறு பிள்ளைகள் போல கற்களில் தாவித்தாவிச் சென்றபோது சாத்திரங்களை அறிந்த ஞானத்துடன் அவற்றை அவன் விளக்கியது உடம்பில் சிலிர்ப்பை ஏற்படுத்தியது. 'இருவரும் ஒருவருக்கொருவர் உண்மையாக இருப்போம். வாழ்நாளுக்கும் சகதர்மிகளாக இருப்போம்.' அவன் முடித்துச் சிரித்தான். அவளுக்குக் கண்ணில் நீர் நிறைந்தது.

'மழை பெஞ்சா நல்ல சகுனம். நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்' என்றார்கள் நண்பர்கள். மேகக் கூட்டங்களில் மறைந்திருந்தவர்கள் அந்த ராணியைப் போல் கைவிரலைச் சொடுக்கிச் சாபமிட்டார்கள் என்று உணராமல். அன்று சொர்க்கவாசல் திறக்கப்பட்டதாகப் பரவசம் ஏற்பட்டது. அதுவே நரகத்துக்கும் வாசல் என்று ஐந்தே ஆண்டுகளில் புரிந்து போனது. அவனது பேச்சும் நடையும் நினைவாற்றலும் அசைவுகளும் மாற்றம் கண்டன. மூளை மூப்பின் அடையாளம் என்றார்கள். அதைக் கண்டுபிடிப்பதற்குள் ஐந்தாண்டுகள் ஓடிவிட்டன. அப்பவும் நம்ப



''தேர்தல்ல ஜெயிச்சு எம்.பி.ஆனதும் ஜனங்களுக்கு நல்லது பண்ணணும்யா!''

''சேச்சே... ஜெயிச்ச உடனேயே பதவியை நீங்க ராஜினாமா பண்ணினா நல்லா இருக்காது தலைவரே!''

- சுல்தானா



முடியவில்லை. உடம்பு இளமையாக இருக்கும் போது மூளைக்கு மூப்பு வருமா?

அத்துடன் அவனது சிந்தனைகள், பார்வைகள் மூப்படைந்ததுதான் விந்தை. 'பாடாதே. நாட்டியம் ஆடாதே. யாருக்கு அலங்காரம் செய்துக்கறே? கள்ளக் காதலுனுக்கா?' அவள் காதலித்தவன் அந்த நோயின் ஆக்கிரமிப்பில் காணாமல் போனான். இப்போது அவனது அதீதக் கற்பனைகளுடன் போராடுகிறான். தன் கட்டுக்குள் இல்லாத அவயவங்களுடன் போராடுகிறான். நகராத தேரை அவள் மட்டுமே வடம் பிடித்து இழுப்பது போல இருக்கிறது. இதற்கெல்லாம் என்ன காரணம் என்ற ஆராய்ச்சி கால விரயம் என்று தோன்றிற்று.

மின்னல் வெட்டுது.
இடி இடிக்குது.
வானம் பொழியுது
எங்களை ஆசிர்வதிக்க!

யாரோ சொன்னார்கள் என்று சென்ற மாதம் ஒரு ஜோதிடரைப் பார்க்கப் போனாள். அவருக்கு விடை தெரிந்திருக்கும் என்று. அவளுடைய ஜாதகத்தை மேலும் கீழும் பார்த்து 'இனி உங்களுக்கு நல்ல நேரம்மா' என்றார். 'உங்க பிரச்னையெல்லாம் தீர்ந்துடும்.'

எப்படி என்று கேட்க பயமாக இருந்தது. கட்டம் போட்ட அந்தத் தாளுள் அவளது வாழ்வின் ரகசியங்கள் அவளுக்குத் தெரியாமல் பதுங்கியிருப்பதான பயம் அவளைப் பற்றிக்கொண்டது. இந்த ஜோதிடரின் பிடியில் அவை சென்றுவிட்டதாக, அவள் நிர்வாணமாக நிற்பதாக கூச்சம் ஆட்கொண்டது.

'இனி உங்களுக்கு நல்ல காலம்.' அந்தச் சொற்களில் இருந்த அபத்தத்தைக் கண்டு அவள் தட்டில் பணத்தை வைத்து, கேள்வி எதுவும் கேட்காமல் கிளம்பினாள்.

இப்போது புரிந்துவிட்டது, எந்தக் கேள்விக்கும் ஒரு பதில் இல்லை என்பது; பல விடைகள் இருக்கின்றன; அதில் எதைத் தேர்வு செய்கிறோம் என்பது நமது விருப்பம்.

அவள் பகலில் முடிக்கவேண்டிய வேலைகளைத் துரிதமாக முடித்து, மதிய உணவுக்காக எழுந்திருக்கும்போது கோபுவிடமிருந்து ஃபோன் வந்தது.

(தொடரும்)


கண்ணனைத் தேடி...

ஸ்ரீ லலிதா

நான்காம் பாகம்

பண்டாரம் என்றால் நிதி என்று அர்த்தம். காலப் போக்கில் ஆண்டிப் பண்டாரம் என்பது ஒன்றுமே இல்லாது போனவர்களைக் குறிக்க ஆரம்பித்தது. சன்னியாஸிகளாக இருக்கக்கூடியவர்களைப் பார்த்து பண்டாரம் என்போம். ஏன் அந்தப் பெயர் வந்தது? உலகத்திலே லௌகீகமாக இருக்கக்கூடியவற்றையெல்லாம் துறந்துவிட்டு, எது பெரீய்ய... பொக்கிஷமோ, அந்தப் பொக்கிஷத்தை அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள், பரம்பொருளை அறிந்து அனுபவிப்பவர்கள் என்பதனால் அந்தப் பெயர் வந்தது.

காலப் போக்கில், பண்டாரம் என்றால் என்ன என்பது நமக்குத் தெரியாததனாலே, இல்லாதப்பட்டவர்களை, வசதி இல்லாதவர்களைப் 'பண்டாரம்' என்று சொல்ல ஆரம்பித்து விட்டோம்!

உலகத்திலேயே எது பெரிய நிதி? பெட்டி பெட்டியாக நோட்டுக் கற்றை இருப்பது பெரிய செல்வம் அல்ல! நோட்டு, பணம் என்பதன் அந்தஸ்தே நிறைய மாறியிருக்கிறது. ஒரு காலத்தில், தங்கம் இருந்தால் அதுதான் புழக்கத்தில் வரும். தங்க நாணயங்கள்தான் காசு - பணம் என்று பயன்பட்டன. பழைய கால அரசர்களின் நிர்வாகத்தில், அவரவர்களது இலச்சினையைப் பொறித்த தங்க நாணயங்கள் வெளியிடப்பட்டன. அவற்றைக் கொண்டு, பிற்காலத்தில் நாம் அவர்களது பெயர்களைத் தெரிந்து கொண்டோம். வராகன் என்றாலே பொற்காசு என்று வழங்கலாயிற்று. 'ஆயிரம் கட்டி வராகன்', 'பதினாயிரம் கட்டி வராகன்' என்றெல்லாம் சொல்லக் கேட்டிருக்கிறோம் அல்லவா?

வராகன் என்பது என்ன?

வராகன் என்று ஏன் தங்கக் காசுக்குப் பெயர் வந்தது என்று பார்த்தால், சாதவாகன மன்னர்கள் காலத்தில், அவர்களுடைய சின்னம் வராகம். அந்தச் சின்னத்தை அவர்கள் தங்கக் காசுகளில் பொறிக்கப்போக, காசுக்கே வராகன் என்று பெயர் வழங்கலாயிற்று. ஆயிரம் வராகன் என்பது வராக உருவம் பொறிக்கப்பட்ட ஆயிரம் பொற்காசுகள்.

தங்கம்தான் நீண்ட காலம் பண்டமாற்று நாணயமாக இருந்தது. காலப்போக்கில், கருவூலத்தில் தங்கம் அவ்வளவாக இல்லாவிட்டாலும் பரவாயில்லை, பொருளாதாரச் சுழற்சி நடக்க வேண்டும்; நடப்பது மாதிரி தெரியவாவது வேண்டும் என்பதற்காக, வெவ்வேறு விதமான நாணயங்கள் வரத் தொடங்கின. முகமது பின் துக்ளக் காலத்தில் தோலில்கூட நாணயங்கள் வெளியிடப்பட்டன. சீன தேசத்தில் குப்ளாய் கான் முதன்முதலில் காகிதப் பணம் வெளியிட்டார்; அதன் பிறகு இப்போது

7

சுதா சேஷய்யன்


ஸ்ரீ உமையாம்பிகை
சாக்கோட்டை

அதுவே புழக்கத்தில் இருக்கிறது.

அப்படியானால் 'பணம்', 'செல்வம்' என்பதன் அந்தஸ்தே மாறி விட்டது. தங்கம்தான் மிகப் பெரிது என்று ஒரு காலத்தில் சொல்லிவந்தோம். இன்றைக்கும் அதன் மதிப்பு ஏறிய வண்ணம்தான் இருக்கிறது. ஆனால், இன்றைக்கு அந்தத் தங்கத்தை வாங்குவதற்கும் காகிதப் பணமே பயனாகிறது!

மனித வரலாற்றில் நிதி என்பதன் மதிப்பு மாறிக் கொண்டேயிருந்திருக்கிறது; மாறிக் கொண்டேயிருக்கிறது! இந்த நிலைமையில், நிதி பெரிது, பணம் பெரிது என்று பார்க்காமல், ஆத்ம அனுபவமே மிகப்பெரிய பொக்கிஷம் என்று தேடிப் போனார்களே, அவர்களைத்தான் பண்டாரம் என்று அழைத்தார்கள். அசைக்க முடியாத, மாறுதலுக்கு உட்படாத ஒரு நிதியை - பண்டாரத்தை - மொத்தமாகத் தூக்கி நெஞ்சுக்குள்ளே வைத்துக் கொண்டு, அந்த பகவத் ஸ்வரூபத்தை அனுபவித்தவர்களுக்கே பண்டாரம் என்று பெயர் வந்தது.

மிகப்பெரிய செல்வம்!

இது புரியாமல், ஒன்றுமே இல்லாத ஓட்டையாண்டிகளைக் குறிக்கும் சொல்லாக, பிச்சை எடுப்போரைக்கூட குறிக்கும் சொல்லாக அதை நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

அம்பாள் ஸ்ரீ லலிதாம்பிகையோ அந்த உயரிய ஆத்மானுபவச் செல்வத்தை நமக்கு அனுபவிக்கத் தருவாள்; அதற்கு அதிபதி. உலக வாழ்க்கையின் செல்வங்களையும் அவளே தருகிறாள். அதனால்தான் **கோசநாதா** என்ற திருநாமம். 'கோசம்' என்கிற ராஜ்ய பொக்கிஷத்துக்கு ஒரு தனாதிகாரி இருப்பதுபோல, நமது ஆத்மானுபவ பொக்கிஷத்துக்கும், உலகியல் செல்வங்களுக்கும் அவளே அதிபதி.

சதுரங்க பலேஸ்வரி - அரசி ஒருத்தி இருந்தால், அவளுக்கு நால்வித சைனியங்கள் இருக்கும். அந்த நான்கும் படைத்தவள் அம்பிகை. அவை சாதாரண சைனியங்கள் அல்ல. அசாத்தியமான பலம் படைத்தவை.

சாம்ராஜ்யதாயினி - முதலில் **ராஜ்யதாயினி** என்ற திருநாமம் வந்தது. இப்போது **சாம்ராஜ்யதாயினி!** முதலில் சின்னதாக ஒரு ராஜ்யத்தைக் கொடுத்தவள், பக்தியோடு இருந்தால், ஒரு ராஜ்யமென்ன... இரண்டு ராஜ்யங்களென்ன... பல ராஜ்யங்கள் இணைந்த சாம்ராஜ்யத்தையே தந்துவிடுவாள்.

சத்யஸந்தா - சத்யத்தின் ரூபமாக இருப்பவள்; சத்தியத்தையே தனது அதிஷ்டானமாகக் கொண்டவள்.

ஸாகர மேகலா - அம்பாளுக்கு எது ஒட்டியாணமாக (மேகலை) இருக்கிறது என்றால், உலகில் உள்ள ஸாகரங்கள் - சமுத்திரங்களே அந்த ஆபரணமாகி அவளை அலங்கரிக்கின்றன. முத்துக்களைக் கோத்து மேகலாபரணம் அணிவதற்குப் பதிலாக, கடல்களைக் கோத்து, கோத்துக் கோத்து அந்தக் கடல்களாலான மேகலாபரணம் அணிந்திருக்கிறாள். அப்படியென்றால் என்ன அர்த்தம்? அம்பாளே ஜகத்ஸ்வரூபமாக இருக்கிறாள்; கடலும்

இதர இயற்கை எழில்களும் அவளுக்கு ஆபரணங்கள் என்றே அர்த்தம்.

இவ்வாறு, '**ராஜராஜேஸ்வரி**'யில் ஆரம்பித்து, **ஸாகரமேகலா** வரைக்கும் அம்பாளை ஒரு சாம்ராஜ்யத்தின் அதிபதியாக வர்ணித்து, கொண்டாடுகிற திருநாமங்கள்.

மாலைகளால் ஒரு மாலை

இதுதான் ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமத்தின் தனி அழகு. திருநாமங்கள் தொகுப்புகளாக அமைந்து அழகு சேர்க்கின்றன. சஹஸ்ரநாமம் ஆயிரம் நாமங்களைக் கொண்ட மாலை என்றால், அதில் அங்கங்கே சின்னச் சின்ன மாலைகள். மாலைகளால் கோத்த மாலையாக அமைந்திருக்கிறது ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமம்.



நமது ஆத்மானுபவ பொக்கிஷத்துக்கும், உலகியல் செல்வங்களுக்கும் அவளே அதிபதி.

ஐச்வர்யத்துக்கு அதிபதியாக இருந்து ஆத்மானுபவ செல்வத்தை, சாம்ராஜ்யத்தைத் தருபவள் அடுத்து எதைத் தருகிறாள்...?


'தனம் தரும், கல்வி தரும்' என்று அபிராமி பட்டர் பாடியதுபோல, ஐச்வர்யத்துக்கு அடுத்து வருவது ஞானம். அந்த ஞானத்தைத்தர வல்லவள் என்பதைக் குறிக்கும் திருநாமம்தான் **தீக்ஷிதா.** குருவாக இருந்து ஞானத்தைத் தருபவள் என்று இதற்குப் பொருள். தீக்ஷிதர் என்றாலே ஞானவான் என்றுதான் அர்த்தம். தீக்ஷை கொடுத்தார், பெற்றார் என்றெல்லாம் சொல்லப்படுகிறதே; தீக்ஷை என்றால் என்ன? குரு தமது ஞானத்தை சிஷ்யனுக்கு அப்படியே டிரான்ஸ்ஃபர் செய்வதுதான் தீக்ஷை வழங்குதல். **தீக்ஷிதா**வான அம்பிகை நமக்கு ஞானத்தை அவ்வாறு தருபவள். தன் பக்தர்களுக்கு ஞான உபதேசம் செய்பவள்.

தைத்யசமனி - திதி, அதிதி என்று காச்யப முனிவருக்கு இரண்டு மனைவியர். இவர்களுள் அதிதியின் புதல்வர்களே தேவர்கள் ஆனார்கள். திதியின் புதல்வர்கள் அசுரர்கள் ஆனார்கள். திதியின் புதல்வர்கள் தைத்யர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். அந்த அசுரர்களை அழிக்க வல்லவள் லலிதாம்பிகை.

உலகில் அசுரத்தனத்தை அழிப்பதுடன் அசுரத்தனத்தால் வரக்கூடிய துன்பத்தைப் போக்குபவள்; அரக்கத்தனத்தை சமன் செய்பவள் **தைத்ய சமனி.**

சர்வலோகவசங்கரி - அத்தனை உலகங்களையும் தன்னிடத்தில் வசப்படுத்திக் கொள்ளக் கூடியவள். அம்பாளுடைய பேரைக் கேட்டாலே, அவள் திருமேனியை தரிசித்தாலே, எல்லா அகம்பாவமும் போய் விட, அவள் காலில் விழுந்து விடுவார்கள். அதனால்தான் அவள் **சர்வலோகவசங்கரி.**

(வளரும்)



கழிவுகளின் கழுத்து



ஏற்காடு

அந்த ஏரிக்கு பிரிட்டிஷ்காரர்கள் வைத்த பெயர் எமரால்ட் லேக். தமிழ்நாடு கெஸட்டிலோ வண்டிராமன் ஏரி(?). 1820ல் சிறிய குளமாக இருந்ததைத் திருத்தி 1903 வாக்கில் பெரிய ஏரியாக்கியிருக்கின்றனர் பிரிட்டிஷ்காரர்கள். அந்த ஏரி மறுபடியும் குளமாகத் தூர்ந்துகொண்டிருப்பதுதான் இப்போது பிரச்னையே. எது அந்த ஏரி என்கிறீர்களா? சுற்றுலாவுக்குப் பெயர்போன ஏற்காடு ஏரிதான்!

''பதினைந்து ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்திருந்த ஏரி, தற்போது சற்று சுருங்கத் தொடங்கியிருப்பது முதல் அதிர்ச்சி என்றால், ஏரியின் பழைய ஆழம் சுமார் ஐம்பது அடி(அம்மாடியோவ்!)யாக இருந்தது போய், தற்போது பல இடங்களில் இருபத்தைந்து அடி; சில இடங்களில் முப்பதடியாகத் தூர்ந்திருப்பது இரண்டாவது அதிர்ச்சி. பாசிகளின் கைங்கர்யத்தால் ஏரித் தண்ணீரின் மேல்பரப்பு குறைந்து வருவது மேலும் ஓர் அதிர்ச்சி. கோடைவிழாவின் போது மூங்கில் தடுப்பு மூலமாக அவற்றைக் கட்டுப்படுத்தி படகுப் போட்டி நடத்துவது கண்கொள்ளாக் காட்சி. ஏரியின் உள்ளே

வாட்டர் பொல்யூஷன்

ஆதிக்கத்தில் நெறிபடும் எமரால்ட்!







இயற்கையாகவே, மூன்று இடங்களில் நீரூற்றுகள் அமையப் பெற்றிருப்பது இன்ப அதிர்ச்சி'' என்று ஏரி குறித்து ஏராளமான தகவல்களைத் தருகிறார் முசிறி அண்ணா அரசினர் கலைக்கல்லூரியின் தாவரவியல் துறைத் தலைவர் இரா.காமராஜ். இவர், 'ஏற்காடு ஏரியும் அதன் சுற்றுப்புறச் சூழலும்' என்ற தலைப்பில் முனைவர் பட்டம் பெற்றவர்.


“ ஏரியின் உள்ளே மூன்று இடங்களில் இயற்கை நீரூற்றுகள் உள்ளன ”

''ஏரியைச் சுற்றிலும் நூற்றுப் பதினொரு வகையான மரங்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன. தாவரக் கழிவுகள், கரையோரப் பகுதி குடியிருப்புகள் மற்றும் கடைகளின் கழிவு நீர், ஏரியோரங்களில் எருதுகள், மாடுகள், பன்றிகளின் கழிவுகள் எல்லாம் மொத்தமாக ஏரிக்குள் கலக்கின்றன. இதனால் ஏரிக்குள் நீர்ப்பாசிகளின் (பாசி பூத்தல்) பெருக்கம் அதிகம்.

நீர்ப்பாசிகளின் அடர் நெருக்கத்தி







✱ இரா.காமராஜ்

னால், சூரிய ஒளி நீருக்குள் செல்வதில்லை. நீருக்கடியில் வளர்ந்து, நீர் நிலைகளுக்கு நன்மை பயக்கும் நீர்த்தாவரங்கள் இதனால் பாதிக்கப்படுகின்றன. மேலும் பூச்சியினங்கள், மீன்கள், தவளைகள் போன்றவற்றுக்கும் உயிர் வளர்க்கும் உத்தரவாதம் இல்லாமல் போவதால், ஏரித் தண்ணீரில் மாசு அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. இப்படி சங்கிலித் தொடர் நிகழ்வாக ஏரியின் சூழல் மோசமாகி வருகிறது" என்னும் காமராஜ், தீர்வாகச் சிலவற்றைச் சொல்கிறார்.

''ஏரியில் கழிவுகளைக் கலப்பது முற்றிலுமாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இது தமிழ்நாட்டின் எல்லா ஏரிகளுக்கும் பொருந்தும். ஏரிகளின் உட்பகுதி ஆழம் தூர்ந்து மேடு தட்டிப் போகாமல், அதன் ஆரம்பகால ஆழம் காப்பாற்றப்பட வேண்டும். பிளாஸ்டிக் கழிவுகளின் குப்பைத் தொட்டிகளாக ஏரி, குளங்களை மாற்றி வரும் பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் மன நிலையும் செயல்பாடுகளும் உடனடியாக மாற வேண்டும்.

நமக்குப் பெரும் சவாலாக எதிரே நிற்பது இரண்டு பிரச்னைகள். ஒன்று தண்ணீர் பற்றாக்குறை. இன்னொன்று புவி வெப்பமயமாதல். இரண்டும் ஒன்றையொன்று சார்ந்தவை. மரங்கள் வளர்த்து காடுகள் உருவாக்கி, அவற்றைப் பேணிக் காக்க வேண்டும். தமிழக ஏரிகள், குளங்கள் அனைத்தும் தூர் வாரப்பட்டு ஒவ்வொன்றும் மழை மற்றும் வெள்ள நீர் சேமிப்புக் கிடங்குகளாக மாற்றப்படவேண்டும். தண்ணீர்ப் பற்றாக்குறை மற்றும் புவி வெப்பமயமாதல் இந்த இரண்டிலிருந்தும் அப்போதுதான் நம்மைத் தற்காத்துக் கொள்ள முடியும்!'' எனக் கூறுகிறார்.

> “ பிளாஸ்டிக் கழிவுகளின் குப்பைத் தொட்டிகளாக ஏரி, குளங்களை என்னும் மனநிலை மாறவேண்டும் ”

செய்தி, சித்திரம்:
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு





கோலிவுட்டின் வருண பகவான்

ஹீரோ...ஹீரோயின்கள் நனைந்தாடி, டூயட் பாட மழை வேண்டுமா... ஒரு ஹீரோ பத்து ஆட்களைத் தூக்கி வீசும்போது சூழ்நிலையை விறுவிறுப்பாக்க மழை வேண்டுமா... இதுக்கெல்லாம் எப்படா மழை வரும் என்று காத்திராமல் எப்படா 'வேலு' வருவார் என்று காத்திருக்க ஆரம்பிக்கின்றனர் கோலிவுட்டில். மழைக்கும் வேலுவுக்கும் என்ன சம்பந்தம்?

கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக சினிமா ஷூட்டிங்குகளுக்கு வேலுதான் மழை ஏற்பாடு செய்துகொடுக்கும் கோலிவுட் வருண பகவான். ''இன்று தண்ணீருக்கு சினிமாவில் தேவைகள் பெருகிவிட்டன'' என்கிறார் வேலு. ''கதைப்படி மழை ஸீன் ஆனாலும், பாடல், ஃபைட்களுக்குத் தேவையான மழை என்றாலும் செயற்கைதான்; சமயங்களில் செயற்கையாக நீர்வீழ்ச்சியையே உருவாக்கித் தரும்படி சொல்கிறார்கள். அதுவும் குற்றாலத்திலும் கேரளாவிலும்கூட. படத்துக்குத் தேவையானபடி காட்சிகளை எடுப்பதில் சிரமம் இருப்பதால், அங்கேயே செயற்கையாக அருவிகளை அமைத்துக் கொடுக்க வேண்டி இருக்கிறது. இவை தவிர, நெருப்பு மற்றும் பிளாஸ்ட் காட்சிகளைப் படம்பிடிக்கும்போது ஏதாவது அசம்பாவிதம் நிகழ்ந்துவிடாமல் இருக்க பாதுகாப்புக்காகத் தண்ணீர்

லாரிகள் தயாராக இருக்க வேண்டும்'' என்கிறார் வேலு.

மழைக் காட்சிகளில் வேலு மற்றும் அவரது உதவியாளர்களின் விரல்களில் வலி பின்னி எடுத்து விடுமாம். மோட்டார் மூலம் வேகமாக வருகிற லாரி தண்ணீரை பைப் முனையில் விரல்கள் மாற்றி, மாற்றி அசைத்துப் பக்குவமாக மூடி, திறந்து பாய்ச்ச வேண்டும். மோட்டாரின் இழுக்கும் வேகத்தில் தண்ணீர் லாரியில் இருக்கும் டேங்கின் துருக்கள் தண்ணீருடன் வெளியேறி விரல்களைப் பதம் பார்த்துவிடுமாம். பைப் மூலம் வெளியே வரும் தண்ணீர் விரல்களின் உபயத்தில் இருபது முப்பது அடி உயரே சென்று பரவலாகி, மீண்டும் மழையாக கீழே வரும். குளோஸ்-அப் ஸீன்கள் என்றால் பெரிய ஷவர்களைப் பயன்படுத்துவார்கள்.



''வழக்கமாக ஒரு லாரி தண்ணீர் 600 ரூபாய் என்றால் சினிமா ஷூட்டிங்குக்கு ஆயிரம் ரூபாய் சொல்வார்கள். சண்டை அல்லது பாடல் காட்சியின் பரிமாணத்துக்கு ஏற்ப தண்ணீர் லாரிகளை ஏற்பாடு செய்வோம்'' என்று சற்றே வேதனைப்படும் வேலு, ''மழைக் காட்சிகளில் நடிகர்கள் ரீ-டேக் வாங்கினால் மீண்டும், மீண்டும் ஜில்லென்று தண்ணீரில் நனைய வேண்டும். அப்போது பொழப்பு பேஜார் ஆகிவிடும். அதுவும் குளிர் பிரதேசத்திலோ, மழைக் காலத்திலோ என்றால் குளிரில் உடம்பு வெடவெடக்கும். அப்போது கொதிக்கும் வென்னீரில் நனைத்துப் பிழிந்த சூடான டவலை உடம்பில் போர்த்திக்கொள்வார்கள்'' என்கிறார்.



✱ ரஜினியுடன் வேலு...

''ரட்சகன் படத்தில் சுஷ்மிதா சென் தண்ணீரில் நனைய வேண்டி இருந்தபோது, 'தோடா...தோடா...' (கொஞ்சம்... கொஞ்சம்) என்று சொல்வார். ரொம்பத் தண்ணீரில் நனைந்தால் ஜலதோஷம் பிடித்துக்கொள்ளுமாம். இருவர் படத்தின்போது ஐஸ்வர்யா ராயும் அப்படித்தான் சொன்னார். சேரனின் தேசிய கீதம்

படப்பிடிப்பின்போது அம்பாசமுத்திரம் அருகில் அகஸ்தியர் அருவிக்குப் பக்கத்தில், செயற்கையாக ஓர் அருவியை உருவாக்கினோம். பாரதிராஜாவின் கடல் பூக்கள் ஷூட்டிங்கில், லாரி தண்ணீருக்குப் பதிலாக மோட்டார் வைத்து கடல் தண்ணீரையே பயன்படுத்திக் கொண்டோம்; சேது படத்தின்போது, லொக்கேஷனிலேயே இருந்த கால்வாய் தண்ணீரைப் பயன்படுத்திக் கொண்டோம்'' என்று தண்ணி... லாரி... சினிமா அனுபவங்களைச் சொல்லும் வேலுவுக்குப் பெரிய சவாலாக இருந்த படம் ஈரம்.

''ஈரம் படத்தில் மழை அடிக்கும்போது, பஸ்ஸில் பயணித்தபடியே ஹீரோவும், ஹீரோயினும் பாடும் டூயட் காட்சி. இதற்கு தண்ணீர் லாரி பின் தொடர, பஸ்ஸின் மேலே நின்றபடி, தண்ணீர் பைப்பைப் பிடித்துக்கொண்டு மழை பொழிய வைக்க, பஸ்ஸுக்குள் இருந்தபடி அதை கேமராமேன் படம் பிடித்தார்'' என்கிறார் வேலு.

சுத்தம் பார்க்கும் சில ஹீரோ, ஹீரோயின்களைத் திருப்திப்படுத்த லாரி தண்ணீரில் டெட்டால் கலப்பதும் உண்டாம். 'பச்சைத் தண்ணி எனக்கு ஒத்துக் கொள்ளாது; மிதமான வெந்நீர்தான் வேணும்' என்று அதிரடியாய்ச் சொன்ன நடிகைகளும் உண்டாம்! ''நல்லகாலம் 'மினரல் வாட்டர் மழையில்தான் நனைவேன்' என்று கண்டிஷன் போடாமல் விட்டார்களே!'' என்கிறார் வேலு.

- எஸ்.சந்திரமௌலி



தாங்குமா பூமி?

உங்கள் வீட்டு பாத்ரூம் குழாயிலிருந்து சொட்டுச் சொட்டாக தண்ணீர் லீக் ஆகிறதா? அலட்சியப்படுத்தாதீர்கள். அதைக் கவனிக்காமல் விட்டு, இப்படிச் சொட்டிக்கொண்டே இருந்தால் ஒரு நாளில் சுமார் 20 லிட்டர் தண்ணீர் வீணாகும். ஒரு மாதத்தில் 625 லிட்டர், வருடத்துக்கு 7600 லிட்டர். இப்படி வீணாக்கினால் தாங்குமா பூமி?



தூறல் கவிதை

சுழித்தோடி
நுரைத்துப் பொங்கும்
நதியில்
எதிர்நீச்சலில் புனல்கிழி
முன்னேறும் படகுக்கு
உன் யவ்வனத்தின்
பெயர் வைக்கலாம்

- கதிர்பாரதி



தண்ணீருக்குள் பிரசவம்:

ஒரு தொட்டியில் தண்ணீரை நிரப்பி, அதில் கர்ப்பிணியை உட்கார வைத்து பிரசவம் பார்ப்பது தாய்க்கும், சேய்க்கும் பலவிதங்களில் சௌகரியமாக இருக்குமாம். அதனாலேயே மேலை நாடுகளில் தண்ணீர்த் தொட்டிக்குள் பிரசவம் பார்ப்பது சகஜமான சமாசாரமாம். ஆனால், இது மெல்ல நம் நாட்டிலும் பரவ ஆரம்பித்துள்ளது. முதன்முதலில் இந்தியத் தலைநகரின் பீனிக்ஸ் மருத்துவமனையில் தண்ணீர்த் தொட்டியில் சார்லோட் வால்டர் என்ற ப்ரிட்டிஷ் பெண்மணிக்குப் பிரசவம் பார்த்திருக்கிறார், நம் நாட்டு டாக்டர். ஊர்வசி ஷேகல். தமது முதல் இரண்டு குழந்தைகளையும் யூ.கே.வில் தண்ணீர்த் தொட்டிக்குள் பெற்றெடுத்த, அந்த பிரிட்டிஷ் மாதரசி. மூன்றாவது குழந்தையையும் தண்ணீரில் பிரசவித்திருக்கிறார்.

வாட்டர் தெரபி...

"'தண்ணீர் தெரபி'யா... அப்படீன்னா?'' என்று கேட்பவர்களுக்கு, ''இருப்பதிலேயே தண்ணீர் தெரபி செஞ்சுக்கறதுதான் ரொம்ப ஈஸியான விஷயம். இதுக்கு டாக்டர் வேணாம்; மருந்து, மாத்திரை எதுவும் வேணாம். ஆனா தண்ணீர் மட்டும் போதும்! ஜஸ்ட் லைக் தட், நல்ல கொதிக்க வைத்து ஆற வைத்த ஒன்றரை லிட்டர் தண்ணீரை, தினமும் (இடை

அருவியின்

தண்ணீர் தந்த பரவசம்:

இசை அருவி பொழியும் கர்னாடக இசைப்பாடகி சுதா ரகுநாதனிடம் உங்களை மிகவும் பரவசப்படுத்திய இடம் எது எனக் கேட்ட போது, ''நிச்சயம் அது கேரளாவின் அதிரபள்ளி அருவி தான். இயற்கை, தண்ணீரோடு சேர்ந்து நடத்தும் அந்த சந்தோஷச் சாரலில், ஒரு விளம்பரப் படத்துக்காக நான் என் தம்பூராவோடு அமர, என் முகத்தில் தெளித்த அந்த தண்ணீர்த் துறல், சில்லென்ற காற்று, நீர் வீழ்ச்சி எல்லாமே என் பாடலுக்குப் பக்கவத்தியம் வாசித்தது போல பரவசப்படுத்தின!'' என்று நெகிழ்ந்து போகிறார்.





விடாமல்) பருக வேண்டும். ஆனா, ஒரே ஒரு கஷ்டமான கண்டிஷன். ஒன்றரை லிட்டர் தண்ணீர் குடிச்சப்பறம், குறைந்த பட்சம் ஒரு மணி நேரத்துக்கு காஃபி, டீ எதையுமே வயித்துக்குள்ள தள்ளக் கூடாது. இந்த மாதிரி விடாம தண்ணி ரும், கையுமா (வாயுமா) நீங்க இருந்தீங் கன்னா, உங்க முகத்துல ஒரு தனி பொலிவு தானாகவே வந்து கூடிடுமாம். ''கூடியிருக்கற வெயிட் தானாகவே குறைஞ்சுடும்; இதயத்துக்கு நல்ல வெயிட் கூடி அது உறுதியாயிடும்'' என் கின்றனர் தெரபி ஸ்பெஷலிஸ்ட்ஸ்.



டாப் டென் - தண்ணீர் தேசங்கள்:

நீர் வளத்தில் முதல் பத்து இடங்களைப் பிடிக்கும் உலக நாடு களின் ஒரு பட்டியல் :

பிரேசில் (14.9%),
ரஷ்யா (8.1%),
கனடா (6%),
அமெரிக்கா (5.6%),
இந்தோனேஷியா (5.1%),
சீனா (5%),
கொலம்பியா (3.9%),
பெரு (3.5%),
நம்ம இந்தியா (3.4%),
கோங்கோ (2.3%)



பக்கவாத்தியம்!



தண்ணீர் கண்டேன்

'அந்த நிலாவுல நான் தண்ணியைப் புடிச்சேன்' என டூயட் பாடாத குறையாக ஆர்ப் பரிக்கின்றனர் அமெரிக்க விஞ்ஞானிகள். அது வும் கொஞ்சம் நஞ்சம் தண்ணீர் இல்லீங்க ஏகப்பட்டது. Naso Lcross Mission. இனி, வெயில் காலத்தில் தெரு ஓரக் குழாயடி சண்டை எல்லாம் போடாம, சமர்த்தா ஒரு குடம் தண்ணி எடுக்க நிலாவுக்குப் போயிட்டு வந்துடலாம்!

– நளினி சம்பத்குமார்

180 டிகிரி பார்வை

7

மூன்றாவது கண் உண்டு. யாருக்கு? பெண்ணுக்குத்தான். ''என்ன டாக்டர் விளையாடறீங்களா?'' என்று கேட்காதீர்கள். நிஜமாகவே மூன்றாவது கண் இல்லாவிட்டாலும் அப்படி இருப்பது போல்தான் அவளது செயல்கள் பல இடங்களில் பிரதிபலிக்கின்றன. பார்க்கலாம்.

''என்னங்க திருப்பித் திருப்பி அதையே சொல்றீங்க?'' அலுத்துக்கொண்டாள் பாவனா.

''இதுதாம்மா சரியான மேட்சிங் பிளவுஸ் பீஸ். இதுக்கு மேல எங்ககிட்ட இல்ல'' அத்துடன் முடித்துக் கொண்டார் கடைக்காரர்.

''என்ன பாவனா? இன்னுமா முடியல'' என்று வந்த கணவனிடம், ''வாங்க அடுத்த கடைக்குப் போகலாம்'' என்று புறப்பட்டாள்.

''என்ன, ஒரு மேட்சிங் ப்ளவுஸ் பீஸ் வாங்க எத்தனை கடை ஏறி இறங்கறது?'' அலுத்துக்கொண்டே வண்டியை ஸ்டார்ட் செய்தான் சுந்தர்.

பாவனாவை மட்டுமல்ல; எந்தப் பெண்ணையும் நிறங்களின் தேர்வுகளில் அவ்வளவு சீக்கிரமாகத் திருப்திப்படுத்தி விட முடியாது. ஏன்...ஏன்...ஏன்?

மூளையின் வெளிப்பகுதி (எக்ஸ்டென்ஷன்)தான் கண். இது கபாலத்தின் வெளியே உள்ளது அவ்வளவே. விழியின் பின்பகுதி ரெடினா. இதில் ஃபோட்டோ ரிஸப்டர்ஸ் எனப்படும் 130 மில்லியன் செல்கள் உள்ளன.

இவைதான் கறுப்பு வெள்ளை நிறங்களைப் பிரித்தறியும். இங்குதான் கோன் வடிவிலான ஏழு மில்லியன் செல்களும் உள்ளன. இவைதான் பல்வேறு நிறங்களையும் பிரித்தறியும். இவற்றையெல்லாம் கொடுப்பது எக்ஸ் க்ரோமோஸோம்தான்.



மிஸ்டர் & மிஸஸ் மேல்மாடி

சீக்ரெட் அஃப் ப்ரெய்ன்

இரண்டு எக்ஸ் க்ரோமோஸோம்கள் இணைந்தால் பெண் கருவும், எக்ஸ், ஒய் க்ரோமோசோம்கள் இணைந்தால் ஆண் கருவும் உண்டாகும். பெண்ணுக்கு இருக்கும் அதிகப்படியான எக்ஸ் க்ரோமோஸோம்தான் அவளுக்கு ப்ளஸ் பாயிண்ட். நிறங்களைப் பிரித்தறியும் கோன் செல்கள் ஆணைவிட அவளுக்கு அதிகம். ஆண்களால் பச்சை, சிவப்பு, நீலம் என்று பொதுவான நிறங்களையே பகுத்தறிய முடியும். ஆனால் பெண்ணோ ஸ்கின் கலர், சாக்லேட் கலர், அக்வா கலர் என்று அடுக்கிக் கொண்டே போவாள்.


கடைக்காரர் கண்ணுக்கு மேட்சிங்காகத் தெரியும் நிறம் அவளுக்குத் திருப்தி அளிக்காது.

இது மட்டுமல்ல. ஆணைவிட அவளது பார்வை பரந்து விரியும் தன்மையுடையது. அவளது தலையின் மேல், கீழ், இடது மற்றும் வலது ஆகிய நாலாபுறமும் 45 டிகிரி அளவுக்குப் பார்வை கவர் செய்யும் அளவுக்கு அவளது மூளையின் அமைப்பு உள்ளது. சிலருக்கு இது 180 டிகிரி அளவு வரை கூடப்போகலாம்.

ஆணின் கண் பெண்ணின் கண்ணை விடப் பெரியது. ஆனாலும் அவனது பார்வை ஒரே நேர்க்கோட்டில் தான் விரியும். தனக்கு எதிரே உள்ளவற்றை எளிதில் கண்டு கொள்ள முடியும். அதன் தூரம் அதிகமானாலும் அவனுக்கு எளிது.

கண்ணிமைக்காமல் இரையைப் பிடிக்க இப்பார்வை அவனுக்கு உதவியது. காட்டு விலங்குகளிடமிருந்தும் எதிரிகளிடமிருந்தும் குழந்தைகளையும் சுற்றத்தாரையும் காப்பாற்ற பெண்ணுக்கு நாலாபுறமும் பார்வை அவசியமாயிருந்தது.


சிறுமிகளைவிட சிறுவர்கள் ரோட்டைக் கடப்பதற்குச் சிரமப்படு



டாக்டர் **ஏ.வி. ஸ்ரீனிவாசன்**

மூளையின் இடப்பக்க அறைக் கோளத்தில் நடப்பவை:

சொற்கள், பெயர்கள் மற்றும் கருத்துகள், செய்திகளை ஆராய்ந்து பகுத்து ஒழுங்கு படுத்துதல், முடிவுகளை எடுப்பதற்கு ஆய்ந்து செயல்படுதல்.



வார்கள். U.Kயில் நடந்த ஒரு கருத்துக்கணிப்பில் ஒரு வருடத்தில் விபத்தில் அடிபட்டுக்கொண்ட சிறுவர்களின் எண்ணிக்கை சிறுமிகளைவிட இரு மடங்கு அதிகமாக இருந்ததாம்.

ஆண்கள் ஃபிரிட்ஜையோ, பீரோவையோ திறந்துவைத்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தாலும், வேண்டிய பொருளை எளிதில் தேடி எடுத்துக்கொள்வதில் சிரமப்படுவார்கள். ''அங்கதானே வெச்சிருக்கேன்'' என்று மனைவி கத்திக்கொண்டிருப்பார். கடைசியில் அவள்தான் வந்து எடுத்துக்கொடுக்க வேண்டியிருக்கும். அவனைச் சொல்லிக் குற்றமில்லை. பாவம் அவனது பார்வை அப்படி. என்ன செய்ய?

மூளையில் பதிவு செய்யப்படும் எல்லாவற்றையும் அது வெளிப்படுத்துவதில்லை. உதாரணத்துக்கு, மூளை வானத்தின் எல்லா நிறங்களையும் உணர்ந்தாலும், வானம் நீலம் என்பதை மட்டும் எடுத்துக் கொள்ளும். அதனால்தான் பலவற்றை நாம் கூர்ந்து கற்றுக் கொள்ள முடிகிறது.

உதாரணத்துக்குத் தரையில் விழுந்த ஊசியைத் தேடும்போது நம் பார்வை குவிக்கப்படுகிறது. எடுத்து விடுகிறோம். இது ஆணின் பார்வை. இது போல பெண்ணின் பரந்த பார்வையை ஆணும் பயிற்சியின் மூலம் பெற முடியும்.

இப்படி பெண்ணின் பார்வையின் மகிமையைச் சொல்லிக்கொண்டே போனாலும் ஒரு விஷயத்துக்கு அவர்கள் மிகவும் திணறித்தான் விடுகிறார்கள். என்ன அது?

(அலசுவோம்)

எழுத்தாக்கம்: **லக்ஷ்மி மோகன்**



தராசு

நீங்கள் கேட்டவை



★ அனர்த்த வாதம்

● அ.ராஜா ரஹ்மான், கம்பம்

? நாக்ஸலைட்களை ஒடுக்கும் போராட்டத்தில் ஆயுதப் படையினர் ஈடுபடுத்தப் படமாட்டார்கள் என்று மத்திய பாதுகாப்புத் துறை இணையமைச்சர் பல்லம் ராஜு கூறியிருப்பது பற்றி...?

! ஆங்கிலத்தில் அவர் 'armed forces' என்று சொல்வது முப்படையினரைக் குறிக்கும். நாக்ஸலைட் விவகாரம், மாநில அரசுகளின் ஆயுதம் ஏந்திய காவல் துறையினர் கையாள வேண்டிய சட்டம் ஒழுங்குப் பிரச்னையாகவே கருதப்படுகிறது - ராணுவம் புகுந்தால், நம் நாட்டவர் மீது நமது அரசே போர் தொடுப்பதாகக் கருதப்படலாம் என்பதால். இவையெல்லாம் வார்த்தை ஜாலங்களே. மாநில அரசு உதவி கோரினால் படைகளை அனுப்ப மத்திய அரசுக்கு உரிமை உண்டு.

கோடா அப்பாவியாமே?



★ ஜார்கண்ட் பழமொழி!

● பி.ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி

? ''ஊழல் நடந்ததாகக் கூறப்படும் புகார்களில் மது கோடாவுக்குத் தொடர்பு ஏதுமில்லை; அவர் அப்பாவி'' என கோடாவின் மனைவி கீதா கூறுகிறாரே?

! 'வேலிக்கு ஓணான் சாட்சி'- தமிழகப் பழமொழி. கோடாவுக்கு கீதா சாட்சி - ஜார்கண்ட் பழமொழி!

● அ.சுகுமார், காட்பாடி

? தொடர் மழையின்போது சிங்காரச் சென்னை சீரழிவுச் சென்னையாக மாறிவிடுகிறதே? இது எப்போது சரியாகும்?

! மழையில்லாத நாட்களில் இது உண்மையாகவே சிங்காரச் சென்னையாக இருக்குமானால், மழைக் காலத்திலும் அவ்வாறே இருக்கும். ஆனால், 'சிங்காரச் சென்னை',

'சிங்கப்பூர் சென்னை' என்று பட்டம் சூட்டி வர்ணிப்பது மட்டும்தான் இங்கே நடக்கிறது. சிங்கப்பூரின் ஊழலற்ற முயற்சியும் இல்லை; கண்டிப்பும் கிடையாது. அதனால்தான் அவலநிலை.

● பி.செந்தில்வேலன், அறந்தாங்கி ★

? ராதாபுரம் பஸ் நிலையத்தில் சிலை வைக்கும் அளவுக்கு முதல்வரின் பெற்றோர் முத்துவேலர் - அஞ்சுகம் செய்த சேவைதான் என்ன...?



★ பெருமை சேர்க்காத...



★ ...புதுப் பட்டம்!

! முத்தான பிள்ளையைப் பெற்றதே சேவைதான் என்று சிலை நிறுவியவர்கள் கருதக்கூடும். ஆனால், பொது இடத்தில் சிலை நிறுவ அந்தக் காரணம் போதாது.

● த.குமார், பொள்ளாச்சி

? ''பாக். உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ.க்கு அல்-கைதா, தாலிபான் உள்ளிட்ட அனைத்து பயங்கரவாத அமைப்புகளோடும் தொடர்பு உண்டு. அதனால் ஐ.எஸ்.ஐ. பயங்கரவாதிகளை ஆதரிக்கிறது என்று அர்த்தம் அல்ல. தனது புலனாய்வுத் திறனை மேம்படுத்திக் கொள்ளவே ஐ.எஸ்.ஐ. இவ்வாறு செய்கிறது'' என்று முஷாரஃப் பேட்டி கொடுத்துள்ளாரே?

! ''திருடனுடன் கை குலுக்கினால் நான் திருடனாகி விடுவேனா?'' என்பது போலிருக்கிறது முஷாரஃபின் வாதம். இதைவிடவும் மோசம், அமெரிக்கா கோடிக்கணக்கான டாலர்களை ஐ.எஸ்.ஐ.க்கு ரகசியமாக வழங்கியுள்ளது என்கிற செய்தி. இந்தப் புதிய தகவல் இன்றைய அமெரிக்க ஆட்சியாளர்களை உலுக்கியிருக்கிறது. இதுபோன்ற தவறுகளின் பலனை இன்று பாகிஸ்தான் நாளுக்கொரு குண்டுவெடிப்பாக அனுபவித்து வருகிறது.

● ஆர்.ராஜதுரை, சீர்காழி

? ''இந்தியாவின் தந்தை காந்தி என்றும் ரேஷனின் தந்தை கருணாநிதி என்றும் அனைவரும் பேசி வருகின்றனர்'' என்பதாக மு.க.ஸ்டாலின் கூறுகிறாரே?

! ''ரேஷனின் தந்தை'' என்பதில் என்ன பெருமை இருக்க முடியும்? ரேஷனுக்கே அவசியமில்லாத பொருளாதார வளர்ச்சிக்குக் காரணமானார் என்றால்தான் மகிழலாம்.

● சிவன் மகன், தஞ்சை

? உயர்நீதிமன்ற நீதிபதியாகப் பதவியேற்றபோதே தமது சொத்துக் கணக்குகளைக் காட்டி ஒரு புதிய மரபை உருவாக்கியுள்ளாரே நீதிபதி கே.சந்துரு?

! கணக்கை ஒப்பிப்பதற்கான கடைசித் தேதியை ஒத்திவைத்த நிலையில், பதவி ஏற்ற தினத்திலேயே அவர் ஆயத்தமாக இருந்தது பாராட்டுக்குரியது. மற்ற நீதிபதிகளும் தாமதமின்றி சொத்து விவரம் சமர்ப்பித்துள்ளனர். வழக்குகளையும் இதே வேகத்துடனும் விவேகத்துடனும் அணுகி, நீதிபதிகள் தேங்கியுள்ள வழக்குகளைக் கணிசமாகக் குறைக்க வேண்டும்.

● சோம.தேவராசன், நாச்சியார்கோயில்

? மழையின்போது ஊட்டி போன்ற மலைப்பகுதிகளில் ஏற்படும் நிலச்சரி

வையும் உயிரிழப்பையும் முன்னெச்சரிக்கை மூலம் தடுக்க முடியாதா?

! நிலச் சரிவைத் தவிர்க்க முடியாது. ஆனால், அது நிகழக் கூடிய இடங்களில் குடிசைகள், வீடுகள் அமைப்பதைத் தவிர்க்க முடியும். காடுகள் வெட்டப்பட்டு நிலச்சரிவுக்குக் காரணமாவதைத் தடுக்க முடியும். பருவ மழைக்கு முன்னதாக நிலச்சரிவு ஏற்படக்கூடிய இடங்களில் மக்களை எச்சரிக்க முடியும்.

● கே.வி.ராமன், சென்னை-73

? சச்சின் டெண்டுல்கரின் இருபது வருட கிரிக்கெட் சாதனை குறித்து?

! கிரிக்கெட் உலகம் கொண்டாடவேண்டிய ஒரு வரலாற்றுப் பதிவு. குறுகிய, பிரதேச நோக்கங்களை எதிர்த்து சச்சின் பேசியிருக்கும் வார்த்தைகளோ, தேசமே கொண்டாட வேண்டிய மனிதநேயப் பதிவு.

● மா.மோகன், கோவை ❑

★ போற்றத்தக்க மனிதநேயம்



? உள்நாட்டுச் சந்தையில் தேவை மிகுதியாக இருக்கும் போது, சர்க்கரையை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்துவிட்டு, அதே சர்க்கரையை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் இந்திய அரசின் மடத்தனத்துக்கு முடிவு எப்போது?

! ஏற்றுமதி செய்வது அரசு அல்ல; தனியார் துறை. அதற்கு வரிச்சலுகையும் பெறுகிறது. ஆனால், இங்கு பற்றாக்குறை ஏற்படும்போது, அரசு இறக்குமதி செய்ய வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகிறது. இரு விதங்களிலும் நஷ்டம் சராசரி இந்தியக் குடிமகனுக்கே. சுதந்திரப் பொருளாதாரம் நல்லதுதான். ஆனால், அரசு தீர்க்கதரிசனத்துடன், தேவைப்படும் போது லகானை இழுத்துப் பிடிக்க வேண்டும்.

● சி.கஸ்ரத், கும்மிடிப்பூண்டி

இலங்கை ராணுவத் தலைமை தளபதி, ராஜபக்ஷேவுக்கு உதவிக்கரம் நீட்ட இந்திய ராணுவத்தைத் தயார் நிலையில் வைத்ததாகக் கூறியிருக்கிறாரே...?

! அதிபர் பதவிக்கு ஆசைப்படும் தளபதி பொன்சேகாவின் ராஜினாமா கடிதம், ராஜபக்ஷ பேரிலான ஒரு குற்றப் பத்திரிகையாகவே அமைந்திருப்பதைப் பார்க்கிறபோது, அதன் கண்ணியமும் நம்பகத்தன்மையும் அடிபட்டுப் போகின்றன. இலங்கை அதிபர், தமிழர்கள் விஷயத்தில் தூயவர் இல்லைதான்; அதே சமயம், பொன்சேகாவின் கடிதத்துக்குப் பின் அமைந்துள்ள நோக்கமும் தூய்மையானதாகத் தோன்றவில்லை. ●

❑ ரூ.150/- பரிசு பெறுபவர் :

மா.மோகன், கோவை

★ ரூ.75/- பரிசு பெறுபவர் :

பி.செந்தில்வேலன், அறந்தாங்கி

"தமிழ்நாட்டில் ஓடும் நதிகளின் அழிவைத் தடுக்க வேண்டுமென்றால் அதற்கான மாபெரும் இயக்கம்தான் உடனடி தேவை'' என்கிறார் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு துணைச் செயலாளர் சி.மகேந்திரன். ''தமிழகம் ஒரு தனித்துவம் கொண்ட மாநிலம் பண்பாட்டுத் தொன்மையுடன் கூடிய, சமவெளிகள் நிறைந்த மண். வரலாற்றின் தொடக்க காலத்திலேயே உழவுத் தொழிலை வளர்த்தெடுத்த சமவெளிகள் இவை. நாகரிகக் கட்டுமானம் இங்கு அமைய அடித்தளம் அமைத்துக் கொடுத்தவை சமவெளிகள்தான். ஆனால், சுதந்திரத்துக்குப் பின்தான் இந்த அவலம். தாமிரபரணியைத் தவிர வேறெந்த நதிகளின் பிறப்பிடங்களும் தமிழகத்தில் அமையவில்லை. வறட்சிக் காலங்களில் அணையைத் திறந்துவிட மறுக்கும் பக்கத்து மாநிலங்கள் வெள்ளக் காலங்களில் அணையைத் திறந்துவிட்டு தமிழகத்தை நீரில் மூழ்க வைக்கின்றன. இது என்ன நியாயம்? நதி பிறக்கும் நாட்டிலுள்ளவனுக்கு உள்ள அதே உரிமை நதியின் கடைக்கோடியில் உள்ளவனுக்கும் உண்டு.

மத்திய அரசும், அண்டை மாநிலங்களும் நம்மை வஞ்சித்துவிட்டன என்றால் தமிழக ஆட்சியாளர்களின் இயலாமையும் நம்மை வேதனையில் ஆழ்த்துகிறது. காலம் காலமாக நமது ஆறுகள் பெற்று வந்த தண்ணீர் மறுக்கப்படுகிறது. வெள்ளக் காலத்தில் தண்ணீரைப் பயன்படுத்தத் திட்டங்கள் இல்லை. வளர்ச்சி என்ற பெயரில் தேவையற்ற இடங்களில் அணைகள்; விஷமாகக் கலக்கும் தொழிற்சாலை நச்சுகள், வோட்டுக்களைக் குறிவைக்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் எல்லாம் ஆறுகளுக்கு எதிராகவே அமைந்தன. நதிகளின் அழிவுக்கு அரசாங்கத்தில் புரையோடிப் போன லஞ்சமும் ஊழலும் மற்றொரு காரணம். இன்று ஆறுகளுக்கு நிகழ்ந்துள்ள துரோகங்களில் முதன்மையானது மணற் கொள்ளை. மண்ணுக்கும், மனிதனுக்கும் உயிர்நாடியாக அமைந்துவிட்ட மணல், கொள்ளை போகிறது. இதில் தொடர்பில்லாத அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் மிக மிகக் குறைவு. முல்லைப்

மரணப்

பெரியாறு பிரச்னையில் பகலில் போராட்டம். இரவு வேளையில் அரசு ஆதரவோடு கேரளாவுக்கு மணல் கடத்தல். அந்த மணல் கொள்ளை பணம்தான் அரசியலில் நன்கொடையாக வந்து சேருகிறது.

அடுத்த கொடுமை, நதி நீர்ப் பாதையைச் சாக்கடையாக மாற்றும் நகர்ப்புற நாகரிகம். மரணப் படுக்கையில் இருக்கும் நதிகளுக்கு, சிகிச்சை செய்து நடமாட வைக்க வேண்டும். தொழில் புரட்சிக்குப் பிறகு பாழான தேம்ஸ் நதிக்கு ஆங்கிலேயர்கள் மறுமலர்ச்சி கொடுக்க முடிந்திருப்பதைப் பார்க்கும்போது, 'நாம் ஏன் செய்ய முடியாது?' என்ற கேள்வி எழவில்லையா?'' என்கிறார் மகேந்திரன்.

> **"முல்லைப் பெரியாறு பிரச்னையில் பகலில் போராட்டம். இரவு வேளையில் அரசு ஆதரவோடு கேரளாவுக்கு மணல் கடத்தல்."**

"நமது முன்னோர்களுக்கு இருந்த பொறுப்

தண்ணீர் துயரம்

பரு(க்)கை!

புணர்வு நமக்குக் கொஞ்சம்கூட இல்லை'' என்னும் 'ஓசை' சுற்றுச்சூழல் அமைப்பின் தலைவர் காளிதாஸ், ''குறிஞ்சி (மலை) நிலத்தில் அவர்கள் எந்த வளர்ச்சிப் பணியையும் வைத்துக் கொண்டதில்லை. ஆங்கிலேயர்கள்தான் ஆறுகள் உருவாகும் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் காடுகளை அழித்து காப்பி, தேயிலைத் தோட்டங்களை அமைத்தார்கள். ஒரு நதியை மூன்று தளங்களில் புரிந்துகொள்ள வேண்டும். உருவாகும் இடம்; நடக்கும் பாதை; கலக்கும் இடம். அதன் உயிர்நிலை உருவாகும் இடம். அந்த இடம் மலைகளிலுள்ள காடுகள். காடுகள் மழைநீரைத் தேக்கி வைத்து, ஊற்றுகளாக மாற்றி, அவற்றை ஓடைகளாக இணைக்கின்றன. பின்னர் அவை ஆறுகளில் கலக்கின்றன; அல்லது ஆறாக உருவாகின்றன. கடந்த நாற்பது வருடங்களில் நீலகிரி கூடலூர் மலைப் பகுதியிலுள்ள, கூடலூர் சுற்றுவட்டாரத்தில் 3,000 ஓடைகள் அழிந்துவிட்டன. அப்புறம் அங்கிருந்து எப்படி மோயாறுக்கும் பவானிக்கும் தண்ணீர் வரும்? மழைக் காலத்தில் மட்டும் ஓடினால் அது ஆறு அல்ல; வடிகால்!

* 'ஓசை' காளிதாஸ்



* சி.மகேந்திரன்



நொய்யல் ஜீவநதியல்ல; மழைக் காலத்தில் மட்டும்தான் தண்ணீர். ஆனால், இன்று கோவை நகரக் கழிவு நீரும், திருப்பூர் சாயப்பட்டறைக் கழிவும் நொய்யலை அழித்தே விட்டன. நமது முன்னோர்கள் 1,000 ஆண்டுகளுக்கு முன்னரே நொய்யலை ஒட்டி 36 குளங்களை வெட்டி இணைத்து வைத்திருந்தார்கள். இப்போது நொய்யலும் காணாமல் போய், குளங்களும் வற்றிப் போயின. அப்புறம் வேளாண்மை?

காவிரி ஆற்றில் பரிசல் அளவுக்கு 'பரிசல் ஆமைகள்' நிறைய இருக்குமாம். இப்போது எங்கே? லண்டன் தேம்ஸ் நதி கழிவானபோது, 'நன்னீர் சால்மன்' என்ற அபூர்வ மீன் இனம் அழிந்து போயிற்று. மீண்டும் தேம்ஸ் நதி புத்துணர்வு பெற்று பொலிவுடன் வலம் வந்தபோது நன்னீர் சால்மன் மறுபடி தென்பட்டதாம். நம்முடைய வறண்ட காவிரியும், கரை தளும்ப அகண்ட காவிரியாகி அதில் பரிசல் ஆமைகளை மீண்டும் பார்ப்போமா?'' என்று ஏக்கத்துடன் கேட்கிறார் காளிதாஸ்.

தொகுப்பு: ஸ்ரீநி

ஒரு நாளைக்குத் தோராயமாக எவ்வளவு தண்ணீர் செலவழிப்பீங்க? இந்தக் கேள்வியை எதிர்ப்பட்டவர்களிடமெல்லாம் கேட்டோம்...



முருகன் (டீக் கடையில் வேலை பார்ப்பவர்): "ஒரு நாளைக்கு நூறு ரூபாய்க்குத் தண்ணி வாங்குவோம். ஏன்னா, நல்ல தண்ணில டீ தயாரிச்சாதான் சுவையா இருக்கும். அதுவும் இல்லாம நல்ல தண்ணிலதான் தம்ளர்களைக் கழுவுவோம். தினம் எப்படியாவது 1,000 லிட்டர் தண்ணியாவது செலவாயிடும். டீதானே அதில எந்தத் தண்ணியைக் கலந்தா என்னன்னு அலட்சியம் காட்டினோம்னா, எங்க வியாபாரம் முடங்கிடும்."

இப்படிக்கு



பரத்குமார்: (ரயில் நிலையத்தில் வாட்டர் கூலரில் தண்ணீர் குடித்துக் கொண்டிருந்த சிறுவன்): "வேளச்சேரி ரயில் நிலையத்துல வாட்டர் கூலர் வெச்சிருக்கிறா மாதிரி, எல்லா ரயில் நிலையங்களிலும் இருந்தா நல்லா இருக்கும். இந்தக் கூலர்லேருந்து ஒரு மணி நேரத்துக்குப் பதினைந்து பேராவது தண்ணீர் குடிக்கிறாங்க. பஸ் ஸ்டாப்லேயும் இதே மாதிரி வாட்டர் கூலர் வைக்கணும். அப்பத்தான் வெயில் காலத்துல வெப்பத்தோட தாக்கம் தெரியாம மக்கள் சந்தோஷமா வெளில போய்ட்டு வர முடியும்."


செல்வம் (வீடுகளுக்கு தண்ணீர் கேன் போடுபவர்): "ஒரு நாளைக்கு 25 வீடுகளுக்கும், 30 கடைகளுக்கும் தண்ணி கேன் கொடுக்கறேன். வெயில் காலம் வந்திட்டா, ஒவ்வொரு கடையிலேயும் 30லிருந்து 45 கேன்கள் தினம் வாங்கிப்பாங்க. நம்ம மக்கள் தண்ணீர் குடிப்பதே வெயில் காலத்துலே மட்டும்தாங்க. மத்த நாட்கள்ல அவ்வளவா யாரும் குடிக்கறதில்லை."



வாட்டர்!

பாமா (பெட்டிக் கடை வைத்திருப்பவர்): ''ஒரு நாளைக்கு நம்ம கடைல தண்ணி பாட்டில் வாங்கிக்கிட்டுப் போறவங்க 20 பேர் இருப்பாங்க. மழை பெய்யற சமயத்துல இது குறைஞ்சிடும். நல்ல வெயில் சமயத்துல ஒரு நாளைக்கு 60 பாட்டில்கள் தண்ணி விக்கும்! வெளியூர் போறவங்க கையில கொண்டு போக இந்த மாதிரி பாட்டில் தண்ணி (மினரல் வாட்டர்)தான் வாங்கிட்டுப் போறாங்க.''






தங்கவேலு (தெருவில் தண்ணீர் பிடித்துக் கொண்டிருப்பவர்): ''ஒரு நாளைக்குப் பத்துகுடம் தண்ணி பம்ப்ல அடிச்சுப் பிடிப்போம். இந்தத் தெருவுல 30 வீடுகள் இருக்கு. ஆளுக்குப் பத்து குடம்னு கணக்குப் பண்ணா, 300 குடம் தண்ணி. வெயில் காலத்துல தான் தண்ணிக்கு ரொம்ப திண்டாட்டம் ஆயிடும். நம்ம வீட்லேயும் தண்ணி இருக்காது. வெளில வந்தா இங்கேயும் தண்ணி வராது. நிறைய இடங்கள்ல ராத்திரி வேளைல தண்ணி புடிச்சிப்பாங்க.''

– என்.எஸ்.கே.

துணை முதல்வரின்





சென்னை நகர மக்களுக்கு இது இனிப்பான செய்தி. வருகிற ஜனவரி மாதம் முதல் சுத்திகரிக்கப்பட்ட கடல்நீர், குடிநீராக அவர்களுக்கு வழங்கப்பட இருக்கிறது. ஆம்! இந்தியாவிலேயே மிக அதிகபட்சத் திறனுடன் கட்டி முடிக்கப் பட்ட முதல் கடல்நீர் சுத்திகரிப்பு நிலை யம் மீஞ்சூரில் செயல்படுவதற்கான எல்லா ஏற்பாடுகளும் ஃபாஸ்ட் டிராக்கில் நடக் கின்றன. ஏற்கெனவே ஒன்பது மாதம் தாமதம் ஆகிவிட்டபடியால் அதிகாரிகளை (அன்புடன்) விரட்டிக் கொண்டிருக்கிறார் துணை முதல்வர் ஸ்டாலின். தலைநகரில் இரண்டு கடல்நீர் சுத்திகரிப்பு நிலையங் களை அமைப்பதை தமது முக்கிய அஜெண்டாவாக வைத்திருக்கிறார். அதில் ஒன்றுதான் ஜனவரி மாதம் முதல் செயல் படப் போகிறது.

சென்னை நகர குடிநீர்த் தேவைகளை ஈடுகட்ட, ஏராளமாய்ச் செலவு செய்து கடல்நீரைத்தான் குடிநீராக மாற்ற வேண்டுமா? இப்போது குடி தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்து கொண்டிருக் கும் ஏரிகளின் கொள்ளளவை உயர்த்த லாமே! அல்லது புதிய நீர் ஆதாரங்களை உருவாக்கலாமே. தவிர சுற்றுச்சூழல் பிரச் னைகள் எழாதா? இதுபோன்ற பல கேள்வி கள் எழுப்பப்படுகின்றன. இவற்றுக்கான பதில்களைத் தேடும்முன் குடிநீர் நிலவரத் தைக் கொஞ்சம் தெரிந்து கொள்வோம்.

சென்னை நகரிலுள்ள சுமார் 60 லட்சம் மக்களின் தினசரி தேவை 65 கோடி லிட்டர். கடந்த முப்பது வருடங்களில் அந்தத் தேவை மூன்று மடங்கு அதிகரித் திருக்கிறது. ஆனால், அதற்கேற்றபடி புதிய நீர் ஆதாரங்கள் உருவாக்கப்படவில்லை. பூண்டி, புழலேரி, சோழவரம் என்ற வரிசையில் செம்பரம்பாக்கமும் சேர்ந்து கொண்டது. அவ்வளவுதான். ஆந்திராவி லிருந்து வருடத்துக்கு 12 டி.எம்.சி.யாவது கிருஷ்ணா நீர் நமக்கு வரவேண்டும். ஆனால் எந்த வருடமும் இந்த உயர்ந்த பட்ச அளவுக்கு கிருஷ்ணா வந்ததில்லை. எனவே வடகிழக்குப் பருவமழை பொய்க் கும்போது நீர்நிலைகள் வற்றிப்போக, திண்டாட்டம் தொடங்குகிறது. அப்போது சென்னையை ஒட்டியுள்ள ஆரணியாறு, கொசஸ்தலையாற்றுப் படுகைகளில் ஆழ்

முதன்மைத் திட்டம்!

கை கொடுக்கும் கடல்!



* திட்டத்தைப் பார்வையிடும் ஸ்டாலின்

குழாய் போடப்பட்டு ராட்சத மோட்டார்கள் கொண்டு தண்ணீர் உறிஞ்சப்படுகிறது. இதன் காரணமாக நிலத்தடி நீர்மட்டம் 40 சதவிகிதம் இறங்கிவிட்டது. சென்னை நகரில் கிட்டத்தட்ட 99 சதவிகித வீடுகளுக்குக் குடிநீர் இணைப்பு இருக்கிறது. 2930 கிலோ மீட்டர் அளவுக்கு குழாய்கள் போடப்பட்டிருக்கின்றன. பஞ்ச காலத்தில் லாரிகளைப் பயன்படுத்தும்போது சென்னை குடிநீர்வாரியத்தின் செலவு எகிறுகிறது. இந்தச் சூழலில்தான் நிலைமையை ஓரளவாவது சரிசெய்ய வீராணம் தண்ணீரைச் சென்னைக்குக் கொண்டு வந்தார் ஜெ. இத்திட்டத்தைப் பாராட்டத்தான் வேண்டும். இருந்தும் தேவைக்கும் சப்ளைக்கும் இடைவெளி இருந்து கொண்டே இருந்தது. கடல்நீரைக் குடிநீராக்கும் முயற்சியில் இறங்குவது புத்திசாலித்தனம் என்று நிபுணர்கள் சொல்லவே, 2006ல் பதவிக்கு வந்த தி.மு.க. அரசு அந்த வகையில் நடவடிக்கை எடுக்கத் தொடங்கியது.

சாலைகள் மற்றும் வேறு கட்டுமானங்களில் சிறந்து விளங்கும் ஐ.வி. ஆர்.சி.எல். என்ற நிறுவனமும் கடல்நீரைக் குடிநீராக்கும் தொழில் நுட்பத்தில் தேர்ந்த ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த பெஃபிசா என்ற நிறுவனமும் இணைந்து சென்னை கடல்நீர் சுத்திகரிப்பு நிறுவனம் என்ற நிறுவனத்தைத் தொடங்கின. அந்த நிறுவனம்தான் மீஞ்சூர் சுத்திகரிப்பு நிலையத்தைக் கட்டி முடித்திருக்கிறது. ஆர்.ஓ (Reverse Osmosis) என்ற 'மறு சவ்வூடு பரவுதல்' முறை மூலம் தினசரி பத்து கோடி லிட்டரை இந்த நிறுவனம் சென்னைக்கு வழங்கப் போகிறது. (ஸாரி... விற்கப் போகிறது!) லிட்டருக்கு ஐந்து பைசாவுக்குக் குறைவாகத்தான் விலை நிர்ணயம் செய்யப்போகிறார்கள். 700 கோடி செலவில் அமைந்த இந்தத் தொழிற்சாலைக்கு மத்திய அரசின் மூலம் உலக வங்கியின் கடனுதவியும் உண்டு. இங்கு



பிரச்னை கடல்நீர் சுத்திகரிப்பு நிலையங்களைப் பராமரிப்பது. உப்புத் தன்மை மிகுந்த நீர் கையாளப்படுவதால் மிக விரைவில் இயந்திரங்கள் பழுதுபட்டுப் போகும் என்கிறார்கள். ஆனால், ''இடைவிடாமல் பராமரிப்பு செய்தால் ஒரு பிரச்னையுமில்லை'' என்கிறது அந்த நிறுவனம்.

சென்னையை ஒட்டியுள்ள கடல் பகுதி எப்போதுமே கொஞ்சம் ஆவேசமாக இருப்பதால், கடல்நீரை எடுக்கும்

''சென்னைக்குப் பக்கத்திலுள்ள ஆறுகளில் ஆழ்குழாய் போட்டு தண்ணீர் எடுத்ததில், நிலத்தடி நீர் 40 சதவிகிதம் கீழிறங்கி விட்டது!''

உற்பத்தி செய்யப்படும் குடிநீர், உலக சுகாதார நிறுவனம் குறிப்பிட்டுள்ள தரத்தில் இருக்குமாம்.

தினசரி கடல் நீரில் இருந்து பத்து கோடி லிட்டர் குடிநீர் தயாரிக்கும்போது அதில் வெளிப்படும் கழிவு மீண்டும் கடலிலேயே செலுத்தப்படும். இதில்தான் பிரச்னை என்கிறார்கள். குடிநீரைப் பிரித்து எடுத்தபின் உள்ள இந்த அடர்த்தியான உப்புக் கழிவு மீண்டும் பெருமளவில் கடலில் ஓர் இடத்தில் கொட்டப்படும் போது அப்பகுதியை தீவிர உப்புத் தன்மையுள்ளதாக மாற்றிவிடுமாம். மீன்களும், கடல் வாழ் உயிரினங்களும் வாழ முடியாது என்கிறார்கள்.

''இது கற்பனையாகக் கூறப்படும் குற்றச்சாட்டு'' என்கிறது சுத்திகரிப்பு நிறுவனம். ''கடலில் கொட்டப்படும் கழிவு, மிக விரைவில் நீர்த்துப் போய் கடலோடு கடலாகக் கரைந்து விடும். கடல்வாழ் உயிரினங்களுக்கு எந்த ஆபத்துமில்லை'' என்கிறது.

உலகெங்கிலும் உள்ள மற்றொரு பாயிண்ட்டில் அடிக்கடி பழுது ஏற்படலாம் என்றும் சொல்கிறார்கள். ''எந்தப் பிரச்னையையும் சமாளிக்கும் விதத்தில் மிக லேட்டஸ்ட்டான தொழில் நுட்பம் எங்களுடையது'' என்கிறது நிறுவனம். தொடர்ந்து 25 வருடங்களுக்கு குடிநீர் விற்பது என்பது உடன்பாடு. தற்போதைக்கு ஐந்து பைசாவுக்கும் குறைவான விலைக்கு விற்றாலும், காலப் போக்கில் நிறுவனம் விலையை ஏற்றுவதைத் தவிர்க்க முடியாது.

சென்னையின் வடக்குப் பகுதியில் அமைக்கப்பட்டதுபோல தெற்கே மகாபலிபுரம் அருகில் உள்ள நெமிலியில் மற்றும் ஒரு சுத்திகரிப்பு நிலையம் வருகிறது. இதன் திறனும் பத்து கோடி லிட்டர். 2012ல் இந்த இரு சுத்திகரிப்பு நிலையங்களும் சென்னையின் மூன்றில் ஒரு பங்கு தேவையை ஈடுகட்டுமாம். மழை பொய்த்துப் போனால் கூட நிலத்தடி நீருடன் இதையும் வைத்து சமாளித்து விடலாமாம். பெஸ்ட் ஆஃப் லக்!

- ப்ரியன்




ஒரு 'ஷீட்' ஜுவல்லரி!

✉ தங்கம் விக்கிற விலையிலே பேப்பர் ஜுவல்லரி ஒரு 'ஷீட்'... ஸாரிங்க... ஒரு செட் வாங்க ஆசை வந்துடுச்சுங்க. - **பத்மஜா வாசுதேவன், சென்னை - 13,** ✉ தமது சொந்தங்களுக்கு வைத்தியம் போன்ற மற்றைய உதவிகள் செய்வதற்குத் தயங்கிய தலைவர்கள் வாழ்ந்த திருநாட்டில், மதுகோடா போன்ற பேராசை பிடித்த அரசியல்வாதிகளும் வாழ்வது சாபம்தான்! - **என்.பாலசுப்பிரமணியன், சென்னை-40,** ✉ மிஸ்களும் - மிஸஸ்களும், மட்டுமல்ல கல்கி லேடீஸ் ஸ்பெஷல், எல்லோருமே படிக்கும்விதமாய், சுவையாய் மிளிர்ந்தது. - **ரேவதிப்ரியன், ஈரோடு - 1,** ✉ லேடீஸ் ஸ்பெஷல் இதழில் அட்டைப் படத்தில் இருப்பவரின் கையில் வேறு எதை யாவது கொடுக்காமல், கரண்டியைக் கொடுத் துக் கவுத்திப்புட்டீகளே... - **எம்.மிக்கேல் ராஜ், சாத்தூர்,** ✉ நீதித் துறைக்கே சோதனை ஏற்பட்டுவிட்ட அபாயத்தைச் சுட்டிக்காட் டிய தலையங்கம், சரியான எச்சரிக்கை மணி! - **புலவர் எஸ்.கே.மூர்த்தி, கும்ப கோணம்-1,** ✉ பணிக்குச் செல்லும் பெண்களின் சிரமத்தைப் போக்க, லேடீஸ் ஸ்பெஷல் ட்ரெய்ன் விட்டுள்ள இரயில்வே துறையின் அமைச்சர் ஒரு பெண்மணி, தகவல் அளித் தவரும் பெண்மணி, பிரசுரம் செய்தவர், அச்சிட்டவர் எல்லோரும் பெண்மணிகள். அடாடா...! - **ஜே.வி.ஜே.கண்ணன், திருச்சி - 8,** ✉ மரியாதையோடு வைக்கப்பட்டிருந்த பா.ஜ.க.விலேயே அரசர் நீடிக்கவில்லை; கோஷ்டி அரசியலின் காங்கிரஸில் பத்தோடு பதினொன்றாக அவர் நீடிப்பார் என்பது சந்தேகமானதே.- **பி.தர்சினி, குடந்தை - 4,** ✉ கார்ட்டூன் மூலம், கலைஞருக்கு 'இலவசக் குடையளிப்பு' திட்டத்தைப் புகட்டிய தங்களுக்கு மழைப் பரிசு. - **சி.கஸ்ரத், கும்மிடிப்பூண்டி,** ✉ 'காதலின் ருசி'யை கோலங் களில் (கவிதையாய்) 'ரசி'த்து... மகிழ முடிந்தது.- **மயிலை கோபி, சென்னை- 83,** ✉ ராஜாஜி, உடனுக்குடன் பதில் கடிதம் எழுதும் செயலைப் படித்து வியந்தோம்.- **என்.காளிதாஸ், சிதம்பரம் - 2,** ✉ தாலியைப் பற்றிய தகவல்கள், சுவாரஸ்யமாகவும், சிந்தனைக்கு உரியதாகவும் இருந்தன. - **எஸ்.அக்கினி, மதுரை -3,** ✉ மாம்பலம் 'சூப்'(பர்) மாமி பற்றிய கட்டுரை குடிக்க... ஸாரி படிக்க சுவையாக இருந்தது. - **அயன்புரம் த.சத்தியநாராயணன், சென்னை - 38,** ✉ 'பெண் மனித இனத்தின் சரி பாதி.' இதை உணராமல் அவள்மீது வன்முறையை ஏவுவது என்ன நீதி? - **எல்.மோகன சுந்தரி, கிருஷ்ணகிரி - 1** ✉ 'லேடீஸ் ஸ்பெஷல்' வெளியிட்ட நீர், உடனடியாக 'ஜென்ட்ஸ் ஸ்பெஷல்' வெளியிடாவிட்டால், 'ஆண் பாவம்' உம்மைச் சும்மா விடாது! - **வி.என்.கதிர்வேல், வேலூர் - 6**

வட்டமேஜை

"துளியா...துளியா... சேமியுங்க!"




* டாக்டர் சேகர் ராகவன்

"ஒரு வீட்டுக்கு மாதத்துக்கு இவ்வளவுன்னு தண்ணீருக்கான கட்டணம் என்று வசூலிப்பதற்குப் பதிலாக மின் சாரம் போல அவரவர் உபயோகிக்கும் அளவுக்கு ஏற்ப கட்டணம் நிர்ணயம் செய்ய வேண்டும். அப்போதுதான் மக்களுக்குத் தண்ணீரைச் சிக்கனமாகச் செலவழிக்கும் பழக்கம் வரும்'' என்கிறார் டாக்டர் சேகர் ராகவன். ஆகாஷ் கங்கா அறக்கட்டளை என்ற அமைப்பினால் சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் மழை இல்லத்தின் இயக்குனர். சென்னையிலும் தமிழகத்தின் மற்ற முக்கிய நகரங்களிலும், மழை நீர் சேமிப்பின் அவசியத்தைப் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதே மழை இல்லத்தின் நோக்கம்...

டாக்டர் சேகர் ராகவனைச் சந்தித்தபோது...

''சில ஆண்டுகளுக்கு முன்னால் சென்னை மாநகரத்தில் கடுமையான தண்ணீர்ப் பஞ்சம் வந்தது. மக்கள் தண்ணீரை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துகொண்டார்கள். ஆனால், அதன் பிறகு நிலைமை ஓரளவு சீரடைந்துவிட்டதால், வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறிவிட்டது.



மழை நீர் சேகரிப்புதான் தண்ணீர் பற்றாக்குறையைப் போக்க ஒரே வழி. ஆண்டுக்கு அதிகபட்சமாக 60 நாட்களே மழைக்காலம். அந்த மழையும் சுமார் 300 மணி நேரத்தில் கொட்டித் தீர்த்து விடுகிறது. இப்படி 300 மணி நேரத்தில் பெய்யும் மழையை 365 நாட்களுக்குப் பயன்படுத்த வேண்டும் என்றால், மழை நீரைப் புத்திசாலித்தனமாகச் சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டாமா?

வீட்டைச் சுற்றி சிமெண்ட் தரை அமைத்து, ஒரு துளி மழையும் பூமிக்குள் போகவிடாமல் தடுத்துவிடுகிறார்கள். இப்படிச் செய்கிறவர்கள் வீட்டின் மேற்தளத்திலும், வீட்டைச் சுற்றிப் போட்ட சிமெண்ட் தரையிலும் சரி மழை நீர் சேகரிப்பு ஏற்பாட்டினைச் செய்து

குடி நீரல்ல; கானல் நீர்!

'பாதுகாக்கப்பட்ட குடிநீர்' இன்றைக்கும் பல உலக நாடுகளில் கானல் நீராகவே இருந்து வருகிறது. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி இல்லாத காரணத்தால் தண்ணீர் சம்பந்தமான நோய்களின் தாக்குதலுக்குள்ளாகி தினமும் ஐந்து வயதுக்குட்பட்ட பத்தாயிரம் குழந்தைகள் மரணமடைவதாக ஒரு புள்ளி விவரம் தெரிவிக்கிறது!

- சி.எம்.

தூறல் கவிதை

ஒழுகும் கூரை வீடு
மழை நீர் சேகரிக்க
இருக்கவே இருக்கு
கஞ்சிக் கலயம்

- கதிர்பாரதி



கொண்டு, சிமெண்ட் தரை சௌகரியத்தையும் அனுபவிக்கலாம்; மழை நீர் சேகரிப்பாலும் பயன் பெறலாம்.

சமீபகாலமாக வீடுகளிலும், பூங்காக்களிலும், பிளாட்ஃபாரங்களிலும் சிமெண்ட் தரைக்குப் பதிலாக சிமெண்ட் டைல்ஸ் பதிப்பது அதிகரித்து வருகிறது. நாளடைவில் இந்த டைல்ஸ்களுக்கு இடையில் உள்ள இடைவெளியில் மண் அடைத்துக் கொண்டு மழை நீர் பூமிக்குள் செல்வது தடைப்பட்டு விடுகிறது. மழை நீர் சேகரிப்பு என்ற கோணத்தில் பார்த்தால் சிமெண்ட் தரைக்கும், சிமெண்ட் டைல்ஸ் தரைக்கும் பெரிய வித்தியாசமில்லை'' என்று சொல்லும் டாக்டர் சேகர், நீரைச் சேமிக்க வழிகளையும் சொல்கிறார்.

நகர்ப் புறங்களில் எல்லா வீடுகளிலும், அடுக்குமாடிக் குடியிருப்புகளிலும், கழிப்பறைகளில் ஃப்ளஷ் டாங்க் வந்துவிட்டது. இதனால் ஒவ்வொருமுறை டாய்லெட்டைப் பயன்படுத்துகிறபோதும், ஆறு லிட்டர் தண்ணீர் பயனாகிறது. சிறுநீர் கழித்த பிறகு, ஃப்ளஷ் செய்யாமல், பக்கெட்டில் பிடித்து அளவோடு தண்ணீர் ஊற்றும் பழக்கம் வர வேண்டும்.

அதேபோல வீடுகளில் தண்ணீரை வீணாக்கும் மற்ற இடங்கள் குளியலறை மற்றும் வாஷ் பேசின். பல் தேய்க்க அல்லது ஷேவிங் செய்ய ஆரம்பிக்கும்போது குழாயைத் திறந்தால், முடிக்கும் வரை குழாயை மூடாமல் தண்ணீரை வீணாக்குவது இன்று சகஜமாகிவிட்டது. இதற்குத் தடா போடப் பழக வேண்டும்.

துணி துவைக்கும் தண்ணீரை, குளிக்கும் தண்ணீரை மறு சுழற்சி முறையில் மீண்டும் கழிப்பறையில் பயன்படுத்தலாம்.

வீட்டைப் போலவே விவசாயத்திலும் தண்ணீர் சிக்கனம் அவசியம். எனவே சொட்டு நீர்ப்பாசனம் (டிரிப் இரிகேஷன்), தெளிப்பு நீர்ப்பாசனம் (ஸ்பிரிங்க்லர் இரிகேஷன்) போன்ற முறைகளைப் பயன்படுத்திப் பலன் அடையலாம்'' என்கிறார்.

- கௌதம் ராம்

பத்து சதவிகிதம் போதும்!

தமிழ்நாட்டின் மொத்தப் பரப்பளவு 30 ஆயிரம் ச.கி.மீ. ஆண்டுக்குச் சராசரியாகப் பெய்யும் மழையளவு 977 மி.மீ. ஆண்டில் கிடைக்கும் மொத்த மழையளவு சுமார் மூவாயிரம் கோடி கிலோ லிட்டர். தமிழ்நாட்டின் ஜனத்தொகை ஆறேகால் கோடி என்று வைத்துக்கொண்டால், ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 1300 லிட்டர் என்ற அளவுக்கு மழை நீர் கிடைக்கிறது. ஆக தமிழ்நாட்டில் பெய்யும் மழையில் வெறும் 10% மழை நீர் சேகரிப்பு செய்தாலே, ஒரு நபருக்கு ஒரு நாளுக்கு சுமார் 130 லிட்டர் தண்ணீர் கிடைக்கும்.


அத்தர் மணம்

பன்னிரண்டு வயதிலிருந்து ஸ்வாமி பாபாவைத் தரிசித்தும் ஸ்வாமியின் மகிமைகளை வாசித்தபடியும் யோசித்தபடியுமே வளர்ந்து வந்திருக்கிறேன். ஐம்பதாண்டுகளுக்கும் மேலாக சாயி பக்தராயிருக்கும் என் தந்தை தந்த அறிமுகமும், கல்லூரியில் என்னுடன் பணிபுரிந்த சாயித் தோழியரின் நட்பும், என் வாழ்வின் சோதனைகளிலிருந்து மீட்டு ஸ்வாமி எனக்குத் தந்த நல்லனுபவங்களும், ஸ்வாமி தெய்வம் என்ற சத்யமான உள்ளுணர்வை எனக்குள் ஏற்படுத்தியிருக்கின்றன. எது பொய் எது மெய் என்ற தெளிவு வளர்ந்து வலுப்பட்டு விடும்போது, இயல்பாகவே லௌகிக வாழ்வின் நாட்டம் குறைந்துதானே போகும்! ஸ்வாமி பாபாவை தெய்வமாய் வழிபடும் கோடானுகோடி பக்தர்களில் நானும் ஒரு பக்தை. ஒரு சில நல்லனுபவங்களை ஸ்வாமி எனக்கும் தந்திருக்கிறார்; தந்து வருகிறார்.

சமீபத்தில் என் இரண்டு பிள்ளைகளும் ஆஸ்திரேலியாவின் க்வீன்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தில் பட்டம் வாங்கிய போது பட்டமளிப்பு விழாவுக்காகப் போயிருந்தேன். அது ஸ்வாமியின் பிறந்த நாள் சமயம். இந்தியா மற்றும் இலங்கையைச் சேர்ந்த சாயி குடும்பங்கள் அங்கு அநேகம். அனைவரும் சேர்ந்து ஒரு பொது இடத்தில் சாயி பஜனுக்கு ஏற்பாடு செய்தோம். ஐம்பது பேரை அழைத்தோம். ஆனால், ஏதோ ஒரு காரணம் சொல்லி பலர் வர இயலவில்லை என்று சொன்னார்கள். தபலா வாசிக்க அழைத்த இளைஞனோ 'இன்னொரு பஜனுக்கு ஏற்கெனவே அழைத்திருக்கிறார்கள்' என்றான். இன்னும் சில தடங்கல்கள். ஸ்வாமியிடம் முறையிட்டேன். 'சென்னையில் எங்கும் போக முடிவதில்லை. சரி, ஏதோ வந்த இந்த நாட்டில் ஒரு பஜன் நடத்த நினைத்தால்... அதற்கும் குந்தகமா,' என்று நினைத்தபடி உறங்கிப் போனேன். விடிகாலையில் ஒரு கனவு. ஒரு வசதியான கம்பார்ட்மெண்ட்டில் தனியாகப் பயணம் செய்துகொண்டிருக்கிறேன். திடீரென்று எதிரில் ஸ்வாமி வருகிறார். அபயஹஸ்தம் காட்டுகிறார். 'பாத நமஸ்காரம்' எடுத்துக் கொள் என்கிறார். மகிழ்ச்சியோடு அப்படியே செய்கிறேன். இது நிஜமா ஸ்வாமி... நிஜமா ஸ்வாமி என்று திரும்பத் திரும்ப ஸ்வாமியிடம் கேட்கிறேன். 'இது நிஜம் நிஜம் சத்யம் சத்யம்' என்று ஸ்வாமி சொல்கிறார். அதன் பிறகு விழிப்பு வந்துவிட்டது. எல்லாம் தெளிவாயிருந்தது. ஸ்வாமி படங்களை வைத்து சாயித் தோழியரோடு அலங்காரம் செய்யத் தொடங்கினேன். வரவில்லை என்று சொன்னவர்களெல்லாம் இரண்டு மூன்று பேரை உடன் அழைத்துக்கொண்டு வந்து சேர்ந்தார்கள்! தபலா வாசிக்கும் இளைஞனும் வந்து சேர்ந்தான். அப்போதுதான் சென்னையிலிருந்து வந்த கிரி என்ற பக்தர், மிருதங்கத்தோடு வந்து உட்கார்ந்து விட்டார். ஏராளமான நைவேத்யங்கள். அறுபது பேருக்குமேல் பக்தர்கள். அற்புதமாகப் பாடப்பட்ட பத்தொன்பது பாடல்கள்...



- பொன்மணி



ஒரு சின்ன சொற்பொழிவு... என்று அன்றைய சாயிபஜன், ஸ்வாமிகள் ஆசீர்வாதத்தில் அதியற்புதமாக அமைந்துவிட்டது!

அன்று ஸ்வாமிக்குகந்த திருவாதிரை.. ஜென்ம நட்சத்திரம். பஜன் முடிந்து எல்லாரும் சென்றுவிட்டனர். பூஜையறையிலிருந்து அத்தர் வாசனை பரவியது. பஜன் ஹாலில் கமகமவென்று இன்னும் அடர்த்தியான வாசனை. வெளியில் தோட்டம் முழுவதும் அப்படியொரு வாசனை... ஐந்து மணி நேரத்துக்கு மேல் எல்லா இடங்களிலும் நிறைந்திருந்தது. அது, ஸ்வாமி அங்கே வந்திருக்கிறார் என்பதற்கான தெய்வீக அடையாளம்!

ஸ்வாமி சத்ய சாயிபாபா தெய்வம் என்பது பரமசத்யம். நம்மிடையே வாழும் அந்தச் சத்ய தெய்வத்தின் பேரருளை அனைவரும் அடைந்து ஆனந்தமுற வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

ஸ்வாமிக்கு வயது எண்பத்துநான்கு. உலகெங்குமுள்ள பக்த கோடிகளின் பிரதிநிதியாய், ஸ்வாமி பாபாவுக்குப் பல்லாண்டு பல்லாண்டு பாடி, ஸ்வாமியின் திருப்பாதங்களை வாழ்த்தி வணங்குகிறேன். அனைத்துப் பக்தர்களும் விரும்பிப்பாடும் ஸ்வாமிக்கான பஜனைப் பாடலைப் பாடி ஸ்வாமியின் பாதமலர் பணிகிறேன்.சத்ய தெய்வமே! புட்டபர்த்தி நாதனே! எங்கள் வாழ்வில் உந்தன் அன்பைத் தந்தருள்வாயே! ●

“ஒரு நாளைக்கு 24 மணி நேரம் என்பது பொது கணக்கு. ஆனால், 'இருபத்திரண்டு மணி நேரம்தான்' என்கிறது கேரளா ஆலப்புழா போட் ஹவுஸின் புதுக் கணக்கு. அந்த போட் ஹவுஸில் 22 மணி நேரத்தை திகட்டத் திகட்ட அனுபவிக்கக் கட்டணம் ரூ.3000-லிருந்து ரூ.10000 வரைதான். பாபிலோன் தொங்கும் தோட்டத்தை நாம் கேள்விதான் பட்டிருக்கிறோம். தண்ணீரில் 'மிதக்கும் சொர்க்கம்' போல இருக்கும் போட் ஹவுஸைப் பார்க்கும்போது இப்படித்தான் இருந்திருக்குமோ என்று தோன்றுகிறது. கேரள நடிகர் ஜெயராம் முதல் பிரபல இயக்குநர் ஃபாசில் வரை பலரும் போட் ஹவுஸை வாடகைக்கு விட்டுச் சம்பாதிக்கின்றனர்.

ஆலப்புழாவின் இன்னொரு பெயர், கிழக்கின் வெனிஸ். கேரளாவுக்கு வரும் வெளி நாட்டுப் பயணிகளுக்குத் குளிரக் குளிர விருந்தளிக்கும் நீர் சார்ந்த பகுதி இது. கொச்சினில் இருந்து வெறும் எண்பதே கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் ஆலப்புழா, படகுச் சவாரிக்கும் படகுப் போட்டிகளுக்கும் புகழ்பெற்றது.

படகுச் சவாரி செய்ய விரும்புபவர்களை அல்லப்பி கடற்கரை இருகரம் நீட்டி வரவேற்கிறது. தூய்மை, அழகு இரண்டுக்கும் பஞ்சமில்லாத பிராந்தியம் இது.

ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்டு மாதம் இரண்டாம் சனிக்கிழமை அன்று படகுப் போட்டிகள் நடைபெறும். வண்ண வண்ணப் படகுகள் வெவ்வேறு விதங்களில் அலங்கரிக்கப்பட்டு போட்டிக்கு அனுப்பப்படும். ஒரு படகைத் துடுப்பு போட நூறுபேர் களமிறங்குவார்கள். வேம்பநாடு ஏரியில் நடக்கும் அந்தப் படகுப் போட்டியைப் பார்ப்பதற்குக் கண்கோடி வேண்டும்!

- பவேஷ்வரன்









Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 09 -11 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 09 - 11* Registered as a Newspaper in Srilanka.

SRUSHTI

The Handicrafts Emporium

Presents

'SPIRITUAL COLLECTION 2009'

19th Nov to 30th Nov

10% Discount

Exhibition cum Sale of Exclusive Collection of Rudrasha and Auspicious things...





Special Attraction
Rudrasha Panthal

Other Spiritual Items: Rudhrasham 1 to 21 Face, Sidha Mala Set, Indra Mala Set, Salagramam, Narmada, Bhanam, Samaram, Mercury Idols, Spadiga Malas and Idols, Precious and semi Precious Malas and Idols, Geodes and Rock Crystals (For Vasthu and Healing), Crystal Pencil and Pendulam, Navarathiana Malas And Stones, Vellerukku Vinayagar, Pooja Shank and Valampuri Shanks, Sandal Wood Malas, Thulsi malas, Kamal Malas, Red sandal Malas, Agarbathies and Many more.

• Panja loga Statues • Brass Idols & Artifacts • Thanjavur Paintings • Wood Carvings & Panels • Rose Wood Carvings & Inlay Works • Handicrafts of All Kinds

Special Combination is Given for Doctors Lawyers, Business Magnets, and Politicians under Guruji's Advice.

All Major Cards Accepted... All are Welcome... | **... Open on Sunday also ...**

Tamil Nadu Handicrafts Artisans Welfare Association

Srushti Handicrafts Emporium, Sudarsan Building Ground Floor,
Opp. To Adyar Gate / Park Sheraton Hotel.
86, Chamiers Road, Chennai 600 018. INDIA Ph: 91 44-4206 0730.